**For circulation among the members of the Sozhia Velala Community only**

தொண்டைமண்டலம் சோழிய வேளாள மரபு

# வியாசர்பாடி விநாயக முதலியார் சித்திரச் சத்திர தரும பரிபாலனம்

வி. விநாயக முதலியார்

சாரிடீஸ்

**1851**௵ ஜுன் மீ **17**உயில் ஸ்தாபிக்கப்பட்டது

சென்னை :

அரோரா அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது

1925

**For circulation among the members of the Sozhia velala Community only**

RAS-41.

உ

கடவுள் துணை




# → சாரிடீஸ் ←

**1851௵ ஜூன்௴ 17௳யில் ஸ்தாபிக்கப்பட்டது**

தொண்டைமண்டலம் சோழிய வேளாள மரபு

# வியாசர்பாடி விநாயக முதலியார்

## சித்திரச் சத்திர

# தரும பரிபாலனம்

தொண்டைமண்டலம் சோழிய வேளாள மரபு தரும சங்கம்

*(இண்டியா கவர்ன்மெண்டு 1860௵ 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது)*

*சென்னை :*

அரோரா அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது

*குரோதன௵ கார்த்திகை௴]* 1925 *[இதன் விலை அணா* 2

# வியாசர்பாடி விநாயக முதலியார் சாரிடி
# மானேஜிங் கமிட்டி
## 1924 — 25

அக்கிராசனாதிபதி

ம-ா-ா-ஸ்ரீ, சே. முத்துசாமி முதலியார்

உதவி அக்கிராசனாதிபதி

,, க. வேலாயுத முதலியார்

காரியதரிசி

,, க. சோக்கலிங்க முதலியார்

பொக்கிஷதார்

,, க. துரைசாமி முதலியார்

கமிட்டி மெம்பர்கள்

,, பு. தங்கவேலு முதலியார்
,, வே. மாணிக்கவேலு முதலியார்
,, க. சின்னகண்ணு முதலியார்
,, சே. சுப்பிரமணிய முதலியார்
,, க. கணேச முதலியார்
,, வே. இரத்தினவேலு முதலியார்
,, க. கோவிந்தராஜ முதலியார்
,, வி. கெங்காதர முதலியார்

ஆடிட்டர்

,, க. கலியாணசுந்திர முதலியார்

# முகவுரை

1. வியாசர்பாடி விநாயக முதலியார், சித்திரச் சத்திர தரும பரிபாலனம் சரிவர நடத்த சோழிய வேளாள மரபினரது, மகா நாட்டு கூட்ட தீர்மானத்தின்படி செய்த 1918-ம் வருஷம், மதராஸ் ஐகோர்டு ஸி. எஸ். நெ. 97ல் சம்பந்தப்பட்ட ரிகார்டுகளை ஆங்கிலேய பாஷையில் இருப்பவைகளை தமிழில் மொழி பெயர்த்து மூலாதாரமாயுள்ள சாஸனங்கள் முதலானவைகளுடன் சோழிய வேளாள மரபினர் அறியும்பொருட்டு, இண்டியாக வர்ன்மெண்டின் 1860-ம் வருஷத்து 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்துள்ள, தொண்டைமண்டலம் சோழிய வேளாள மரபு தரும சங்கத்தின் வி. விநாயக முதலியார் சாரிடி கமிட்டியாரால் வெளியிடப்பட்டது.

2. இந்த தரும சீர்திருத்த விஷயத்தில், மிக உழைப்பு எடுத்துக்கொண்ட டிப்டி கலெக்டர் கரிக்கலவாக்கம் கந்தசாமி முதலியார், B.A., B.L., அவர்களின் குமாரர் ஸ்ரீமான், க. சுப்பராய முதலியார் அவர்களுக்கும், புதுவை பொன்னம்பல முதலியார் குமாரரும், சோழிய வேளாள மரபு சென்னப்பட்டணம் பெரியதனக்காரரான ஸ்ரீமான், பு. தங்கவேலு முதலியார் அவர்களுக்கும் வி. விநாயக முதலியார் சாரிடி கமிட்டியார் மிகவும் வந்தனமளிக்கிறார்கள்.

3. மேற்படி வி. விநாயக முதலியார் அவர்களின் இளைய சகோதரர், அப்பாசாமி முதலியார் குமாரரும் எட்டியபுரம் சமஸ்தான வித்துவானுமாகிய காலஞ்சென்ற திருமயிலை வி. சுந்தர முதலியார் அவர்களால் மேற்படி விநாயக முதலியார்பேரில் திரிசிரபுரம் மஹாவித்துவான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட வியாசைக்கோவை என்னும் பிரபந்தத்தின் முகப்பில் வெளியிடப்பட்ட ஷை வி. விநாயக முதலியார் சரித்திரச் சுருக்கத்திலிருந்து போதுமான வரையில் இதில் சேர்த்திருப்பதன்றி, இத்தரும பிரதிஷ்டை செய்துவைத்த வி. விநாயக முதலியார் உருவப்படத்தையும் இதில் சேர்த்திருக்கிறது.

உத்தரவின்படி,

23-9-1925 க. சோக்கலிங்க முதலியார்.

காரியதரிசி.

# அட்டவணை


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | வி. விநாயக முதலியார் எழுதிவைத்த தருமசாதனம் .... | 1 |
| 2. | தருமசத்திர பரிபாலன சிலாசாதனம் ... ... | 5 |
| 3. | வியாசர்பாடி விநாயக முதலியார் எழுதி ரிஜிஸ்டர் செய்த உயிலின் அசலுக்கு சரியான எக்ஸ்ட்ராக்ட் ... | 7 |
| 4. | டிரஸ்டிகள் வெ. இராஜரத்தின முதலியார், மயிலை சின்னப்பாவு முதலியார் இவர்களும், மேற்படி தரும சத்திரம் எக்சிகூட்டர் வி. சோமசுந்திர முதலியாரும், ஏற்பாடு செய்து எழுதிக்கொண்ட சாஸ்வத உடன்படிக்கை ... ... ... ... | 11 |
| 5. | நாட்டு பெரியதனக்காரருக்கு வி. விநாயக முதலியார் குமாரர், வி. கெங்காதர முதலியார், 1914ஞு ஜுன்மீ 1உயில் எழுதிய கடிதங்கள் ... ... | 13 |
| 6. | ஷை 1914ஞு டிசம்பர்மீ 25உயில் எழுதிய கடிதம் .... | 18 |
| 7. | ஷை 1915ஞு செப்டம்பர்மீ 5உயில் எழுதியகடிதம் ... | 19 |
| 8. | சோழிய வேளாள மரபு தரும சங்கத்தின் காரிய தரிசிக்கு மேற்படி வி. கெங்காதர முதலியார், 1915ஞு செப்டம்பர்மீ 6உ எழுதிய கடிதம் ... | 20 |
| 9. | வி. விநாயக முதலியார் குமாரர்கள், வி. கெங்காதர முதலியார் வி. ஞானசிகாமணி முதலியார் வி. சோம சுந்திர முதலியார் இவர்களை மகாநாட்டு கூட்டத்திற்கு வரும்படி நாட்டு பெரியதனக்காரர்கள் 27-6-1916ல் எழுதிய கடிதங்கள் ... ... | 23 |

| எண் | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| 10. | மகாநாட்டு கூட்டத்தின் 1-7-1916தேதிய சோமசுந்திர முதலியார், கெங்காதர முதலியார், ஞானசிகாமணி முதலியார் இவர்களுக்கு, நடவடிக்கையின் எக்ஸ்ட்ராக்ட் ... ... ... ... | 24 |
| 11. | வக்கீல் வி. சிவப்பிரகாச முதலியார் 1916௵ ஆகஸ்டு மாதம் 2 தேதியில் எழுதிய கடிதங்கள் ... | 26 |
| 12. | வி. சிவப்பிரகாச முதலியார் 1916௵ ஆகஸ்டுமீ 6 தேதியில் சோமசுந்திர முதலியார் கெங்காதர முதலியார் ஞானசிகாமணி முதலியார் இவர்களுக்கு எழுதிய கடிதங்கள் ... ... ... | 27 |
| 13. | செ. முத்துசாமி முதலியார், க. சொக்கலிங்க முதலியார் இவர்களுக்கு மேற்படி வி. கெங்காதர முதலியார் 1917௵ மார்ச்சுமீ 12 தேதியில் எழுதிய கடிதம் ... ... ... ... | 28 |
| 14. | வி. விநாயக முதலியார் மூத்த குமாரரும் உயிலுக்கு எக்சிகூட்டருமாகிய வி. சோமசுந்தர முதலியார், (லாண்டு ரிகார்டு தாசில்தார் முன்னிலையில்) 3-4-1917இல் கொடுத்த வாக்குமூலம் ... ... | 30 |
| 15. | ஜார்ஜ்டவுன் அண்ணுபிள்ளை வீதி நெ. 27 வீட்டிலிருக்கும் (வி. விநாயக முதலியார் குமாரர்) வி. ஞானசிகாமணி முதலியார் லாண்டு ரிகார்டு தாசில்தார் முன்னிலையில் 14-4-1917இல் கொடுத்த வாக்குமூலம் | 32 |
| 16. | மேற்படி வி. சோமசுந்திர முதலியார் (லாண்டு ரிகார்டு தாசில்தார் முன்னிலையில் 14-4-1917ல் கொடுத்த) வாக்குமூலம் ... ... ... ... | 34 |
| 17. | க. சொக்கலிங்க முதலியா', செ. முத்துசாமி முதலியார், இவர்களுக்கு மேற்படி வி. கெங்காதர முதலியார் 1918௵ ஜனவரிமீ 25௨ எழுதிய கடிதம் .. | 35 |

| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 18. | ஐகோர்ட்டு சூட் நெ. 97 ஆப் 1918ல் ப்ளெயிண்டு ... | 36 |
| 19. | 3-வது பிரதிவாதியின் எழுதிக்கொடுத்த ஸ்டேட்மெண்டு | 47 |
| 20. | 1-வது பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஸ்டேட்மெண்டு | 52 |
| 21. | இஷ்வஷு .. ... ... ... ... | 61 |
| 22. | ராஜினுமா ... ... ... ... | 63 |
| 23. | ஜட்ஜஸ் ஸம்மன்ஸ் ... ... . | 72 |
| 24. | ஜட்ஜஸ் ஸம்மனுக்கு ஆதாரமாக மனுதாரர்களால் அபிடெவிட்டு ... ... ... ... | 74 |
| 25. | 3-வது பிரதிவாதி வி ஞானசிகாமணி முதலியாருடைய கவுண்டர் அபிடெவிட்டு ... ... | 78 |
| 26. | வி. சோமசுந்திர முதலியாரின் கவுண்டர் அபிடெவிட் | 80 |
| 27. | க. சொக்கலிங்க முதலியார் அபிடெவிட்டு ... | 84 |
| 28. | வி. கெங்காதர முதலியார் அபிடெவிட்டு ... | 88 |
| 29. | சதா ஏகாம்பர முதலியார் அபிடெவிட்டு ... | 93 |
| 30. | மனுதார்களின் ரிப்ளை அபிடெவிட்டு ... ... | 95 |
| 31. | ஜட்ஜ்மெண்டு .. ... ... ... | 97 |
| 32. | ஆர்டர் தேதி 4-12-1918 ... ... ... | 99 |
| 33. | டிக்கிரி ... ... . ... | 101 |
| 34 | வி. எஸ். நெ. 97 ஆப் 1918ல் வாதிகளின் லிஸ்டு ஆப் டாக்குமெண்ட்ஸ் ... ... ... | i - iv |



திருமயிலாப்பூர் தென் மாடவீதியில் சித்திரச் சத்திர
தரும ஸ்தாபகர்

**வியாசர்பாடி - விநாயக முதலியார்**

"திருமயிலாப்பூரில்

ஸ்ரீ கபாலீஸ்வர சுவாமியார் தென்மாட வீதியில்

சித்திரச் சத்திரங்கட்டியிருக்கும்

ஸ்ரீமான், வியாசர்பாடி

# விநாயக முதலியார் அவர்கள்

சரித்திரச் சுருக்கம்

எம்மண்டலத்திலுஞ் சிறந்த வெண்ணறிய வளங்களுடன் பிரகாசிக்குஞ் சோழ மண்டலத்திலே, சோழிய வேளாளர் மரபிலே, சைவ சமயத்திலே, திருவிடையார் கோத்திரத்திலே யுதித்துச் சிவ பக்தியிற் சிறந்தோங்கி வாழ்ந்து வந்த அருச்சுன முதலியார் என்பவர், ஒருகாலத்தில், தனது சகோதரர்களாகிய நயனியப்ப முதலியார், பெருமாள் முதலியார் இவர்களுடன் சீவனார்த்தமாகத் தொண்டைமண்டலத்திலே திலகம்போல விளங்காநின்ற, சென்னை யம்பதிக்குச்சமீபத்தில் ஒருமைல் தூரத்திலுள்ள வியாசர்பாடி யென்னும் ஊரிலிருந்துகொண் டிருக்கையில், மற்றும் அச் சோழ தேசத்திலிருந்து வந்த அவர் மரபினராகிய, சோழிய வேளாளர் பலர் சென்னை, மயிலை, பொன்னேரி, திருவள்ளூர் தாலூகா முதலிய பற்பல விடங்களிற் குடியேறி மிராசுதாரர்களாயும், உத்தி யோகஸ்தர்களாயும் வாழ்ந்து வந்தனர். அருச்சுன முதலியார், தான் வியாசர்பாடியில் தனித்திருப்பது நலமல்லவெனக் கருதி, தனது சுற்றத்தினர் வாழும் திருமயிலாப்பூரினுக்குத் தனது சகோ தரர்களுடன் வந்து, தாச்சி அருணசல முதலியார் வீதியில் ஒரு சொந்தக் கிருகம் அமைத்துக்கொண்டு கட்டட வேலை மராமத் திலாகா உத்தியோகஞ் செய்து வந்தனர். இவ்வாறிருக்கும் நாளில், இவருக்கும் இவரது கற்புடைய மனைவியாராகிய நாகாத்தம்மா

ளுக்கும், இவர்கள் செய்த தவப்பயனாக ருத்ரோத்காரி வருஷம் அற்பிசி மாதம் 12ந் தேதி (1803ஹு அக்டோபர்மீ) குருவாரம் இரவு 7-மணிக்கு ஒரு சற்புத்திரன் பிறந்து, விநாயக முதலியார் என்றும் பிள்ளைத் திருநாமம் பெற்று நாளொருவண்ணம் மருமைப் பாராட்ட வளர்ந்து, சிறுவயதிற்றானே தமிழ் நன்கு பயின்று வருகையில், இப் புத்திரர் தனது பதினெட்டாம் வயதில் தந்தையையும், இருபத்திரண்டாம் வயதில் தாயையும் இழந்தவராயினர்.

பின்னர், விநாயக முதலியார் தனது குடும்பத்திற்குத் தலைவராக விருந்து, தனது தம்பிமார்களாகிய சுப்பராய முதலியார், அப்பாசாமி முதலியார், சபாபதி முதலியாரையும், தங்கைமார்களாகிய வள்ளி அம்மாள், கற்பகம்மாளையும் காக்கவேண்டிய கடமை நேர்ந்தமையின் அக்காலத்தில், திருவல்லிக்கேணியில் பிரபல வர்த்தகராக விருந்த தேசிங்கு என்பவரிடத்தி லுத்தியோகமாகவமர்ந்து அவர் உத்தரவின்படி தினந்தோறும் நவாப் அரண்மனைக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்தனுப்புவதிலும், பொருள் வசூல் செய்வதிலும் அதிக சாமர்த்தியமாக வேலை நடாத்தி வருவாராகித் துலுக்கு பாஷையில் சாதுரியமாகப் பேசவும் வல்லவராயினர். அக்காலத்தில், நவாப்புக்குரிய பல பெரிய கட்டட வேலைகளையும், மராமத்து வேலைகளையும், செய்துவரும் அதிகாரியாகிய கான்ஸ்துரை யென்பவர் நாளடைவில் இவ் விநாயக முதலியாரின் சாமர்த்தியத்தினைக் கண்டு, சந்தோஷமடைந்து, அவரைத் தன்னிடத்திலேயே உத்தியோகமாக விருக்கும்படி செய்துகொண்டனர். முதலியார் துரையினுடைய வேலைகளைச் சாக்கிரதையாகப் பார்த்து வந்ததுடன், வேலைகளை யுக்தியாயும், அருமையாயும் செய்து முடிக்குந் திறத்தினையும், எஸ்டிமேட் போடுவதிலும், பிளான் அழகா யெழுதுவதிலும் மிக்க வல்லவராகி யிருக்குந் தன்மையினைத் துரையவர்கள் கண்டு களிப்புற்றுத் தன்னுடனே பாகஸ்தராக வேலையிலிருந்து பார்த்து வரும்படி ஏற்படுத்திக்கொண்டு, அவருக்கு வேண்டிய திரவிய வொத்தாசையினையுந் தானே செய்து, தனக்கு வரும் இலாபத்தில் மூன்றிலொருபாகங் கொடுத்துவந்தனர். சில நாளைக்குள்ளாக முதலியாரைத் தனியே வேலை பார்த்துவரும்படி சில

பெரிய கட்டடங்களின் மராமத்து வேலைகளை ஒப்புவித்தனர். அவரும் அப்படியே செய்து முடிப்பித்துக் கீர்த்திபெற்று வாழு கையில், துரை இறந்துவிடலும், நவாப் வீட்டுத் திவான் கஜான்வலி இவர்கள், முதலியாரவர்களின் சாமர்த்தியங்களை யறிந்தவர்களாத லால் அவரை யழைப்பித்துத் துரையவர்கள் பார்த்துவந்த வேலை யனைத்தையும் அவர் வசம் ஒப்புவித்தனர். அதுமுதல், முதலியா ரவர்கள் தனது சகோதரர்களை உதவியாக வைத்துக்கொண்டு பற்பல பெரிய அருமையான கட்டடங்களை எல்லாம் யாவருங் கண்டு ஆச்சரியப் படும்படியாகக் கட்டி முடித்து வருதற்குத் தக்க வாறு நவாப்பினுல் பரிசாகத் தங்க தோடா, பாஜிபந்து, சால்வை முதலியதும் பெற்று வந்ததுந் தவிர, விசேட திரவிய சகாயமும் கொண்டு பிரபல கீர்த்தியோடிருந்து நவாப்பவர்களால், தானும் தனக்குப் பின்னுல் தனது சமுசாரமும் உபகாரச் சம்பளம் பெற்று வர வாய்ந்தனர்.

* * * *

இவ்வியாசர்பாடி விநாயக முதலியாரவர்கள் தமிழினருமையை நன்கு தேர்ந்து, வித்வான்கட்கு ஏராளமாய்த் திரவியங் கொடுத்து வருவதில் பின்னடையாது நின்ற ஒரு வள்ளலாய் விளங்கி யிருந் தமையால், சென்னை முதல் கன்னியா குமரி யீறாகத் தமிழ் நாட்டிலுள்ள பல வித்துவ சிகாமணிகள் மேற்படி முதலியாரவர் கள் மீதும், அவரது சித்திரச் சத்திர விபவத்தினைப்பற்றியும் பாடியுள்ள அரிய பிரபந்தங்கள் அநேகம். இவர்காலத்திலே, இவ ரால் சன்மானம் பெறாத வித்வான்கள் மிக அரிது! அரிது! தான் சம்பாதித்த திரவியங்களனைத்தையும் பல பிரபந்தங்களைக் கேட்டு வித்துவான்களுக்கே கொடுத்துவந்தனர். இவருக்குப் பின், இந் நாட்டிலே கவிவாணரிடம் அன்பு பாராட்டி ஆதரிப்பவர்களைக் காண்பது அபூர்வமே, தமிழ் வித்துவான்கட்கு இவர் ஒரு கற்பகத் தருப்போல விளங்கி யிருந்தனர். இவரது பிரபந்தங்களின் மண மாகிய கீர்த்தியே இன்றும் இவர் சுற்றத்தினருக்கு மதிப்பினைத் தந்து வருகின்றன.

* * * *

தானேற்படுத்திய மேற்படி சத்திர தருமங்களைத் தானே பதினேழு வருடம் வரையிலிருந்து நடாத்தி விவபஹு மார்கழிமீ 8உ (1868ஹு டிசம்பர்மீ 21உ) தனது 66-வது வயதில் ஸ்ரீ கபாலீஸ்வர சுவாமியாரது திவ்ய திருவடி நிழலில் கலந்தனர்.

* * * *

இச் சரித்திரச் சுருக்கம், எனது பெரிய தந்தையாராகிய ஷை விநாயக முதலியாரவர்கள் என்னிடத்து நேரே சொல்லியதும் என் அனுபவத்தால் அறிந்ததுமான சங்கதிகளாம். சுபம்.

1903ஹு நவம்பர்மீ
சோமகிருதுஹு
ஐப்பசிமீ

இங்ஙனம்,
ஷை விநாயக முதலியார் சகோதரர்,
அப்பாசாமி முதலியார் குமாரர்,
திருமயிலை வி. சுந்தர முதலியார்."

உ

கடவுள் துணை

தொண்டைமண்டலம் சோழிய வேளாளர் மரபு

# வியாசர்பாடி விநாயக முதலியார்

## சித்திரச் சத்திர

# தரும பரிபாலனம்

### வி. விநாயக முதலியார் எழுதிவைத்த தரும சாதனம்

சிவமயம்

௲௮௱௫௰௪ஹு ஜூன்மீ ௰௭௨ சுப்பிரீம் கோர்ட்டு ரிஜிஸ்தர் ஆபீசில், ௫-வது வாலியத்தில், ௨௰௭-வது, போலியத்தில், உல்லியம் ஷார்லிப் துரை முன்னிலையில் ரிஜிஸ்தர் செய்த ஏற்பாட்டின் விபரம்.

திருவளர் சாலிவாகன சகாப்தம், ௲௭௱௭௰௧ஹு சௌமியஹு தைமீ ௰௨ திங்கட்கிழமை, அஷ்டமிதிதி ௯௰௭௨, அஸ்வனி நட்சத்திரம் ௨௰௪௨, சாத்திய நாம யோகம் ௨௰௭௲ஹு, பதவாகரணம் அஜேஹு, திவாவில் ௪௯௨ பஜ க்குமேல், அமிர்தகடிகை இதுகூடிய வாக்கிய சுத்த பஞ்சாங்க சுபதினத்தில் கடவுளை நேமித்து இஷ்டசித்தியாய் எழுதிக்கொண்டது.

திருமயிலாப்பூரிலிருக்கும் சோழியவேளாளரில், வியாசர்பாடி அர்ச்சுனமுதலியார் குமாரராகிய ௪௮ வயதுள்ள விநாயக முதலியாகிய நான் மனப்பூர்வமாய் எழுதிவைத்த தரும சாதன மென்னவென்றால்,

௧-வது எனக்குத் தகுந்த வயது வந்ததின்பேரில் சரீர பிரயாசைப்பட்டு, சுயார்ச்சிதமாய் நான் சம்பாதித்த திரவியத்தினால் திருமயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் தேரோடு மாடவீதிக்குத்தென்னண்டை, ரொட்டிக்காரர் சத்திரத்திற்குக் கீழண்டை, அல்லாடி நாராயணசாமி நாய்க்கன் வீட்டிற்கு மேலண்டை, ஸ்ரீ கற்பகவல்லியம்மன் தோட்டமானிய நிலத்திற்கு வடவண்டை யிராநின்ற வீடு மனையை மணம்பேடு வீராசாமி முதலியாரிடத்தில் நான் கிரயத்திற்கு வாங்கி, என் பெயராலே சர்ட்டிபிகேட்டுப் பிறப்பித்த நெம்பர் ௪௲௩௱௰௧-வது வீட்டை தரும சத்திரமாய் செய்து ஷை சத்திரத்திற்கு, மாதவாரி செலவுக்கும், வருஷவாரி பிர்ம உற்சவ காலத்திற் செலவுக்கும், ஷை சத்திரத்து மராமத்து முதலாகிய வரியிறைக்கும், பிரதி துவாதசி பிராமண போசனம் இதுகளுக்கு நான் கிரயத்திற்கு நுங்கம்பாக்கத்தில் தோட்டம் நிலம் வாங்கி, என் பெயரால் செய்த சர்டிபிகேட்டுகள் நெம்பர் ௫௲௱௯௰௨, ௫௲௱௯௰௩, ௫௲௱௯௰௪, ௫௲௱௯௰௫, ௫௲௱௯௰௯, ௫௲௱௯௰௭. இதுகள் காசி செட்டியார் தோட்டத்திற்குத் தெற்கு, ஷையூர் ஏரிக்குக் கிழக்கு, ஆற்காடு பாட்டைக்கு வடக்கு, ஐயாகண்ணு முதலியார் நிலத்திற்கு மேற்கு, இந்த நாற்பாங்கெல்லைக்குள் நின்ற குளம், மண்டப முள்பட, ௫௨ காணியுள்ள தோட்டத்தையும், பின்பு கிரயங் கொண்ட காணி ௧. ஷை சத்திரத்திற்கு செலவுகளுக்கு முதலாக வைத்திருக்கிறபடியால், ஷை தோட்டத்து வருமானங் களைக்கொண்டு, ஷை தருமங்களை நான் உள்ளவரையில்,

நான் பார்த்து வருகிறது. எனக்குப் பின்பு என் தம்பி மார்களும், எங்கள் புத்திர பௌத்திரர்களும், பார்த்து வருகிறது. அல்லது என் பெண்கள் வமிசத்தில் பிள்ளைகளாவது ஷை வரும்படியைக்கொண்டு ஷை தருமங்களை பரிபாலனம் பண்ணிக்கொண்டு வரக்கடவது.

உ-வது மேலெழுதிய தரும விசாரணைகளில் நான் நியமித்த மேற்கண்ட பேர்களாவது, எனக்குப் பிற்காலம் மாதவாரி வரவு செலவு கணக்குகளை மேற்கண்ட கட்டளைப்படி. நம்முடைய மரபில், பெரியதனம் முனியப்ப முதலியார் மற்ற உறவின் முறையார்களுக்கு ஒப்பிவைக்கவேண்டியது. அதில் ஏதாவது பிசகாய் நடந்தாலும், இந்த சொத்துகளை. இன்னொரு தருமத்திற் குபயோகப்படுத்தினாலும், ஷை வருமானங்களை சொந்தத்திலனுபவித்தாலும், நம்முடைய மரபில் நாலு பேர் சேர்ந்து மேலெழுதியபடிக்கு தருமத்தை அக்கிரமமாய் நடத்தினவர்களை புறம்புசெய்து, என் வமிசத்திலாவது, என்னுடைய சகோதர வமிசத்திலாவது, என் பெண்கள் வமிசத்திலாவது, நம்முடைப மரபிலாவது, யோக்கியனு யிருக்கப்பட்டவர்களை நேமகம்செய்து, ஷை தருமங்களை மேல் எழுதிய நிபந்தனைப்படிக்கு சந்திராதித்தர் பூமி புல்லுள்ள வரைக்கும், நடப்பித்துக்கொண்டு வரக்கடவது. மேற்கண்ட தருமங்களுக்கு யாதாமொருவர் விகாதங்கள் நினைப்பார்களேயாமாகில் காசியில் அத்திசெய்த பாவத்தில் போகக்கடவது.

ந-வது இச்சத்திரத்துத் தருமத்தை நம்முடைய மரபாகிய சோழிய வேளாளர் யாவருக்கும் பொதுவா யிருக்கிறபடியால் எங்கள் வமிசத்தார் ஷை தருமத்தை வித்தியாசப்படுத்தினால், பத்தூர் நாட்டாரும், பெரியதனக்காரரும், உறைவின் முறையாருமாகிய யாவரும் சேர்ந்து, பரிபாலனம் பண்ணத்

திறமுள்ளவராகிய ஒருவரை நியமித்தும், மேல் விசாரணையும் தாங்களே பண்ணிக்கொண்டு வரவேண்டியது.

இந்தப்படிக்கு மனப்பூர்த்தியாய் மேற்கண்ட எங்களூற வின் முறையாரிடத்தில் எழுதிவைத்த தருமசாதனம்.

சுபமஸ்து.

சாக்ஷிகள்

| | |
|---|---|
| முனியப்ப முதலியாரனுமதியில் அருணாசல முதலியார் | வி. விநாயக முதலியார் கையெழுத்து |
| ம. முத்தையா முதலி ம. வெங்கடாசல முதலியார் | வி. சுப்பராய முதலியார் கையெழுத்து |
| ம. அண்ணாசாமி முதலியார் ம. ண. சடையப்ப முதலியார் | வி. சுந்தர முதலியார் கையெழுத்து |
| சி. ஆனையப்ப முதலியார் × இக்குறி ம. முனியப்ப முதலியார் | வி. சபாபதி முதலியார் கையெழுத்து |
| த. முனியப்ப முதலியார் வெ. ஏகாம்பர முதலியார் அறிவோம் | வி. அருணாசல முதலியார் கையெழுத்து |

சாதாரண (வரு)
தைமீ ௩௰ உ }

# தருமசத்திர பரிபாலன சிலாசாதனம்



ஸ்ரீ கணபதியேநம :

சுவஸ்த் ஸ்ரீவிஜயாத்புதய சாலிவாகன சகாப்தம்௵ ௲௭௱௮௰௯ பிரபவாதி௵ ௬௰௯க்கு பரிதாபி௵ வைகாசி௴ ௩௨உக்கு (இங்கிலீஷ்) ௲௮௱௬௰௭ திருமயிலையிலிருக்கும் வியாசர்பாடி சோழிய வேளாளகுல அர்ச்சுன முதலியார் ஜேஷ்ட புத்திரரான விநாயக முதலியார் தரும சத்திரம் கருங்கல் கட்டடம் தொடங்கிச் செய்தது. இதற்கு மனை - க. குழி ௲௬௱௬௰௨ இந்தசத்திரம் தர்ம பரிபாலனம் எப்போதும் நடந்துவரும்படி நான் சேகரித்துவைத்திருக்கிற ஆஸ்தியாவது, நுங்கம்பாக்கத்தில் காசி செட்டியார் தோட்டத்திற்கு தெற்கு, மேற்படி ஊர் ஏரிக்கு கிழக்கு, ஆற்காடு பாட்டைக்கு வடக்கு, ஐயாகண் முதலியார் நிலத்திற்கு மேற்கு, இந்த நாற்பாங்கிலுள்ள தோட்டம், மண்டபம், குளம், இதுகள் சேர்ந்த காணி ௬. மனை ௰௬. குழி ௨௲௨௱௨௰௬வ இதில் வருகிற வரும்படியைச் சத்திரத்தில் தகுந்த பிராமணர்களை வைத்து திருவிளக்கு, தீபாராதனை, துவாதசிதோறும் பிராமணபோசனம், தண்ணீர் கொடுத்தல், மருமத்து முதலியவை கிரமமாக செய்வித்தல், இத்தருமங்களை இப்போது நான் பரிபாலனஞ் செய்துக்கொண்டுவருகிறபடி என் சகோதரர் பிள்ளை பெண்வயிற்றுப் பிள்ளை தாயாதிகளும் புத்திர பௌத்திர பரம்பரையாய் நடத்திவரக்கடவர்கள். எனக்கு பிற்காலத்

தில் இந்த சத்திரத்திற்காக ஏற்படுத்தி வைத்திருக்கிற சொத்துக்களை ஷெடி தருமபரிபாலனஞ் செய்யாமல் அன்னிய விஷயங்களில் ஷெயார் எவ்வளவுஞ் செலவிடக்கூடாது. ஒரு துர்வியாச்சிய முதலானதுஞ் செய்யவும்படாது. அப்படி அவர்களில் யாராவது செய்தால், என் ஜாதியாரனைவருக்கும், நான் வணக்கத்துடன் கொடுக்கும் அதிகாரமாவது : வெள்ளி வாயல், ஆயல்சேரி, மயிலாப்பூர், சென்னப்பட்டணம், முதலான கிராமங்களிலிருக்கும், சோழிய வேளாள நாட்டார், பெரிய தனத்தார், மற்றுமுள்ள பந்துக்கள் முதலானயாவரும், பொதுவாய்க்கூடி, எங்கள் வம்சத்தில் நிலைமையும், கிரமமுமான ஒருவரை உடனே ஏற்படுத்தி அவரைக்கொண்டு ஷெடி தருமங்களுக்கு ஒரு குறைவும் வாராமல் எதாப்பிரகாரம் நிறைவேற்றிவரக்கடவது. இச் சத்திரம் சோழிய வேளாளர் யாவருக்கும் பொதுவாயிருக்கவேண்டுவது. இந்த சத்திரத்திற்காவது, இதற்காக வைத்திருக்கிற சொத்துக்காவது, இந்த தருமபரிபாலனங்களுக்காவது, என் வம்சத்திலும், பந்துக்களிலும, அவர்கள் வம்சத்திலும், அன்னியர்களிலும், யாராவது எவ்வளவேனும் விகற்பம் செய்தாலும், செய்வித்தாலும், சுவாமி துரோக மகா பாதகத்திற்குள்ளாகக் கடவர்கள்.

இப்படிக்கு என் திரிகரணசுத்தியாய் நான் நியமித்து எழுதிவைத்த தரும சத்திர பரிபாலன சிலாசாதனம்.

சுபமஸ்து.

வி. விநாயக முதலியார் கையெழுத்து.

# வியாசர்பாடி விநாயக முதலியார் எழுதி ரிஜிஸ்டர் செய்த உயிலின் அசலுக்கு சரியான எக்ஸ்ட்ராக்ட்

**சிவகாமி சுந்தரி திருவடிகளே சரணம்**

௲அ௱௬௰அ - ம் ௵ டிசம்பர்௴ ௰௬௨க்குச் சரியான தமிழ் விபவ௵ மார்கழி௴ ௬௨ மதராஸ் டிஸ்திரக்ட்டு ௫-வது டிவிஷன், திருமயிலாப்பூரில், தாச்சி அருணாசல முதலியார் வீதியில் டோர் நெம்பர் அ-வது வீட்டிலிருக்கும், வியாசர்பாடி இறந்துபோன அர்ச்சுனமுதலியார் ஜேஷ்ட குமாரராகிய விநாயக முதலியாராகிய நான் நல்லறிவோடும் எழுதிவைத்த உயில் என்னவென்றால்,

க. * * * *

உ. * * * *

௩. திருமயிலாப்பூர் தென்னண்டை மாடவீதியில் சர்ட்டிபிகேட்டு நெமபர் 4311, டோர் நெம்பர் 13, நான் தரும சத்திரம், என் ஜாதியார் யாவருக்கும், பொதுவாய் நான் சுயார்ச்சித சம்பாத்தியஞ் செய்து கட்டிய தருமசத்திரத்திற்கு வருஷவாரியில் பிர்ம உற்சவகாலத்து செலவுக்கு மதராசு டிஸ்டிரிகட்டைச் சேர்ந்த நுங்கம்பாக்கத்தில் கோடம்பாக்கத்திற்கு போகிற மார்க்கத்தில் வடக்கு, ஏரிக்கு கிழக்கு, இது மத்தியில் யிருக்கும ரூபா 3,000 பெறுமான தோட்டத்திற்கு சர்ட்டிபிகேட்டு நெம்பர் 8412-ல் காணி சு-மனை ௰ச-ம் குழி ௩௲உ௰சஹ இந்த தோட்டத்து வரும்படியை தரும கைங்கரியஞ் செய்ய என் சத்திரத்திற்கு உபயோகப் படுத்தும்படி வைத்து வைத்தேன். ௲அ௱௫க௵ ஜூன்௴ ௰எ தேதியில் தரும சத்திரத்தைக் குறித்து தோட்டத்தையும் சூப்பிரிம் கோர்ட்டு ரிஜிஸ்தரும், செய்துவைத்தேன்.

ச. எனக்கு பிற்காலம் இதன் அடியில் கண்டிருக்கிற என் ஜேஷ்ட்ட குமாரன் சோமசுந்தர முதலியாரும், சென்ன பட்டணத்திலிருக்கும் மஞ்சாகுப்பம் வெங்கடாசல முதலியார் குமாரன் என் ஜேஷ்ட மருமகனுகிய திருவேங்கட முதலியார், இவர்கள் இருவரையும், நான் எக்சிகூட்டர்களாய் நியமித்தேன். மேற்படி தோட்டம், கூ-வது கலத்தில் கண்ட இரண்டு கடைகள் இவைகளின் வரும்படியை மேற்சொல்லிய சத்திரத்தில் நடக்கவேண்டிய தரும கைங்கரியங்களுக்கு உபயோகப்படுத்தி வரவேண்டியது. இப்படி நடப்பித்து வருகிறதை அப்போதைக்கப்போ மேல் விசாரணை செய்ய வேண்டியதற்காக சென்னபட்டணத்திலிருக்கும் சிறளப்பாக்கம் சுப்பருய முதலியார் குமாரர் டிப்டி கலெக்ட்டர் கந்தசாமி முதலியார் க; சென்னப்பட்டணத்திலிருக்கும் சென்றம்பாக்கம் குமரவேலு முதலியார் குமாரர் முத்துசாமி முதலியார் உ; சென்னப்பட்டணத்திலிருக்கும் வெள்ளிவாயல் குமாரசாமி முதலியார் குமாரர் இராஜரத்தின முதலியார் ந; திருமயிலாப்பூர் சின்னப்ப முதலியார் ச; இவர்கள் நால்வரையும் நியமித்து இருக்கிறேன். இந்த நால்வரும் இதில் நியமித்த மேல்கண்ட உ எக்சிகூட்டர்களால் ஷை தருமங்களுக்கு விக்கினம் நேரிடுங்காலையில் அந்த க்ஷணம் அந்த எக்சிகூட்டர்களை நீக்கி தங்களுக்கு இஷ்டமானவர்களை நியமித்து, மேற்படி தருமங்களை நடப்பித்து வரவேண்டியது. இந்த விசாரணை கர்த்தர்களுக்கு ஆறுமாதத்திற்கு ஒருதரம் தரும சத்திரத்திற்கு உண்டான வரவு செலவு கணக்குகளை மேற்படி எக்சிகூட்டர்கள் கொடுத்து அவர்களிடத்தில் கையெழுத்து வாங்கி கட்டிவைக்க வேண்டியது.

ரு. எக்சிகூட்டர்கள் சத்திரத்திற்குண்டாகிய சாமான்கள் தோட்டம், மேற்கண்ட இரண்டு கடை, இவைகளின்

வரவு செலவு கணக்கு கொடாமலும், மேற் சொல்லிய வரும்படியை மேல்கண்டிருக்கிற தருமங்களுக்கு உபயோகப் படுத்தாமலும், அவர்களாலே விக்கினம் நேரிடுமாகில் மேற் சொல்லிய நால்வரும் தக்ஷணம் நான் நியமித்த எக்சி கூட்டர்களை நீக்கி நால்வருக்கும் இஷ்டமானவர்களை வைதது, மேற்சொல்லிய வரும்படியை வாங்கி அவர்களால் ஷை தருமத்தை நடப்பித்துக் கொண்டு வரவேண்டியது. மேற் சொல்லிய நால்வரில் ராசிகம் தெய்வீகத்தினால் ஒருவர் வித்தியாசப்பட்டால் மற்ற மூவரும் ஒன்றாய்ச் சேர்ந்து ஒருவரை நேமித்து நால்வராகச்சேர்ந்து மேற்படி தருமத்தை நடப்பித்து வரவேண்டியது. ஷை தரும சத்திரத்திற்கு நான் நியமித்த இரண்டு கடை வரும்படியை பிரதி மாசத் தில் வரும் துவாதசிகளில் பிராமண சந்தர்ப்பணைக்கு உபயோகப்படுத்தி வரவேண்டியது.

௬. மதராஸ் டிஸ்திரிக்ட்டு, 2-வது போலிசு டிவிஷன் பெத்துநாய்க்கன்பேட்டையில் மந்தவெளித் தெருவில் சர்ட் டிபிகேட்டு நெம்பர் 2308 ரூ. 2,000 மதிப்புள்ள வீட்டையும் அதைச் சேர்ந்த கடைகள் மூன்றில் மேற்கண்ட கட்டியிருக் கப்பட்ட தரும சத்திரத்திற்கு கிழண்டை கடை இரண்டு போக மேலண்டை கடை ஒன்றையும், என் நடுவில் மனை யாள் சுந்திரம் குமாரன வி. சோமசுந்திர முதலியாருக்கு கொடுத்துவிட்டேன். கலெக்டர் சர்ட்டிபிகேட் முதலாகிய தும், அவன் பேருக்கு செய்திருக்கிறேன். மேற்படி வீட் டையும், மேலண்டை கடை ஒண்ணும், மேற்படியான் குடிக் கூலிவிட்டு குடிக்கூலி வரும்படியில், வரி, மராமத்து செலவு போக மற்ற மீதியை மேற்படியானே அவன் வம்ச பரம் பரையாய் அனுபவித்துக்கொண்டு வருகிறது. மேற்சொல்லிய வீட்டை தானாதி விக்கிரையங்களுக்கு போக்கியமில்லாமல்

மேற்படியானே புத்திர, பவுத்திர, பாரம்பரியமாய் அனுப வித்துக்கொண்டு வருகிறது. ஷை வீட்டை மேற்படி யான் வமிசம்பிருக்து அனுபவித்தாலாச்சுது. இல்லாவிட் டால் மேலெழுதிய என் சொந்த சத்திரத்திற்கு உபயோகப் படுத்தவேண்டியது.

எ. * * * *

அ. * * * *

சு. * * * எனக்கு

பிற்காலம் சத்திரத்திற்கு பிர்ம உற்சவ செலவிற்கு தோட் டம் இரண்டு கடைவரும்படி குறவுபட்டால் என் பிள்ளை கள் மூவரும் பங்கு விகிதப்படிக்கு கிரமமாய் கொடுத்து நடப்பித்து வரவேண்டியது. என் வீட்டிலிருக்கும் பித்தளை சாமான்களில் மதுரை சொம்பு மூன்று தவிர மற்ற பித்தளை நகையாவத்தும் என் சத்திரத்திற்கு கொடுத்து விட்டேன். இது தவிர வேறே எனக்கு ஆஸ்திகளுமில்லை யாதொரு கடனுமில்லை இது நான் என் முழுமனதுடனே சுவாமியை நினைத்து எழுதிவைத்த உயில்.

வி. விநாயக முதலியார் கையெழுத்து.

சாக்ஷிகள்

(சயன்) தி. நா. வேலுமுருக முதலியார் அறிவேன்.
(சயன்) தி. ம. முருகேச முதலியார் அறிவேன்.

D. S. White (டி. எஸ். வொயிட்)
Ag. Registrar (ஆக்டிங் ரிஜிஸ்ட்ரார்.)

## டிரஸ்டிகள் வே. இராஜரத்தின முதலியார் மயிலை - சின்னப்பாவு முதலியார் இவர்களும், மேற்படி தரும சத்திரம் எக்ஜிகூட்டர் வி. சோமசுந்தர முதலியாரும், ஏற்பாடுசெய்து எழுதிக்கொண்ட சாஸ்வத உடன்படிகை

*மதராஸ் ரிஜிஸ்டர் ஆபீஸில் 1882ளு செப்டம்பர்மீ 26உ புஸ்தகம் (I) வால்யம் 199 பேஜிகள் 216, 217ல் 2183-வது நெம்பராக ரிஜிஸ்ட்டரான உடன்படிக்கை.*

1882ளு செப்டம்பர்மீ 21உக்கு சரியான சித்திரை பானுளு பெரட்டாசிமீ 7உயில் சென்னப்பட்டணத்தைச் சேர்ந்த திருமயிலாப்பூரில் கபாலீசுவரர் சுவாமி கோவில் தென்னண்டை மாடவீதியிலிருக்கும், விநாயக முதலியார் தரும சத்திரம் Trusteeகள். வெள்ளிவாயல் இராஜரத்தின முதலியார் 1, மயிலை சின்னப்பாவு முதலியார் 2, இவர்களும், ஷை தரும சத்திரம் Executor வியாசர்பாடி சோமசுந்திர முதலியாரும், ஏற்பாடுசெய்து எழுதிக்கொண்ட சாஸ்வத உடன்படிக்கை என்னவென்றால் சென்ற 1868ளு டிசம்பர்மீ 19உயில் ஷை மூவரில் ஒருவராகிய சோமசுந்திர முதலியாரான நான், இறந்த என் பிதா விநாயக முதலியார் பிறப்பித்த உயில்படி மைலாப்பூர் தென்னண்டை மாடவீதி டோர் நெம்பர் 13உள்ள ஷை விநாயக முதலியார் ஏற்பாடுசெய்து கட்டிவைத்த தரும சத்திரத்தின் செலவுக்காக சென்னப்பட்டணம் பெத்துநாய்க்கன்பேட்டை மந்தவெளி தெருவு டோர் நெம்பர் 226(a)வுள்ள ஷை வுயில்படி ஷை மூவரில் ஒருவரான சோமசுந்திர முதலியாராகிய நான் ஷை வீட்டை சேர்ந்த கீழண்டை கடைகள் இரண்டின் வரும்படியை ஷை தருமத்துக்கு மாதவாரி கொடுத்து வருமபடி எனக்கு விதித்தபடி ஷை

என் தகப்பனார் இறந்த தேதிமுதல் நாளது தேதிவரையி லும் மாதம் 1-க்கு ரூபா 4 விழுக்காடு தவறாமல் கொடுத்து வந்துக்கொண்டிருக்கையில் சென்ற விஷு ௵ தை௴த்தில் என்னுடைய ஷை வீட்டையும் அதைச் சார்ந்த எனக்கு சொந்தமான ஒரு கடையையும், மராமத்து செய்து விர்த்தி செய்த காலத்தில் ஷை இரண்டு கடைகளையும் சேர்த்து மராமத்து செய்து விருத்திபண்ணதில் ஷை இரண்டு கடைகளின் மராமத்திற்காக என் சொந்தத்தில் கடன்பட்டு மாதம் 1-க்கு ரூபா 100க்கு வட்டி ஜ ஆக ரூபா 600 கடன வாங்க வேண்டியதாயிற்று. மேற்கண்டபடி கடன் வாங்கி விருத்திபண்ணின பிறகு ஷை இரண்டு கடை களும், கொஞ்சம் அதிக வரும்படிக்கு லாயக்கானதால் எனக்கும் ஷை Trusteeகளுக்கும் தகரார் நடந்து அதின் பேரில் தகரார் தீர்த்துக்கொண்டு ராஜியாய் நானும் Trustee களும் மனம் ஒத்து சாஸ்வதமாய் ஏற்பாடு செய்துகொண்ட தாவது, ஷை இரண்டு கடைகளின் மராமத்துக்காக கடன்பட்ட ரூபாய் 600-க்கு மாதம க-க்கு 4½ ரூபாய் வட்டி நான் கொடுத்து வரவேண்டியதா யிருப்பதாலும் ஷை கடைகளின் Quit Rent, Assessment முதலிய வரிகள் வருஷம் ஒன்றுக்கு ரூபா 18 நான் செலுத்த வேண்டியிருப் பதாலும், ஏதாவது பழுது நேரிட்டால் அதை ரிப்பேர் செய்யவேண்டியதா யிருக்குமாகையாலும், இதை யெல்லாம் தீர்க்காலோசனைசெய்து ஷை Trusteeகள் இருவரும் என் னிடத்தில் ஷை உயில் நிபந்தனைப்படி ஷை தரும சத்திரத் திற்காக ஷை இரண்டு கடைகளுக்கும் சேர்ந்து மாதம் 1-க்கு ரூபாய் 6 விழுக்காடு பெற்றுக் கொள்ளுவதாகவும் நானும் என் பின சந்ததியாரும் சாஸ்வதமாய் ஷை தருமத் திற்காக ஷை ஆறு ரூபாயைக் கொடுத்துவருவதாக ஏற்பாடு செய்து முடிவுசெய்துகொண்டோமாகையால் இந்த ஏற்

பாட்டுக்கு இனி யாராலும் ஒரு கலஹுமில்லை ஷை உயிலில் கண்டபடி ஷை இரண்டு கடைகளின் வரும்படி மட்டில் தரும சத்திரத்திற்கு பாத்தியபட்டதே தவிர ஷை கடைகளும், கடைகளின் அடி நிலமும், ஷை சத்திரத்திற்கு பாத்தியப் பட்டதல்ல. இந்தப் பிரகாரம் அடியில் கையொப்பமிட் டிருக்கிற ஷை இராஜரத்தின முதலியார், மயிலை. சின்னப்பாவு முதலியார், சோமசுந்திர முதலியாராகிய நாங்கள் எங்களுக்குள் சம்மதித்து ஏற்பாடுசெய்து எழுதிக்கொண்ட சாஸ்வத உடன் படிக்கை.

சாட்சிகள்

| | |
|---|---|
| கு. தர்மலிங்கம். | V. Rajarathnum Mudaliar. |
| வெ. ஏகாப்பரஹு. | ம. பு. வ. சின்னப்பஹு. |
| வெ சுந்திரமூர்த்திஹு. | வி. சோமசுந்திரஹு. |

## நாட்டு பெரியதனக்காரருக்கு வி. விநாயக முதலியார் குமாரர் வி. கெங்காதர முதலியார் எழுதிய கடிதங்கள்

*1st June 1914.*

**சிவமயம்**

மகாகனம் பொருந்திய, சோழிய வேளாளர் மரபைச் சார்ந்த வெள்ளிவாயல்நாடு பெரியதனம் ம-ா-ா-ஸ்ரீ, ம. மகா தேவ முதலியார், ம-ா-ா-ஸ்ரீ, வெ. தங்கவேலு முதலியார், மற்றுமுள்ள உறவின்முறையார் அவர்களுக்கு, திருமயிலாப் பூரில் இருக்கும் வி. கெங்காதர முதலியார் மிகவும் வணக் கத்துடன் தெண்டனிட்டு எழுதிக்கொண்ட மனு என்ன வென்றால் :—

1-வது என் தகப்பனாராகிய காலஞ்சென்ற வியாசர்பாடி விநாயக முதலியார், திருமயிலாப்பூர் தென்மாட வீதியில்

கட்டிவைத்திருக்கும், தரும சத்திரத்தில் சுமார் 60-வது வருஷத்திற்குமுன் போட்டு இருக்கும், சிலாசாசனத்திலும், அதைப்பற்றி சூப்பிரிம் கோர்ட்டில் ரிஜிஸ்டர் செய்திருக்கும் பத்திரத்திலும், தனக்கு பிற்காலம் மேற்படி சத்திர தரும விசாரணையை தன் சந்ததியார் நடத்திவரும்படியாயும் அவர்கள் சரியாய் நடத்திவராத பக்ஷத்தில் நமது பத்தூர் நாட்டார் பெரியதனக்காரர்கள் பொதுவாய் கூட்டம்கூடி மேற்படி தருமத்தை சரியாய் நடத்தாதவர்களை நீக்கி சரியானவர்களை நியமனம் செய்யும்படி எழுதி இருக்கிறார், அப்படிக்கி இருந்தும், நாளது வரையில் சத்திர தரும விசாரணை செய்பவர்களிடத்தில் இருந்தும் கணக்கு முதலியது வாங்கவும் இல்லை. தருமத்தை சரியாய் நடத்தாதவர்களை நீக்கி அவர் சந்ததிலாவது ஜாதியிலாவது தக்கவர்களை ஏற்பாடு செய்து நேமிக்கவும் இல்லை. அவ்வாறு இருந்ததினால் மேற்படி விநாயக முதலியார் காலஞ்சென்ற பிறகு அவருடைய இரண்டாந்தாரத்து குமாரராகிய வி. சோமசுந்திர முதலியாருக்கும், எனது தாயார் ஆகிய சரவணம்மாளுக்கும், சச்சரவு நேரிட்டு நானும் என் சகோதரன் வி. ஞானசிகாமணி முதலியும் அப்போது பாலியர்களாய் இருந்தபடியால் மேல்படி இரு தாரத்தாரும் அன்னியர் நால்வரை பஞ்சாயத்தார் ஆக நியமனம் செய்துகொண்டு அந்த பஞ்சாயத்தார் ஏற்பாட்டின்படி தங்கள் வீட்டு விவகாரத்தையும், மேற்படி சத்திர விவகாரத்தையும், ஒருவிதமாக ஏற்பாடு செய்து வைத்ததை அனுசரித்து சிலகாலம் நடந்தது. அந்தப் பிரகாரம் இரு தாரத்தாரும சரியாய் தருமத்தை நடத்தாமல் இருந்தபடியால் எங்கள் சிறிய தகப்பனார் குமாரர் வி. சுந்திர முதலியார் 1887 ௵ ஐகோர்டில் மேல்படி சத்திர விஷயமாய் வியாச்யம் செய்தபோது நாங்கள் பாலியர்களாய் இருந்தபடியால் எங்களில் ஜேஷ்டராய் வி. சோமசுந்திர முதலியார் என்

தாயாரை அனுசரித்துக் கொண்டுதான் மேல்படி தருமத்தை சரியாய் நடத்திவருவதாக சில தப்பு சாக்ஷிகளைக்கொண்டு நடவாத காரியங்களை நடந்ததாகச் சொல்லி வைத்ததினால் வாதியாய் இருந்த வி. சுந்திர முதலியார் பக்கம் கோர்டார் தள்ளுபடி செய்யப்பட்டது. அதுமுதல் ஷை வி. சோமசுந்திர முதலியார் மேல்படி சத்திர துவாதசி இரண்டு கடைகளின் வருமானத்தை தானே சொந்தத்தில் அனுபவித்து வருகிறார்.

2-வது மேல்படி சத்திரத்தைச் சார்ந்த தரும சொத்தாகிய நுங்கம்பாக்கம் தோட்டத்தை எனது சகோதரனாகிய வி. ஞானசிகாமணி முதலி தானே சுதாவாய் வருமானங்களை வாங்குவதும், அதில் உள்ள மரங்களை விர்த்தி செய்யாமல் அதில் உள்ள மரங்களை வெட்டி விற்பது மாகிய அக்கிரமங்களைச் செய்துகொண்டு பார்ப்பவர்களுக்கு தான் தர்மத்தை செய்வதுபோல் திருவிழா காலத்தில் பந்தல் போட்டு தீபங்களை யேத்திவருவதுபோல் வெளியாருக்கு காண்பித்து வருகிறார். அது விஷயத்தில் நான் பிரவேசித்து வேறொரு சாருத்திக்கு மேல்படி தோட்டத்தை குத்தகை விட்டேன். அப்போது மேல்படி வி. ஞானசிகாமணி முதலி தானே மேல்படி வி. சுந்திர முதலியார் இடத்தில் போய் என் தமையன் வி. கெங்காதர முதலி தோட்டத்தை வேறொருவருக்கு குத்தகை விட்டுவிட்டான். என்னால் வசூல் முதலியது செய்யக்கூடாமையால் இருப்பதால் தாங்கள் என்னிடம் பவர் பெத்துக்கொண்டு மேல்படி தரும தோட்டத்தையும் துவாதசி கடைகளையும் வசூல் செய்துக் கொண்டு மேல்படி சத்திர தருமத்தை நடத்திவரும்படி கேட்டுக் கொண்டதால் அதற்கு மேற்படி வி. சுந்தரமுதலியார் ஒத்துக் கொள்ளாமல் உன்னுடைய சகோதரன் வி. கெங்காதர முதலி

யார் சேர்ந்து லாயர் முன்னிலையில் யோசித்து எனக்கு பவர் எழுதிக்கொடுக்கும் பட்க்ஷத்தில் நான் பார்ப்பேன் என்று சொல்லவே, மேல்படி வி. ஞானசிகாமணி முதலி என்னை வெள்ளிவாயல் கிராமத்தில் இருந்து வரவழைத்துக்கொண்டு லாயர் வீட்டுக்குப் போய் அபிப்பிராயத்தை வி. ஞானசிகா மணி முதலியார் சொல்லியதை மேல்படி லாயர் அங்கிகரித்து என்னையும், வி. ஞானசிகாமணி முதலியாரையும் கலந்து மேல்படி வி. சுந்திர முதலியாருக்கு பவர் கொடுங்கள் என்று நகல் செய்து கொடுத்த பிரகாரம் 5 ரூபா முத்திரை காகிதத் தில் எழுதி ஜாதியார் சாக்ஷி முன்னிலையில் மேல்படி வி. சுந்திர முதலியாருக்கு ஜெனரல் பவர் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுத்தோம், அந்தப்படி மேல்படி வி. சுந்திர முதலி யார் 6 வருஷகாலம் மேல்படி தோட்டத்தை விர்த்தி செய்து வந்து அதின் வருமான தொகையில் வரி மராமத்து போக மற்றதை மேல்படி வி. ஞானசிகாமணி முதலி இடம் கொடுத்து சத்திர தருமத்தை நடத்தி அவர் கைப்பட ரசீ தையும் வாங்கி வந்தார். அவர் கிரமமாய் நடத்தி வருங் காலத்தில் 7-வது வருஷத்தில் காரணம் இல்லாமல் எனக்கு வேறு விதமாகச் சொல்லி மேல்படி வி. சோமசுந்திர முதலி யாருடன் ரகசியமாய் கலந்துக் கொண்டு லாயர் மூலியமாக நோட்டிசு கொடுத்து மேல்படி பவரை கான்சல் செய்து விட்டோம. மேல்படி வி. சுந்திர முதலியார் நோட்டீசு பெற் றுக்கொண்ட நாள் முதல் மேல்படி தரும தோட்ட விஷயத் தில்தான் பிரவேசிக்காமல் இருந்துவிட்டார்.

3-வது அதன் பின்பு மேல்படி வி. ஞானசிகாமணி முதலி பழயபடி கெட்ட அபிப்பிராயத்தைக் கொண்டு என்னை நீக்கிவிட்டு தன் பேருக்கு ஏகதேசத்தில் தோட்ட கிரிமெண்டு, சத்திர கிரிமெண்டு எழுதிக்கொண்டு இருக்

கிறார். மேற்படி குத்தகை சீட்டில் என் பெயரை காட்டாம லும் தானே தனிமையாக மேல்படி தோட்டத்தில் இருக் கும் பல விருக்ஷங்களை வெட்டி விற்பதும், மேல்படி தோட் டத்தில் உள்ள மண்களை மண் வண்டிக்காரர்களுக்கு விற்பனை செய்துக்கொண்டு வருகிறார். இவ்விதமாக பாழடைந்து வருவதால் அனேகர் என்னை சத்திரம் தோட்டம் துவா தேசி கடைகள் வரும்படிகள் தருமத்துக்கு உபயோகப் படாமல் விர்தாவாய் போகிறபடியால் உங்கள் ஜாதியாரும், இதைப்பற்றி கவனிக்காமல் இருப்பதால் இனியாவது மேல் படி தருமங்கள் சரியாய் நடந்துவரும்படியாக மயிலாப்பூரில் இருக்கும், தனரக்ஷணை சபையார் மூல்யமாக விட்டுவிட் டால் அவர்கள் ஐகோர்ட்டில் பிரவேசித்து மேல்படி தருமங் களை அவர்கள் மூலமாக நடந்துவரும்படியாக ஏற்பாடு செய் வார்கள் என்று சொல்லுகிறார்கள்.

4-வது நான் கடைசி முறையாக தெரிவிப்பது, என் தகப்பனார் நமது மாபாருக்கு கொடுத்து இருக்கும் சுதந் தரத்தை நீங்கள் கவனியாமல் இருந்தாலும் நான் மனுவின் மூல்யமாக உங்களுக்கு தெரிவிக்காமல் மேற்படி சபையார் மூலமாய் பிரவேசிக்கக் கூடாது என்று நினைத்து இதை எழுதிக்கொண்டேன்.

5-வது மேல்படி சத்திர சிலாசாசநததையும், அச்சிட்டு உங்கள் மூலமாக பலருக்கும் தெரியும்படி அனுப்புகிறேன். மேல்படி தரும விசாரணைப்பற்றி என் தகப்பனார் முழு நம்பிக்கையோடு நமது மாபாருக்கு எழுதிவைத்து இருக்கும் அதிகாரத்தை கைசோரவிடாமல் நமது ஜாதிப் பொதுப் பணத்தில் ரூபா 200 செலவு மேல்படி தருமத்தை என்றும் நடந்து வரும்படி செய்வீர்களானால், புகழும் புண்ணியமும் நமது மாபார் யாவருக்கும் உண்டாகும் என்பது நிச்சயம்.

6-வது நான் என்னமோ எழுதினேன் என்று பராமுகமாய் இராமல் இரண்டு மாதத்திற்குள்ளாக நீங்கள் பிரவேசித்து மேல்படி தருமத்தை ஸ்தாபனம் செய்யாவிட்டால் மேல்படி தனாக்ஷக சபையாரைக் கொண்டு அவர்கள் மூலியமாய் எப்போதும் நடந்து வரும்படி கேட்டுக் கொள்ளப் போகிறேன்.

ஆனந்த௵
வைகாசிமீ 19௳

இப்படிக்கு,
(Sd.) வி. கெங்காதர முதலியார்.

---

௳ 25th December 1914

சிவமயம்

மகாகனம் பொருந்திய, சோழிய வேளாளர் மரபைச் சார்ந்த வெள்ளிவாயல்நாடு பெரியதனம் ம. மகாதேவ முதலியார் 1; வெ. தங்கவேலு முதலியார் 2; ஆகிய உங்களிருவருக்கும் திருமயிலாப்பூர் வி. கெங்காதர முதலியார் மிகவும் வணக்கத்துடன் தெண்டனிட்டு எழுதிக்கொண்ட மனுவு என்னவென்றால் :—

1913௵ எப்பிரல்மீ 2௳ எழுதிய கடிதம் மனுவுக்கு யாதொரு ஏற்பாடும் செய்யவில்லை. கால தாமிஷம் பண்ணிக் கொண்டு வந்தால் பிரயோசனப்படாது. ஏனென்றால், மேல்படி தரும சத்திரத்திற்கு வைத்திருக்கும் சொத்துக்கள் வி. ஞானசிகாமணி முதலியும், வி. சோமசுந்திர முதலியாரும், தோட்ட வரும்படியும், சத்திர வரும்படியும், துவாதசி கடை வரும்படியும், இவைகள் வரும்படியும் வாங்கி, கை ஆண்டு வருகிறார்கள். மேல்படி தரும தோட்டத்தில் இருக்கப்பட்ட வேலிகளையும், மரங்களையும், வெட்டி அனியாயம் செய்கிறார்கள். சத்திரமும் நாளுக்கு நாள்

விர்த்தி செய்யாமல் கெட்டுப்போகிறது. வி. சுந்திர முதலி யாருக்கு பவர் கான்சல் செய்த பிறகு சுமார் 500 ரூபா வரையில் கை ஆண்டுக் கொண்டுவந்து இருக்கிறார். மேல் படி தருமங்கள் கெட்டுப்போகிறபடியாலும், நம்முடைய உற வின் முறையார்களுக்கு அதிகாரம் கொடுத்து இருக்கிறார். நீங்கள் அதைப்பற்றி கவனிக்கிறதில்லை. இப்போதாவது மகாநாட்டுக்கூட்டம் ஏற்பாடுசெய்ய வேண்டியது. அப்படிக்கி ஏற்பாடு செய்யாவிட்டால் சில பெரிய மனுஷாள் முன்னிலை யில் மனுவு கொடுத்து மேல்படி தருமங்களை பார்த்துவரும் படியாய் ஏற்பாடு செய்யும்படி சொல்லி இருக்கிறார்கள். அப் படிக்கி கொடுத்துவிட்டால், எங்களுக்கும், ஜாதியாருக்கும், சுதந்தரம் கிடையாது. ஆகையால் நீங்கள் அதிக சீக்கிரத் தில் மேல்படி தருமத்தை குறித்து பிரயாசப்பட்டுத் தக்க ஏற்பாடு செய்தால் ஜாதியார் யாவருக்கும் பெரும் புண்ணிய மாய் இருக்கும். இது சங்கதி நீங்கள் கூட்டம் போட்டால், சிலாசாசனக் காப்பி அச்சிட்டு இருக்கிறேன். அப்போது அனைவருக்கும் கொடுக்கிறேன் இது சங்கதி அரியவும்.

இப்படிக்கு,
(சயன்) வி. கெங்காதர முதலியார்.

---

உ 5th September 1915

சிவமயம்

மகாகனம் பொருந்திய, சோழிய வேளாளர் மரபிற் சார்ந்த வெள்ளிவாயல்நாடு பெரியதனம் ம. மகாதேவ முதலி யார், வெ. தங்கவேலு முதலியார், மற்றுமுள்ள உறவின் முறையார் அவர்களுக்கு மயிலாப்பூர் வி. கெங்காதர முதலி யார் எழுதிக்கொண்ட மனுவு என்னவென்றால்:—

திருமயிலாப்பூர் தென்மாடவீதியில் 13-வது நெம்பர் தரும சத்திரம் தோட்டம் கடை விவகாரங்களை விசாரிக்கும் படியாயும், என்னை கலியாண காலத்தில் அவமானம் செய்ததும், தங்களுக்கு 1913ஸு ஏப்பிரல்மீ 2உ எழுதிய லெட்டர் 1; 1914ஸு டிசம்பர்மீ 25உ எழுதிய லெட்டர் 2; 1915ஸு ஜனவரிமீ 24உ எழுதிய லெட்டர் 3; இவைகளை அனுப்பியும் நீங்கள் அதைப்பற்றி கவனிக்காமல் இருக்கிறீர்கள். இப்போதாவது அதிக சீக்கிரத்தில் மேல்படி விவகாரங்களை மகாநாட்டு கூட்டத்தில் விசாரித்து மேல் கண்ட தருமங்களுக்கு விக்னம் நேரிடாமல், ஏற்பாடு செய்தால் பெரும் புண்ணியமாய் இருக்கும். சுந்தர முதலியார் இடம் சில ரிக்கார்ட்டு இருக்கிறது. அதுவும் மகாநாட்டு கூட்டத்தில் கொண்டு வரும்படியாய் ஏற்பாடு சொல்லவும், என்னிடத்தில் இருக்கப்பட்ட ரிக்கார்ட்டுகளும், நான் கொண்டு வருகிறேன் எனக்கு நீங்கள் மகாநாட்டு கூட்டம் வைக்கிற தேதி முன்னிட்டு எனக்கு ஒரு கடிதம் அனுப்பினால் நான் லீவு வாங்கிக்கொண்டு வருகிறேன்.

இப்படிக்கு,
(சயன்) வி. கெங்காதர முதலியார்.

---

சோழிய வேளாளர் மரபு, தரும சங்கத்தின் காரியதரிசிக்கு ஷை வி. கெங்காதர முதலியார் எழுதிய கடிதம்

*6th Septemper* 1915
Sali Street, No. 9, Mylapore.

ம-ா-ா-ஸ்ரீ,

சோழிய வேளாளர் மரபு தரும சங்கத்தின் காரியதரிசி அவர்கள் திவ்ய சமுகத்திற்கு :—

Door No. 16, சமுத்திர முதலியார் தெருவு,
மதராஸ்.

சென்னையை சார்ந்த திருமயிலாப்பூர் சாலைத் தெருவு 9-வது நெம்பர் வீட்டிலிருக்கும் இறந்துபோன வியாசர்பாடி விநாயக முதலியார் குமாரர் வி. கெங்காதர முதலியார் தெண்டனிட்டு எழுதிக்கொண்ட மனுவு என்னவென்றால்:—

1-வது எங்கள் தகப்பனாராகிய வி. விநாயக முதலியார் திருமயிலாப்பூர் ஸ்ரீ கபாலீஸ்வரர் கோவில் தென்னண்டை மாடவீதியில் 13-வது நெம்பர் தரும சத்திரத்தையும் அதற்கு வருமானம நுங்கம்பாக்கம் கோடம்பாக்கம் போகிற ஐரோட்டில் வடவண்டை வாடையில் 23-வது நெம்பர் தரும தோட்டத்தையும் மேல்படி சத்திரத்திற்கு சென்னையைச் சார்ந்த மந்தவெளி தெருவில் துவாதேசி கடை இரண்டையும் நேமித்து சூப்பிரிங் கோர்ட்டு ரிஜிஸ்டரும் உயில் எழுதி ரிஜிஸ்டர் செய்து இருந்தார். என் தமையனார் வி. (சோம) சுந்திர முதலியார் என்னிடத்தில் 1881 வருஷத்தில் மேல் கண்ட இரண்டு கடையினுடைய சாவியை வாங்கிக் கொண்டு மேல்படி வருமான துகை ஆக மொத்தம் ரூபாய் 10,000 வரைக்கும் அவர் யேகோ தேசத்தில் கை ஆண்டு வந்து இருக்குரார்.

2-வது வி. ஞானசிகாமணி முதலியார் தரும தோட்டத்தையும், தரும சத்திரத்தையும், இவைகள் வரும்படியை கையாண்டுக் கொண்டும் மேல்படி தரும தோட்டத்தில் இருக்கப்பட்ட பல விருக்ஷங்களையும், வேலிகளையும், மண்ணையும், விர்ப்பனை செய்து சுமார் 500 ரூபாய் வரையில் கை ஆண்டு கொண்டுவந்து இருக்கிறார். நாளுக்குநாள் தருமம் விர்த்தி இல்லாமல் குரவாய் போகிறபடியால் மேல்படி சங்

கத்தார் மேல்படி தருமத்தை கவனித்து தக்க ஏற்பாடு ஒரு மாதத்திற்குள்ளாக செய்யவேண்டியது அப்படிக்கு தாங்கள் செய்யாவிட்டால் கெவர்மெண்டார் ஏற்படுத்தி இருக்கிற தனரக்ஷக சபையார் முன்னிலேயில் மனுவு கொடுத்து விடு கிறேன் அதிக சீக்கிரத்தில் மேல்படி தருமங்களை சரியாய் நடந்துவரும்படியாய் தங்கள் மேலான கனத்தை மிகவும் பிரார்த்திக்கிறேன். எங்கள் தகப்பனர் ஏற்பாட்டின்படி மேல் படி தருமங்கள் சரியாய் நடக்கவில்லே. சிலாசாசன காப்பி யும் அச்சிட்டிருக்கிறது. அதையும் தங்கள் சபையில் முன் னிலேயில் அனேவருக்கும் கொடுக்கிறேன்.

இப்படிக்கு,
(Sd.) வி. கேங்காதர முதலியார்.

---

இந்த மனுவின்மேல் என்ன நடவடிக்கை நடத்தவேணு மென்று உத்தரவாகும்படி அக்கிராசனதிபதி அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

(Sd.) க. வேலாயுதமு,
*காரியதரிசி*, 20-9-15.

---

காரியதரிசி இது சம்பந்தமான ரிகார்டுகளை வர வழைத்து அதுகளை தகுந்த லாயர்களுக்கு காட்டி அபிப் ராயம் தெரிந்துகொண்டு பிறகு மீட்டிங்கில் வைக்கவும்.

(Sd.) ம. மகாதேவமு,
*அக்கிராசனதிபதி*, 29-9-15.

## வி. விநாயக முதலியார் குமாரர்கள் வி. சோமசுந்த்ர முதலியார், வி. கெங்காதர முதலியார், வி. ஞானசிகாமணி முதலியார் இவர்களை மகாநாட்டு கூட்டத்திற்கு வரும்படி நாட்டு பெரிதனக்காரர்கள் எழுதிய கடிதங்கள்

சென்னை,
27—6—16.

*இப்பவும் ம-ா-ா-ஸ்ரீ, வி. கெங்காதர முதலியார் அவர்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் நீங்கள் உங்கள் காலம் சென்ற தகப்பனார் வி. விநாயக முதலியார் ஏற்பாடு செய்து விட்டுபோன தர்ம விஷயத்தைப்பற்றி கொடுத்துக்கொண்ட மனுவை நாளது ஜூலை 1, 2, தேதிகளில் நடக்கப்போகிற மகாநாட்டு கூட்டத்தில் யோசிக்கப்போகிறபடியால் நீர் அக் காலையில் வந்திருந்து உம்முடைய தாவாவை சபையாருக்கு விவரித்துச் சொல்ல கேட்டுக்கொள்ளுகிறோம். வேணும்,*

(Sd.) ம. மகாதேவலு
(Sd.) வெ. தங்கவேலுலு

---

சென்னை,
27—6—16.

*இப்பவும் ம-ா-ா-ஸ்ரீ, வி. ஞாணசிகாமணி முதலியார் அவர்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் காலம் சென்ற உமது தகப்பனார் வி. விநாயக முதலியார் ஏற்பாடு செய்து விட்டுபோன தருமங்களைப்பற்றி உமது சகோதரர் ம-ா-ா-ஸ்ரீ, வி. கெங்காதர முதலியார் கொடுத்திருக்கும் மனுவை நாளது ஜூலை 1, 2, தேதிகளில் நடக்கப்போகிற மகாநாட்டு கூட்டத்தில் பத்தூரார் முன்னிலையில் பிரஸ்தாபித்து சபையார் அபிப்பிராயப்படி நடக்க உத்தேசித்திருப்பதால் தாங்கள்*

தயவு செய்து மேல்படி கூட்டத்திற்கு தவறாமல் வரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். வேணும்,

(Sd.) ம. மகாதேவலு
(Sd.) வே. தங்கவேலுலு

---

சென்னை,
27—6—16.

ம-ா-ா-ஸ்ரீ, வி. சோமசுந்திர முதலியார் அவர்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் காலம் சென்ற உமது நகப்பனார் வி. விநாயக முதலியார் ஏற்பாடு செய்துவிட்டுப்போன தருமங்களைப்பற்றி உமது சகோதரர் ம-ா-ா-ஸ்ரீ, வி. கெங்காதிர முதலியார் கொடுத்திருக்கும் மனுவை நாளது ஜுலைமீ 1, 2, தேதிகளில் நடக்கப்போகிற மகாநாட்டுக் கூட்டத்தில் பத்துராார் முன்னிலையில் பிரஸ்தாபித்து சபையார் அபிப்பிராயப்படி நடக்க உத்தேசித்திருப்பதால் தாங்கள் தயவுசெய்து மேல்படி கூட்டத்திற்கு தவறாமல் வரும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறோம். வேணும்,

(Sd.) ம. மகாதேவலு
(Sd.) வே. தங்கவேலுலு

---

## மகாநாட்டு கூட்டத்தின் நடவடிக்கையின் எக்ஸ்ட்ராக்ட்டு

1916ம்௵ ஜுலைமீ 1உக்குச் சரியான தமிழ் நள௵ ஆனிமீ 18உ சனிவாரம் மாலை 7-மணிக்கு திருவொற்றியூரில் ம-ா-ா-ஸ்ரீ, மருந்து கடைக்காரர் சத்திரத்தில் கூடிய சோழிய வேளாளர் மரபினர் மகாநாட்டுக் கூட்டத்திற்கு வந்தவர்கள் கையெழுத்து.

* * * *

மறுநாள் காலை 9-மணிக்கு கூட்டம் கூடப்பட்டது.

*   *   *   *

6-வது வி. கெங்காதரநாயுடு கொடுத்த மனுவை வாசிக்கப்பட்டது. நாட்டாரவர்கள் இவ் விஷயமாய் முன்னிருந்து வியாச்சியம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. அவர்களுக்கு உதவியாக அடியிற்கண்ட மெம்பர்களை விவகாரம் பார்க்க கமிட்டியாக ஏற்படுத்தப்பட்டது. இந்த கமிட்டியாருக்கு, இதர நபர்களை சேர்த்துக் கொள்ளவும், இவ்விஷயங்களை இவர்களில் மெஜாரட்டி அபிப்பிராயப்படி நடத்தவும், அதிகாரம் கொடுக்கப்பட்டது. இது விஷயமாக செலவுதொகைக்கு பொக்கிஷத்திலிருந்து சுமார் 100 ரூபாயிக்கு அதிகப்படாமல் எடுத்துக் கொள்ளவும். மரபாரிடம் இதைப்பற்றி சப்ஸ்கிரிப்ஷன் வசூல் செய்யலாம்.

கமிட்டி மெம்பர்கள்

1. ம. புருஷோத்தமநாயுடு
2. அ. இராஜாரத்தினநாயுடு
3. புதுவை தங்கவேலுநாயுடு
4. ஆயல். தங்கவேலுநாயுடு
5. க. சுப்பராயநாயுடு
6. செ. முத்துசாமிநாயுடு
7. க. சின்னகண்ணுநாயுடு
8. க. சொக்கலிங்கநாயுடு
9. சி. சிங்காரநாயுடு
10. த. வெள்ளையப்பநாயுடு
11. செ. சுப்பிரமணியநாயுடு
12. க. வேலாயுதநாயுடு

ஷை 6-வது தீர்மானத்தை ஷை நபர்களில் 2, 9, 10 & 12 இவர்களுக்கு கடிதம் மூலமாய் தெரிவிக்க வேண்டியது.

*   *   *   *

(Sd.) ம. மகாதேவநாயுடு
(Sd.) வே. தங்கவேலுநாயுடு

## வக்கீல் சிவப்பிரகாச முதலியார் எழுதிய கடிதங்கள்

வி. சிவப்பிரகாச முதலியார்,
பி. ஏ., பி. எல்., ஐகோர்ட்டு வக்கீல்.

ஆபீஸ் நெ. 1, தம்பு செட்டி தெருவு,
மதருஸ், ஆகஸ்டு 2, 1916.

இருப்பிடம் நெ. 105, ஸாமிநாய்க்கன் தெருவு,
சிந்தாதரிப்பேட்டை, மதருஸ்.

விதவுட் ப்ரேஜுடிஸ்

1. ம-ா-ா-ஸ்ரீ, வி. சோமசுந்திர முதலியார் (வியாசர்பாடி விநாயக முதலியார் கடைசி உயிலுக்கு சர்வைவிங்க எக்சிகூட்டர்) அவர்களுக்கு இருப்பிடம் நெ. 14, சாலை தெருவு, மயிலாப்பூர், மதராஸ்.

2. ம-ா-ா-ஸ்ரீ, வி. கெங்காதர முதலியார் அவர்களுக்கு இருப்பிடம் நெ. 9, சாலை தெருவு, மயிலாப்பூர், மதராஸ்.

3. ம-ா-ா-ஸ்ரீ, வி. ஞானசிகாமணி முதலியார் அவர்களுக்கு பேபர் கரென்சி ஆபீஸ் அக்கவுன்ட்ஸ் பிராஞ்சு போர்ட்டு செண்டுஜார்ஜ் மதராஸ்.

பிரியமுள்ள அய்யா!

காலம் சென்ற வியாசர்பாடி விநாயக முதலியாருடைய தர்ம சத்திரத்தைப்பற்றி நடவடிக்கை நடத்த தங்களுடைய ஜாதியார் கூட்டத்தில் ஏற்படுத்திய கமிட்டியின் ஜாயிண்டு செகிரிடெரீகளாகிய மெஸர்ஸ் C. முத்துசாமி முதலியார், C. சொக்கலிங்க முதலியார் அவர்களுடைய வேண்டுகோளின் படி விஷயங்களைப்பற்றி பேசி கோர்ட்டுக்கு போகாமலே ஒரு

ஏற்பாடு செய்ய முடியாதா என்று யோசிக்க என்னையும் கமிடிமெம்பர்களையும் நாளை 6ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-மணிக்கு என் இருப்பிடத்தில் தாங்கள் தயவுசெய்து சந்திக்கும்படி தங்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு, விசுவாசமுள்ள,
(Sd.) வி. சிவப்பிரகாசம்.

---

**வி. சிவப்பிரகாச முதலியார்,**
பி. ஏ., பி. எல்., ஐகோர்ட்டு வக்கீல்.

ஆபீஸ் நெ. 1, தம்பு செட்டி தெருவு,
மதராஸ், 6 ஆகஸ்டு 1916

இருப்பிடம் நெ. 105, ஸாமிநாய்க்கன் தெருவு,
சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

வி. சோமசுந்திர முதலியார் எஸ்கொயர்,
மயிலாப்பூர்.

விதவுட் ப்ரேஜுடீஸ்

பிரியமுள்ள அய்யா!

தாங்கள் இன்று காலையில் என்னைப் பார்த்தபிறகு உத்தேசித்த கூட்டத்தை 1916ஹு ஆகஸ்டுமீ 9 தேதி புதன் கிழமை மாலை 6-மணிக்கு மேல்கண்ட என் இருப்பிடத்தில் வைத்துக் கொள்வதாக தீர்மானித்தேன். தாங்கள் இன்று காலை எனக்கு வாக்களித்தது போல் தவராமல் வருவீர்களென்று நம்புகிறேன்.

தங்கள் விசுவாசமுள்ள,
(Sd.) வி. சிவப்பிரகாசம்.

இதுபோலவே கடிதங்கள்
சர்வே செய்ய அட்ரஸ், 14, சாலை தெருவு. ம-ா-ா-ஸ்ரீ, வி. ஞானசிகாமணி முதலியாருக்கு, வி. கெங்காதர முதலியாருக்கு.

---

## சே. முத்துசாமி முதலியார் க. சோக்கலிங்க முதலியார் இவர்களுக்கு மேற்படி வி. கேங்காதர முதலியார் எழுதிய கடிதம்

12*th* *March* 17.

உ

திருச்சிற்றம்பலம்

ம-ா-ா-ஸ்ரீ, முத்துசாமி முதலியார், ம-ா-ா-ஸ்ரீ, க. சொக்கலிங்க முதலியார் உங்கள் இருவருக்கும் மயிலாப்பூர் வி. கெங்காதர முதலியார் யெழுதிக்கொண்டது யென்ன வென்றால் நான் உங்களுக்கு என் தகப்பனர் தர்மத்துக்கு ஏற்பாடு செய்த விஷயத்தைப் பத்தியும் 10 ஆராருக்கும் அதிகாரம் கொடுத்து இருப்பதைபற்றி நான் அநேக காகிதம் எழுதியும் கவனிக்காமல் இருக்கிறீர்கள். அதைப்பத்தி தக்க முயர்ச்சியும் யெடுக்காமல் காலதாமஷம் செய்துவருகிறீர்கள். அவர் அவர்கள் கரும வரும்படியை கை ஆண்டுக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் நீங்கள் அதிக சீக்கிரத்தில் வியாச்சியம் செய்ய வேண்டியது. அப்படிக்கு செய்யாவிட்டால் கெவர்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிற தனரக்ஷக சபையார் அவர்களுக்கு நானும் நீங்களும் மனுவு கொடுத்து விட்டால். அவர்கள் தர்மத்துக்கு எற்படுத்திருக்கிற சொத்து முழுவதும் அவர்கள் பெத்துக்கொள்வார்கள்.

## வி. ஞானசிகாமணி முதலியார் கையாண்டு வந்து இருக்கிற கணக்கு விவரம்

1894ஆ முதல் 1901ஆ வரைக்கும் வருஷம் 8க்கு வருஷம் 1க்கு குயிட்ரெண்டு அசஸ்மெண்டு வரி மொத்தம் கட்டவேண்டிய ரூபாய் 68-0-11 போக வருஷம் 1க்கு இருப்பு ரூபாய் 96-15-1 ஆக வருஷம் 8க்கு இருப்பு ரூபாய் 775-8-8 மேல்படி சத்திரம் திரக்காமல் அலங்காரம் வேடிக்கை செய்யாமல் நிருத்திவிட்டார். அநேக ஜனங்களுக்கு தெரியவரும்.

1908ஆ வி. சுந்திர முதலியாருக்கு பவர் கான்சல் செய்து அது முதல் 1917ஆ ஜனவரிமீ வரைக்கும் தோட்டம் கந்தாயம் அசஸ்மெண்டு குயிட்ரெண்டு வரி சத்திர தர்மம்போக மீதி ரூபாய் 959-10-4.

1912ஆ செப்டம்பர்மீ 16உ முதல் 1917ஆ ஜனவரிமீ 31உ வரையிக்கும் அசஸ்மெண்டு குயிட்ரெண்டு வரி போக மீதி ரூபாய்*129-2-0 இந்த தொகை தர்ம சத்திர கணக்கு விபரம் எழுதி நான் வைத்துக்கொண்டிருக்கிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| சத்திரம் திறக்காமல் இருந்த ரூபாய் | ... | 775 | 8 | 8 |
| சத்திரம் திறந்து சிலவுசெய்த ரூபாய் போக இருப்பு ரூபாய் | ... | 959 | 10 | 4 |
| சத்திரம் குடிக்கூலி வரவு ரூபாய் | ...* | 129 | 12 | 0 |
| ஆக மொத்த ரூபாய் | ... | 1864 | 15 | 0 |

(Sd.) V. GENGATHARA MUDALY.

* குறிப்பு :— 10 அணா வித்தியாசம் காணப்படுகிறது.

## (வி. விநாயக முதலியார் மூத்தகுமாரரும் உயிலுக்கு எக்ஸிகூட்டருமாகிய) வி. சோமசுந்தர முதலியார், (லாண்ரிகார்டு தாசில்தார் முன்னேயில்) கொடுத்தவாக்கு மூலம்

1868ஞு டிசம்பர்மீ 19உயில் எழுதின உயில் நகல் என்னிடமில்லை எப்படியோ கிழிந்து போய்விட்டது. 1851ஞு தர்மத்திற்கு சொத்து பிரதிஷ்டை பண்ணின விஷயமான தஸ்தாவேசைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது. சிரீராமுலு கொடைக்கூலி பத்திரம் நான் கொண்டுவந்திருக்கிறேன் கலெக்டர் சர்ட்டிபிகேட்டு நெம்பர் 2308க்கு சம்மந்தப்பட்ட வீடு கடைகளை 15 வருஷத்திற்கு நாகுலு கொண்ட சிரீராமுலுக்கு சுயாதீன அடமானத்திற்கு வைத்த தஸ்தாவேசு 724 நெம்பராக 23-3-82ல் மட்ராசில் ரெஜிஸ்தராகி இருக்கிறது. மட்ராஸ் போஸ்டு மாஸ்டர் ஜெனரல், முரிலிதாஸ் ராமதாஸ் இவர்கள் இவர்களிடமிருந்து வாங்கின குதுவைப் பத்திரங்களை நான் கொண்டுவரவில்லை. இன்னம் கண்டுபிடிக்கவில்லை கண்டுபிடித்து அடுத்த வாய்தாவில் நான் கொண்டுவருகிறேன். முனிஸிபாலிடியாரிடமிருந்து கட்டடம் ரிபேர் வகைராவுக்கு உத்தரவு பெற்ற பிளான் என்னிடமில்லை. ஷை கட்டடம் கட்டினபோது லாயர் நோட்டீஸ் ஏதாவது வந்ததோ வரவில்லையோ ஞாபகமில்லை. அதற்கு ஏதாவது பதில் கொடுத்தேனே என்னவோ எனக்குத் தெரியாது. ரிப்பேருக்கு முந்தின வருஷங்களில் நான் முனிஸிபாலிடிக்கு கொடுத்த வரிக்கு ரசீது என்னிட மிருக்கிறது; நான் கொண்டு வரவில்லை. அடுத்த வாய்தாவில் கொண்டுவருகிறேன்; ஷை R. S. No. 11026ல் இரண்டு கடைகளை தர்மத்துக்கு விட்டு என்னை மேற் தர்மத்தை நடத்தச் சொல்லி யிருக்கிறார்; அவர் தர்மத்திற்கு விட்ட மாதிரி

இப்போது கடையில்லை. இப்போது அதை நான் பெரிதாக்கி விர்த்தி பண்ணி யிருக்கிறேன். என்தகப்பன் கடை எழுதி வைத்தபோது கடை ஒவ்வொன்று சுமார் 5, 5½ அடி அகல மும் 6 அடி நீளமிருக்கும்; அதன் பின்னிட்டுநான் முனிஸி பாலிடியாரிடமிருந்து கடைக்கு முன் பக்கத்தில் 426 சதுர அடி 213 ரூபாய்க்கு வாங்கி கொடைக்கூலிக்கு வருகிறவர்கள் சவுகரியத்தை அனுசரித்து நான் கட்டடம் கட்டி கொடைக் கூலிக்கு கொடுத்து வருகிறேன். தர்மத்தை நடத்தும்படி என்னையும் திருவேங்கிட முதலியாரையும் என் தகப்பனார் நியமித்தார். திருவேங்கிட முதலி இறந்துபோய் விட்டார். இறந்துபோனவர்களுக்கு பதில் நியமிக்கிறதைப் பற்றியும் டிரஸ்டிகளைப் பற்றியும் உயிலில் கண்டிருக்கிறது. நான்தான் இப்போது ஷை சொத்தை மானேஜ் பண்ணுகிறேன். என் தகப்பனார் 4 டிரஸ்டிகளை நியமித்திருந்தார். அவர்களு மிறந்துபோய் விட்டார்கள். இப்போது நான் ஒருவன் மாத்தி ரம் இருக்கிறேன். தர்ம சொத்தை தனியாக சப் டிவிஷன் செய்து என்னை தர்மகர்த்தாவாக நியமிக்க கோருகிறேன். தர்ம சொத்து இப்போது கடையாக யிருக்கிறது. நான் முனிசிபாலிடியிலிருந்து வாங்கின பாகத்தில் முன்னிருந்த தர்ம சொத்து கடைக்கு நேராக இருக்கும் பாகத்தை தர்ம சொத்து கடையுடன் சேர்த்து கடையாக வைத்திருக்கிறேன். தர்ம சொத்துக்காக ஏற்பட்டிருக்கும் கடையை நான் நேரில் காட்டுகிறேன். அந்தப் பிரகாரம் சப் டிவிஷன் செய்யலாம். மைலாப்பூரில் ஒரு சத்திரமும், நுங்கம்பாக்கத்தில் ஒரு தோட்டமும், தர்மத்திற்கு விட்டிருக்கிறது. அதற்கு நான் தர்மகர்த்தாவாகப் பார்த்து வந்தேன். தர்மகர்த்தாவாக இருப்பதற்கு எனக்குத்தான் பாத்தியம். ஆனால் இப்போது 4, 5, வருஷமாக நான் பார்க்கிறதில்லை. கங்காதர முதலி யாரும் ஞானசிகாமணி முதலியாரும் அதை பார்த்து வரு

கிறார்கள். அதை என் சுவாதீனம் பண்ணிக்கொள்ளும்படி கோர்ட்டில் தாவா செய்ய யோசித்திருக்கிறேன்.

(Sd.) வி. சோமசுந்தர முதலியார்,

Read over and acknowledged to be correct.

(Sd.) J. S. ASIRVATHAM,
*L. R. Thasildar*, 3-4-17.

True copy.

J. S. ASIRVATHAM,
*Land Records Thasildar.*

---

ஜார்ஜ்டவுன் அண்ணுபிள்ளை வீதி நெ 27 வீட்டிலிருக்கும் (வி. விநாயக முதலியார், குமாரர்) வி. ஞானசிகாமணி முதலியார் லாண்டு ரிகார்டு தாசில்தார் முன்னிலையில் கொடுத்த வாக்கு மூலம்

1881ஞ டிசம்பர்மீ 25உ ப. முனிசாமி செட்டியாரும், 1881ஞ டிசம்பர்மீ 20உ நாகலிங்க முதலியாரும், 1882ஞ வி. சோமசுந்திர முதலியாரும், எழுதிக்கொடுத்த வாடகைப் பத்திரங்களை ஆஜர் செய்திருக்கிறேன்.

1874ஞ மேமீ 13உ பல்லாவரம் முனுசாமி செட்டி சோமசுந்திர முதலியாருக்கும், சரவணம்மாளுக்கும், தர்மத்திற்கு விட்ட கடையில 225 நெம்பர் கடைக்கு எழுதிக் கொடுத்த வாடகைக்கிரிமெண்டை ஆஜர் செய்கிறேன். அது ரெஜிஸ்தராகவில்லை. 1881ஞ டிசம்பர்மீ 25உ ப. முனுசாமி செட்டி, கெங்காதர முதலியார், ஞானசிகாமணி முதலியார் இவர்களுக்கு தருமத்துக்கு தகப்பனால் விடப்பட்ட 225 நெ. கடையை மாதம் 3 ரூபா குடிக்கூலிக்குப்

பேசி எழுதிக்கொடுத்த அக்கிரிமெண்டு ஆஜர் செய்கி றேன். இதுவும் ரிஜிஸ்தராகவில்லை. 224 நெ. கடைக்கு நாகலிங்க முதலியார் மேற்சொன்ன இருவருக்கும் 1881ஸ்ரீ டிசம்பர்மீ 20உ எழுதிக்கொடுத்த குடிக்கூலி அக்ரிமெண் டையும் ஆஜர் செய்கிறேன். அதுவும் ரெஜிஸ்தராகவில்லை. 1882ஸ்ரீ செப்டம்பர்மீ 22உ வி. சோமசுந்தர முதலியார் 224, 225 நெ. கடைகளுக்கு 7 ரூபா வீதம் குடிக்கூலிக்கு எழுதிக்கொடுத்த அக்ரிமெண்டையும் ஆஜர் செய்கிறேன். அதுவும் ரெஜிஸ்தராகவில்லை, ஸ்டாம்பு கடுதாசியிலும் எழுத வில்லை. இதில் கண்ட கடைகளிரண்டும் இப்போது சோம சுந்திர முதலியார் கைப்பற்றிலிருக்கிறது. 36 வருஷமாக அவர் சுவாதீனத்தில் இருக்கிறது. வாடகை எங்களுக்குக் கொடுக்கிறதில்லை. தர்மத்திற்கு அவரையே எக்சிக்கூடராக நியமித்திருந்தது; அவரோடு திருவேங்கட முதலியாரையும் நியமித்திருந்தது. திருவேங்கட முதலியார் காலமாகிவிட்டார். இப்போது ஷை கடை வருமான மெல்லாம் சோமசுந்தர முதலியார் கைப்பற்றிலிருக்கிறது. எங்களுக்கு முன் ஒப் பந்தப்படி சோமசுந்தர முதலியார் வாடகை கொடுக்காததை யிட்டு நாங்கள் தாவா பண்ணவில்லை. அக்கிரிமெண்டில் கண்ட ஞானசிகாமணி முதலியார் நான்தான்.

(Sd.) V. GNANASIGAMONI,
14-4-17.

(By me)
(Sd.) J. S. ASIRVATHAM,
*L. R. Tahsildar.*

True copy.

(Sd.) J. S. ASIRVATHAM,
*L. R. Tahsildar.*

---

## மேற்படி வி. சோமசுந்தர முதலியார் (லாண்டு ரிகார்டு தாசில்தார் முன்னிலையில் கொடுத்த) வாக்கு மூலம்

**14-4-1917.**

இன்று உயிலுக்கு நகல் வீட்டிலிருந்தது. ஆஜர் செய்கிறேன். அது சர்டிபைட் நகலல்ல. என் சொந்த நகல். வேறு தஸ்தாவேஜு கொண்டுவரவில்லை. ஒரிஜினல் உயிலாவது சர்ட்டிபை ஆன உயிலாவது என்னிடமில்லை.

1882ஹூ செப்டெம்பர்மீ 22உ சோமசுந்தர முதலியார் கெங்காதர முதலியார், ஞானசிகமாணி முதலியார் இவர்களுக்கு 2 கடைகளுக்கு 7 ரூபா வீதம் வாடகைப் பத்திரம் எழுதிக் கொடுத்ததில் வி. சோமசுந்திர முதலியார் என்று கையெழுத்து செய்திருப்பது என் கையெழுத்தோ அல்லவோ எனக்குத் தெரியவில்லை.

(Sd). வி. சோமசுந்தர முதலியார்.

(By me)

(Sd.) J. S. ASIRVATHAM,
*L. R. Tahsildar.*
**14-4-17.**

True copy.

(Sd.) J. S. ASIRVATHAM,
*L. R. Tahsildar.*

## க. சோக்கலிங்க முதலியார், சே. முத்துசாமி முதலியார், இவர்களுக்கு மேற்படி வி. கெங்காதர முதலியார் எழுதிய கடிதம்

25*th January* 1918.

*சிரஞ்சீவி சொக்கலிங்க முதலியார் அவர்கள் சமுகத்திற்கும், முத்துசாமி முதலியார் அவர்கள் சமுகத்திற்கும், மயிலாப்பூர் வி. கெங்காதர முதலியார் எழுதிக்கொண்டது என்னவென்றால் :—*

*என் தகப்பனார் விநாயக முதலியார் ஏற்பாடு செய்த தர்ம சத்திரம், தோட்டம், கடை இவைகளுடைய வருமானத்தைக்கொண்டு தர்மம் நடத்தும்படியாய் உயில்சாதனம் எழுதி இருந்தார். அதைப்போல சரிவர நடக்கவில்லை. நான் அநேக விசை காகிதம் எழுதியும் கவனியாமல் இருக்கிறீர்கள். சத்திரம் எங்கேயாவது குடிக்கூலிக்கு விட்டால் மாதம் ரூபாய் 15 வருமானம் வரத்தகுந்தது. அதை வி. ஞானசிகாமணி முதலியார் முன்கட்டு பின்கட்டு இவைகளுக்கு மாதம் குடிக்கூலி ரூபாய் 3—8—0 ஆக விட்டு இருக்கிறார். தர்ம சத்திரம் நாளுக்கு நாள் ரொம்பவும் கிலமாய் இருக்கிறது. தோட்டமும் ரொம்பவும் கிலமாய் இருக்கிறது. வருஷத்தில் ரூபாய் 50 செலவு செய்துவிட்டு மற்றதை கை ஆண்டு கொண்டு வருகிறான். வெளியாருக்கு தர்மம் செய்ததுபோல் பகட்டு செய்துகொண்டு வருகிறான். ஆகையால் நீங்கள் தக்க ஏற்பாடு செய்து வியாச்சியம் நடத்தப் போகிறதில்லே. சில மனுஷாள் எனக்குச் சொன்னதாவது: கெவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிற தனரக்ஷக சபையார் இடம் மனுவு கொடுத்து விட்டால் அவர்கள் தருமத்தை யேற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகையால் நம்முடைய பந்துக்கள் 10 பேர்களும் எனக்குக் கையொப்பம் செய்துகொடுத்தால் நான் அதைக்*

கொண்டு மனுவு செய்து கொள்ளுகிறேன். ஏனென்றால் என் தகப்பனார் ஜாதியாரைப் பார்க்கும்படியாய் தர்மத்தை நடத்த ஏற்பாடு செய்தார். அதற்காகத்தான், நீங்கள் எனக்குக் கையொப்பம் செய்து அனுப்பினால், நான் அதைக்கொண்டு மனுச் செய்து கொள்ளுகிறேன். எனக்கு உடனே பதில் எழுதவும். இதைப்பற்றி தங்களுக்கு பெரும் புண்ணியம். அதிக சீக்கிரத்தில் தர்மத்தை வியாச்சியம் செய்ய எனக்கு நேர்யிட்டு இருக்கிறார்கள்.

Sala Street, No. 19, Mylapore.

இப்படிக்கு,
(Sd) V. GENGATHARA MUDALY.

---

## ப்ளெயிண்டு

* மதராஸ் ஐகோர்டு ஆப் ஜுடிகேசரில் ஆர்டினரி ஒரிஜினல் ஸிவில் ஜுரிஸ்டிக்ஷன் சூட்டு நெ. **97** ஆப் **1918.**

பிட்வீன் :

1. C. சொக்கலிங்க முதலி,
2. C. முத்துசாமி முதலி, } வாதிகள்.

அண்டு

1. V. சோமசுந்தர முதலி,
2. V. கெங்காதர முதலி,
3. V. ஞானசிகாமணி முதலி, } பிரதிவாதிகள்.

மேற்கண்ட வாதிகள் பின்வருமாறு சொல்லுகிறார்கள்

* ஐகோர்ட்டு சூட் நெ. - 97-ஆப் 1918-ல் சம்பந்தப்பட்ட ரிகார்டுகளில், இங்கிலீஷில் இருந்ததை தமிழில் மொழி பெயர்த்து, இருக்கிறது.

*வாதிகள் :—*

1. C. சொக்கலிங்க முதலி, 1-வது வாதி கவர்ன் மெண்டு உத்தியோகஸ்தர், குடியிருப்பு 12, சந்திரப்பன் தெருவு, ஜார்ஜ்டவுன், மதராஸ்; C. முத்துசாமி முதலி, 2-வது வாதி, கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர், குடியிருப்பு நெ. 12, சந்திரப்பன் தெருவு, மதராஸ். எல்லா நோடீசு களும், புராஸெஸ்களும் வாதிகளுக்கு சர்வ்செய்வதற்கு வக்கீல் அட்ரஸ் நெ. 15, வக்கீல்ஸ் சேம்பர்ஸ், ஐகோர்ட்டு பில்டிங்ஸ், மதராஸ்.

*பிரதிவாதிகள் :—*

2. V. சோமசுந்தர முதலி, 1-வது பிரதிவாதி, பூஸ்திதி வந்தர், குடியிருப்பு நெ. 14, சாலைத் தெருவு, மயிலாப்பூர், மதராஸ்; V. கெங்காதரமுதலி, 2-வது பிரதிவாதி, குமஸ்தா, குடியிருப்பு நெ. 14, கள்ளுகாரன் தெருவு, மயிலாப்பூர், மதராஸ்; V. ஞானசிகாமணி முதலி, 3-வது பிரதிவாதி, கவர்ன்மெண்டு ஸர்வெண்டு, குடியிருப்பு நெ. 27, அண்ணா பிள்ளை வீதி, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

3. 1851௵ ஜூன்மீ 17ந்தேதி ரிஜிஸ்டர் செய்யப் பட்ட ஒரு சாஸனத்தால் காலம் சென்ற வி. விநாயக முதலியார் இந்த ஷெட்யூலின் 1, 2, ஐடங்களாக விவரித்த சொத்துக்களைத் தருமத்துக்கு பிரதிஷ்டை செய்து 2-வது ஐடமாகிய தோட்டத்தின் வரும்படியைக்கொண்டு 1-வது ஐடமாகிய சத்திரத்தில் பிராமணரை வைத்து, சத்திரத்தில் தீபம் ஏற்றவும், ஸ்வாமி தெருவில் வரும்போது தீபாராதனை செய்யவும், தண்ணீர் கொடுக்கவும், மயிலாப்பூரில் ஸ்ரீ கபா லீஸ்வரர் பிரமோற்சவ காலத்தில் சத்திரத்தை அலங்காரம் செய்து எதிரில் பந்தல் போடவும், அக்காலத்தில் இன்னும் மற்ற சிலவுகளைச் செய்யவும் ரிப்பேர் செய்யவும் வரிகட்டவும்

ஏற்படுத்தினார். ஷை சாஸனத்தில் சத்திர தருமங்களை ஷை விநாயக முதலியாரின் ஜாதியாராகிய சோழிய வேளாள மரபினருக்கு பொது வென்று யேற்படுத்தி யிருக்கிறது. இந்த சாஸனத்தை பகிரங்கப்படுத்தும் பொருட்டு 1-வது ஐடமாகிய சத்திரத்தின் வெளிச்சுவரில் ஒரு சிலாசாஸனம் 1852 வருஷத்தில் அமைத்தார்.

4. மேற்சொன்ன வி. விநாயக முதலியார் 1868௵ டிசம்பர்மீ 19ஂவுயில் உயில் எழுதி ரிஜிஸ்தர் செய்துவிட்டு 1868௵ டிசம்பர்மீ 21ஂதேதி காலமாய் விட்டார். இந்த உயிலினால், ஷெட்யூலின் 3-வது ஐடமாகிய இரண்டு கடைகளையும் மேற்சொன்னபடி தருமத்துக்கு வைக்கப்பட்ட இரண்டு சொத்துக்களுடன் தருமத்துக்கு வைத்து இந்தக் கடைகளில் வரும் குடிக்கூலியைக் கொண்டு துவாதசி தோறும் ஷெட்யூலின் ஐடம் 1 ஆகிய சத்திரத்தில் மேற் சொன்ன தருமங்களைச் செய்வதுடன் பிராமண போஜனம் செய்விக்கும்படியும் கட்டளையிட்டார்.

5. இத்தருமங்களை மானேஜ் செய்வதற்கு டெஸ்டேடரின் (உயில் எழுதினவரின்) மூத்தகுமாரரும் இதில் 1-வது பிரதிவாதியுமாகிய V. சோமசுந்தர முதலியாரையும், தன் மருமக பிள்ளையாகிய திருவேங்கட முதலியாரையும், டெஸ்டேடர், எக்ஸிகூடர்களாக நியமித்தார். மேற்படி உயிலில் மேற்படி தருமங்களின் மானேஜ்மெண்டை எக்ஸிகூடர்கள் சரியாய் நடத்துவதை மேல்விசாரணை பார்ப்பதற்கு தன் ஜாதியாராகிய க. கந்தசாமி முதலியார், செ. முத்துசாமி முதலியார், வெ. ராஜரத்தின முதலியார், ம. சின்னப்ப முதலியார் நாலுபேரை நியமித்தார். இந்த எக்ஸிகூடர்கள் தருமத்தைச் சரியாய் மானேஜ் செய்யாதபக்ஷத்தில் அவர்களை நிவர்த்திசெய்து மற்றவரை நியமிக்க அதிகாரங் கொடுத்தார். இந்நால்வரில் யாரே

னும் ராஜீகம் தெய்வீகம் அடைந்தால் மற்றவர்கள் காலியான ஸ்தானத்திற்கு பதில் நியமனம் செய்யும்படி ஏற்படுத்தினர். இந்த மேல் விசாரணைகமிடிக்கு, எக்ஸிகூடர்கள் ஆறுமாதத்திற்கொருமுறை கணக்கு கொடுக்கும்படி உயிலில் கண்டிருந்தார். இந்த கமிட்டி மெம்பர்கள் எல்லாம் அநேக நாள்களுக்கு முந்தி காலமாய் விட்டார்கள். அவர்கள் ஸ்தானத்தில் இப்போது ஒருவருமில்லை.

6. மேற்படி திருவேங்கட முதலியார் எக்ஸிகூடராக நடவடிக்கை நடத்தவில்லை. தருமங்களை மானேஜ் செய்யவுமில்லை. அவர் 1914ஞ காலமாய் விட்டார். 1873ஞ வரையில் 1-வது பிரதிவாதி தானே சுதாவில் தருமங்களை மானேஜ்செய்து வந்தார். அப்போது அவருக்கும் அவர் மாற்றன்னையும், அப்போது மைனர்களாயிருந்த 2, 3 பிரதிவாதிகளின் தாயாரும் கார்டியனுமாகிய சரவணம்மாளுக்கும் தருமபரிபாலனம் உள்பட விவாதங்கள் ஏற்பட்டு மத்தியஸ்தரின் தீர்மானத்துக்கு விடப்பட்டன. அவர்கள் ஏற்படுத்திய அவார்டுபடி பிரதிவாதிகள் முறைபோட்டுக்கொண்டு 1-வது பிரதிவாதி மூன்று வருஷத்திற்கும், 2, 3 பிரதிவாதிகள் ஆறுவருஷத்திற்கும், தருமம் பார்க்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

7. மேற்படி மத்தியஸ்தர் அவார்டுபடி 1881ஞ டிசம்பர் மாதத்தில் தருமசொத்துகள் 2, 3 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருந்தன. 1882ஞ செப்டெம்பர்மீ 22ந்தேதி 1-வது பிரதிவாதி இந்த ஷெட்யூலின் 3-வது ஐடம் ஆகிய இரண்டு கடைகளை 2, 3 பிரதிவாதிகளிட மிருந்து குடிக்கூலிக்கு எடுத்துக்கொண்டார். அதுமுதல் 1-வது பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு குடிக்கூலி கொடுக்காமலும் உயிலின் ஷரத்துப்படி அதை தருமத்துக்கு உபயோகப்படுத்தாமலும்

தானே சுவாதீனத்திலிருக்கிறார். ஷெட்யூலில் சொல்லப்பட்ட 1, 2 ஐடங்களை தங்கள் சுவாதீனத்தில் வைத்திருந்த 2, 3 பிரதிவாதிகள் மேற்படி தருமங்களை 1908ஹு வரையில் அசிரத்தையாய் செய்து வந்தனர். அப்போது அவர்களுக்குள் வித்தியாசம் நேரிட்டு ஐடம் 1, 2 களின் மானேஜ்மெண்டி லிருந்து 3-வது பிரதிவாதி தன்னுடைய மூத்த சகோதர ராகிய 2-வது பிரதிவாதியை நீக்கிவிட்டார். 1-வது ஐடம் ஆகிய சத்திரத்தில் பிராமண போஜனம் அநேக வருஷங் களுக்குமுன் நின்றுபோய் விட்டது. அநேக வருஷங்களாக தண்ணீர்ப் பந்தலும் வைக்கிறதில்லை.

8. 1882ஹு செப்டெம்பர்மீ முதல் 1-வது பிரதிவாதி ஷெட்யூலின் 3-வது ஐடம் ஆகிய இரண்டு கடைகளை தானே ஸ்வாதீனத்தில் வைத்திருக்கிறார். 1908 வருஷம் முதல் 3-வது பிரதிவாதி ஷெட்யூலின் 1, 2 ஐடங்களாகிய சத்தி ரத்தையும் தோட்டத்தையும் தானே சுவாதீனத்தில் வைத் திருக்கிறார். மேலும் தருமங்கள் அச்ரத்தை செய்யப்பட்டன. சொத்தைக் கொடுத்தவரும் (Donor) இவர்களின் தகப்பனு ரும் ஆகிய விநாயக முதலியாரின் தருமத்தை அவர் இஷ்டப் பிரகாரம் நடத்திவைக்கவும், ஒழுங்கின்மையைத் திருத்தவும் 2-வது பிரதிவாதி யாதொன்றும் செய்யவில்லை.

9. ஷெட்யூலின் 3-வது ஐடம் ஆகிய இரண்டு தரும கடைகளுக்கு மேற்கிலும், வடக்கிலும், கிழக்கிலும், உள்ள கடையும் வீடும் 1-வது பிரதிவாதியின் சொந்த சொத்து. தருமகடைகளில் ஒவ்வொன்றும் இரண்டு அறைகள் கொண் டது; சுவர்களும், கூரையும், உள்பட இவைகளின் வடக்கு தெற்கு அளவு 21 அடி 9 அங்குலம், கிழக்கு மேற்கு அளவு 7 அடி $10\frac{1}{2}$ அங்குலம். இவைகளின் தென்புறம் அத்து ரோட்டை அடுத்த பப்ளிக்நிலம்.

10. சுமார் 1881ஸு டிசம்பர் மாதத்தில் 1-வது பிரதிவாதி தரும கடைகளுக்கு எதிரிலும், இவைகளுக்கு மேற்கிலும் கிழக்கிலும் உள்ள தன் சொந்த கடை வீடு இதுகளுக்கு எதிரிலும் உள்ள நிலத்தை வாதிகள் கேள்வி பட்ட பிரகாரம் தரும பணத்தைக்கொண்டு மதராஸ் கார் பொரேஷனிடம் கிரயம் பெற்றார். இவ்விதமாக கிரயம் பெற்ற நிலமானது வடக்கு தெற்கு 12 அடி அளவும், கிழக்கு மேற்கு 35 அடி 6 அங்குலம் அளவுடையது. இப்படிக் கிரயம் பெற்றதற்கு பிந்தி தருமத்துக்குச் சொந்தமான ஒவ் வொரு கடையும் வடக்கு தெற்கு 33 அடி 9 அங்குலம், கிழக்கு மேற்கு 7 அடி 10½ அங்குலம் உடையதாயிற்று. 1895-ம் வருஷத்திய ரீ சர்வேப்படி ஒவ்வொரு தரும கடை யின் வடக்கு தெற்கு நிகளம் 36 அடி 9 அங்குலம்.

11. 1-வது பிரதிவாதி தரும கடைகளையும் மதராஸ் கார்ப்பொரேஷனிடம் கிரயம் பெற்ற நிலத்தையும் அடுத் தாப்போ லிருக்கும் தன்னுடைய சொந்த சொத்துடன் 2, 3 பிரதிவாதிகளுக்கு தெரியாமலே நாகல் கொண்ட ஸ்ரீராமு லுக்கு 1,620 ரூபாய்க்கு 1882ஸு மார்ச்சுமீ 20ந்தேதி ரிஜிஸ்தர் பத்திர மூலமாய் சுவாதீன குதுவை வைத்தார். இந்த ரூபா 1,620 தையும் தானே உபயோகப்படுத்திக் கொண்டார். இந்த குதுவை பத்திரப்படி குதுவை வைக்கப் பட்ட சொத்து முழுமையும் அதாவது தரும கடைகளும் சொந்த சொத்தும் மார்டுகேஜீயின் சுவாதீனத்தில் தரும கடைகளுக்கு வேறு நிஷ்கர்ஷையான குடிக்கூலி நியமனமில் லாமல் 15 வருஷத்துக்கு மாதம் ரூபா 35 குடிக்கூலி விழுக்காடு ஒப்புக்கொண்டு விடப்பட்டன.

12. 1-வது பிரதிவாதியின் இவ்விதமான தப்புச்செய்கை 2, 3 பிரதிவாதிகளுக்குத் தெரிய வந்தபோது, இவர்கள்

அவரிடம் ஆக்ஷேபித்தார். அப்போது அவர் இவர்கள் பேருக்கு மேலே 7-வது பாராவில் சொல்லிய பிரகாரம் இரண்டு தரும கடைகளுக்கு மாத குடிக்கூலி ரூபா 7 கொடுப்பதாக ஒரு லீஸ் எழுதிக்கொடுத்தார்.

13. 1900-வது வருஷத்திற்கு சிலகாலம் முந்தி 1-வது பிரதிவாதி ஆதியிலிருந்த தரும கடைகள் முழுமையையும் தன்னுடைய சொந்த சொத்துடன் சேர்த்துக்கொண்டு மதராஸ் கார்போரேஷனிடம் வாங்கின நிலத்துக்கு வடக்கில் ஓர் சுவர்போட்டு, கிரயத்திற்கு வாங்கின நிலத்தில் கிழக்கு மேற்கு 20 அடி 3 அங்குலம், வடக்கு தெற்கு 8 அடி 4 அங்குலம் உள்ள விஸ்தீரணத்தின்பேரில் மூன்று கடைகள் கட்டினார். இந்த மூன்று கடைகளில் கீழண்டை பக்கமுள்ள இரண்டுகடைகள், மேல்சொன்ன டோனர் (Donor) ஆல் தருமத்துக்கு வைக்கப்பட்டனவெனப் பார்வைக்குத் தோன்றும்படி யிருந்தது.

14. மேற்சொன்ன பிரகாரம் தருமநிலத்தை 1-வது பிரதிவாதி கிரமமின்றி சேர்த்துக்கொண்டு நம்பிக்கை பங்கம் செய்தபோதிலும் அவர் 1900-வது வருஷத்தில் கடைகளின் கூரையைத் தென்புறம் 5 அடி 1 அங்குலத்துக்கு வளர்த்தி கீழண்டைப்பக்கம் நான்காவது கடை ஒன்று கட்டி, தரும சொத்தை தான் விருத்தி செய்வதுபோல் எண்பித்தார்.

15. 1906ம் வருஷத்தில் 1-வது பிரதிவாதி, மேல் சொன்ன 4-வது கடையை இடித்துவிட்டு தரும கடைகளின் கீழண்டை பக்கத்திலுள்ள தரும நிலத்தின் ஒரு துண்டை தன்னுடைய கீழண்டை வீட்டுடன் சேர்த்து தன் சொத்துக்கும் தரும சொத்துக்கும் மத்தியில் யாதொரு டிமார்கேஷன் குறியில்லாமல் சில ஆல்ட்ரேஷன்கள் செய்தார்.

16. அடுத்தடுத்து மோசடியாய் கட்டட ஆல்ட்ரேஷன் களை செய்வதை அறிந்த 2, 3 பிரதிவாதிகள் தரும கடை களை அவைகளினுடைய சரியான அளவுகளுக்கு பழயபடி 15 நாளைக்குள் மாற்றிவிட வேண்டுமென்று 1-வது பிரதி வாதிக்கு 1906ௗ பிப்ரவரிமீ 24உ வக்கீலைக் கொண்டு நோட்டீசு கொடுத்தார்கள். அதன் பேரில் 1-வது பிரதிவாதி, மேலே 13-வது பாராவில் சொல்லப்பட்ட சுவரை இன்னும் வடக்கில் 7 அடி 7 அங்குலம் தள்ளிப்போட்டார். இவ்வித ஆல்ட்ரேஷன்களினால் இப்போது ஒரே கடை (Hall) ஆலாக யிருக்கிறது. அதின் வடக்கு தெற்கு அளவு 23 அடி 9 அங்குலம் அதின் கிழக்கு மேற்கு அளவு 20 அடி 3 அங் குலம். இதில் இன்னபாகம் தரும கடைகள் என்று சொல் வது சாத்தியமில்லை. மேலும் தருமத்தைச் சேர்ந்த வடக்கு தெற்கு 13 அடி, கிழக்கு மேற்கு 15 அடி, 9 அங்குலம் அளவு உள்ள ஒரு துண்டு நிலமும் இந்த துண்டுக்கு தெற் கில் வடக்கு தெற்கு 23 அடி 9 அங்குலம் கிழக்கு மேற்கு 3 அடி 6 அங்குலம் அளவுள்ள மற்றொரு துண்டு நிலமும் 1-வது பிரதிவாதியின் சொந்த சொத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதனால் தர்ம சொத்து $287\frac{1}{8}$ சதுரடி அளவுள்ள விலையுயர்ந்த நிலத்தை இழக்கலாயிற்று. 1-வது பிரதிவாதி மேற்கண்ட விநாயக முதலியார் உயிலில் செப்பிய எந்த விஷயத்திற்கும் கடைகளின் வரும்படியை உபயோகப் படுத்துவதில்லை.

17. மேற்கண்ட இவ்வித சந்தர்ப்பங்களில் பிரதிவாதி கள் தரும நம்பிக்கை பங்கம் செய்தார்கள் என்றும் இந்த் தருமங்களை இனி பரிபாலனம் செய்ய தகுதியற்றவர்கள் என்றும் வாதிகள் சொல்லுகிறார்கள்.

18. பிரதிவாதிகளை தரும பரிபாலனத்தில் இருந்து நிவர்த்தி செய்ய வேண்டியது அவசியம். வேறு தகுதியுள்ள

வர்களை டிரஸ்டிகளாக ஏற்படுத்த வேண்டியது. தருமத்தை யும் அதைச் சார்ந்த சொத்தையும் இனிமேல் பரிபாலனம் செய்ய இந்த ஆனரபில் கோர்ட்டு ஒரு ஸ்கீம் ஏற்படுத்த வேண்டும்.

19. வாதிகளின் வியாஜ்ய மூலம் மதராஸில் 1906-ம் வருஷத்திலும் அதற்கு பிந்தியும் ஏற்பட்டது.

20. வாதிகள் தேடும் பரிகாரத்தை (Relief) ரூ. 75,000 மதிப்பிடுகிறார்கள்.

21. வாதிகள் பின்வருமாறு ஜட்ஜ்மெண்டு பிரார்த்திக் கிறார்கள் :—

(1) மேற்கண்ட தருமங்களைப் பரிபாலனம் செய்ய இந்த ஆனர பில் கோர்ட்டு ஒரு ஸ்கீம் ஏற்படுத்தவேண்டும்.

(2) தருமங்களையும் இந்த ஷெட்யூலில் சொல்லப்பட்ட சொத்துக்களையும் மானேஜ் செய்வதினின்று பிரதி வாதிகளை நீக்கவேண்டும்.

(3) தருமங்களையும் சொத்துக்களையும் மானேஜ் செய்ய புது டிரஸ்டிகளை ஏற்படுத்த வேண்டும்.

(4) பிரதிவாதிகள் தருமங்களையும் சொத்துக்களையும் மானேஜ் செய்ததற்கு கணக்கு கொடுக்கும்படி உத்தரவளிக்க வேண்டும்.

(5) இனி ஏற்படுத்தும் டிரஸ்டிகளுக்கு பிரதிவாதிகள் மேற் கண்ட சொத்துக்களை ஸ்வாதீனம் செய்யும்படி உத் தரவாகவேண்டும்.

(6) இந்த வியாஜ்யத்தின் காஸ்ட் வாதிகளுக்குக் கொடுக்கப் படவேண்டும்.

(7) மேலும் இந்த கோர்டாருக்கு யுக்தமென்று தோன்றும் படியானவையும் இந்த கேசுக்கு அவசியமானவையு மான பரிகாரங்களே அவர்கள் வாதிகளுக்கு செய்ய வேண்டும்.

---

## ஷெட்யூல்

### ஐடம் 1.

சத்திரமும் அடி மனேயும்: தென்னண்டை மாடவீதி மயிலாப்பூர், டோர் நெ. 13, ரிசர்வே நெ. 3532, சர்டிபிகேட் நெ. 4311, எல்லேகள் வடக்கில் தென்னண்டை மாடவீதி, தெற்கில் ரிசர்வே நெ. 3529, கிழக்கில் ரிசர்வே நெ. 3531, மேற்கில் ரிசர்வே நெ. 3513, விஸ்தீரணம் 1-மனே 1900 சதுரடி.

### ஐடம் 2.

தோட்டம்: நுங்கம்பாக்கம் முனிஸிபல் நெ. 2/23 கோடம் பாக்கம் ரோட்டு ரிசர்வே நெ. 196, சர்டிபிகேட்டு நெ. 8112, எல்லேகள் வடக்கில் ரிசர்வே நெம்பர்கள் 197,188, தெற்கில் கோடம்பாக்கம் ரோட்டும் ரிசர்வே நெ. 191ம், கிழக்கில் ரிசர்வே நெம்பர்கள் 190, 188, மேற்கில் ரிசர்வே நெ. 571, விஸ்தீரணம் 6 காணி, 15 மனே, 1298 சதுரடி.

### ஐடம் 3.

இரண்டு தரும கடைகள்: ஜார்ஜ்டவுன் R.S. நெ. 11026 உடையதின், சர்டிபிகேட்டு நெ. 2308 உடையதின், பாகம்

முன்பு டோர் நெம்பர்கள் 224, 225 உடையன, இப்போது சைனுபஜார் ரோட்டில் 247-வது டோர் நெம்பரின் பாகம். முன் அளவு வடக்கு தெற்கு 21 அடி, 9 அங்குலம், கிழக்கு மேற்கு 15 அடி, 9 அங்குலம். 1881ஆ தென்புறத்தில் நிலம் வாங்கிய பிறகு ரிசர்வேபடி வடக்கு தெற்கு 36 அடி, 9 அங்குலம், கிழக்கு மேற்கு 15 அடி, 9 அங்குலம் எல்லைகள் மேற்கில் 1-வது பிரதிவாதிக்கு சொந்தமான 8 அடி அகல முள்ள ரிசர்வே நெ. 11026-இன் பாகம், வடக்கிலும் கிழக்கிலும் 1-வது பிரதிவர்திக்கு சொந்தமான ரிசர்வே நெம்பர் 11026-இன் மற்றபாகம், தெற்கில் சைனுபஜார் ரோட்டு. விஸ்தீரணம் 578 $\frac{18}{16}$ சதுரடி.

(சைண்டு) C. சோக்கலிங்க முதலியார்.
(சைண்டு) C. முத்துசாமி முதலியார்.
(சைண்டு) T. எதிராஜ முதலியார்.
**வாதிகளின் வக்கீல்.**

(இவ்விடத்தில் வெரிபிகேஷன் பதிவு)

இந்த வியாஜ்யம் தாக்கல் செய்ய நான் சம்மதிக்கிறேன்.

(சைண்டு) எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார்,
ஆட்வொகேட் ஜெனரல்,
மதராஸ், 26-2-1918.

## 3-வது பிரதிவாதியின் எழுதிக்கொடுக்கப்பட்ட ஸ்டேட்மெண்டு

### மதராஸ் ஐகோர்ட் ஆப் ஜூடிகேசரில் ஆர்டினரி ஒரிஜினல் சிவில் ஜூரிஸ்டிக்ஷென் சூட்டு நெ. **97** ஆப் **1918**.

பிட்வீன் :

1. C. சொக்கலிங்க முதலி
2. C. முத்துசாமி முதலி

} வாதிகள்.

அண்டு

1. V. சோமசுந்திர முதலி
2. V. கெங்காதர முதலி
3. V. ஞானசிகாமணி முதலி

} பிரதிவாதிகள்.

### மேற்சொன்ன **3**-வது பிரதிவாதி ஞானசிகாமணி முதலியாருடைய எழுதிகோடுக்கப்பட்ட ஸ்டேட்மேண்டு

1. எல்லா நோடீசுகளும் ப்ராசெஸ்களும் சர்வ் செய்வதற்கு 3-வது பிரதிவாதியினது அட்ரஸ், நெ. 27, அண்ணா பிள்ளை தெருவு, ஜார்ஜ்டவுன் மதரூஸ்.

2. இந்த பிரதிவாதி ப்ளெயிண்டின் 3, 4, 5, 6 பாராக்களில் சொல்லப்பட்ட விஷயங்களை ஒப்புக்கொள்ளுகிறார்.

3. 1-வது பிரதிவாதி அவர் தகப்பனாருடைய 1868 ஞு டிசம்பர்மீ 19ந்தேதிய உயில்படி ஏற்படுத்தப்பட்ட எக்சிகூட்டர் 1881 ஞு வரையில் தரும சொத்துக்கள் அவருடைய தனி மானேஜ்மெண்டிலிருந்தன. மற்றொரு எக்ஸிகூட்டர் கூட ஏற்படுத்தப்பட்டார். ஆனால் அவர் அவ்வேலை வேண்டாமென்று விட்டுவிட்டார். ஆகையால் 1-வதுபிரதிவாதி தரும சொத்துக்களின் முழு மானேஜ்மெண்டில் இருந்தார்.

4. 1873ம் வருஷத்திய அவார்டு தர்ம சொத்துகளை 1-வது பிரதிவாதி மூன்று வருஷமும் 2, 3 பிரதிவாதிகள் ஆறு வருஷமும் முறைபோட்டு மானேஜ்மெண்டு செய்ய வேண்டுமென்று சொல்லியிருந்தும் 1881ம் வருஷம் வரையில் 1-வது பிரதிவாதியே தர்ம சொத்துக்களை மானேஜ்மெண்டு செய்து வந்தார்.

5. 1881ஹு ஏப்ரல்மீ முதல் 1-வது பிரதிவாதி ப்ளெயிண்டு ஷெட்யூலில் 3-வது ஐடமாகிய இரண்டு தர்ம கடைகளை அவர் சொந்த சொத்தைச் சார்ந்தாபோலிருந்த படியால் அவர் சுவாதீனத்தில் வைத்திருக்கிறார். 2, 3 பிரதிவாதிகள் தோட்டத்தையும் சத்திரத்தையும் 1881ஹு முதல் 1908ஹு வரையில் சுவாதீனத்தில் வைத்திருந்தார்கள். 1908ஹு முதல் இந்த பிரதிவாதியே தோட்டமும் சத்திரமும் சுவாதீனத்தில் வைத்திருக்கிறார்.

6. இந்தப் பிரதிவாதி பிளெயிண்டின் 3-வது பாராவில் சொன்னபடி தோட்டத்தின் வரும்படியைக் கொண்டு தரும ஏற்பாட்டின்படி செய்ய வேண்டிய தருமங்களைச் செய்து வந்தார்.

7. 1901ஹு முதல் 1908ஹு வரையில் இந்த பிரதிவாதி இடமும், 2-வது பிரதிவாதி இடமும், பவர் ஆப் அட்டரணி பெற்ற ஒரு சுந்தர முதலியார் தோட்டத்தையும் சத்திரத்தையும் மானேஜ்மெண்டு பார்த்து வந்தார். அதற்காக, உண்டாகிய கணக்கு அந்த சுந்தர முதலியாரிடம் இருக்கின்றன.

8. இந்தப் பிரதிவாதி பேருக்கும், 2-வது பிரதிவாதி பேருக்கும், 1-வது பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்பட்ட குடிகூலி கிரிமெண்டைப்பற்றி எழுதினகாலத்தில் இந்த பிரதிவாதிக்கு தெரியாது. அனேக வருஷங்களுக்குப் பிற்

பாடு இந்த பிரதிவாதிக்கு 2-வது பிரதிவாதி சைனுபஜார் கடைகள் தரும சொத்துகளென்று ஒப்புக்கொள்ளுதலை ருஜூப்பிக்க 1-வது பிரதிவாதியிடம் குடிக்கூலி கிரிமெண்டு வாங்கினதாக சொன்னார்.

9. இந்த பிரதிவாதி தோட்ட வரும்படியைக் கொண்டு செய்ய வேண்டிய தருமங்களை செய்துகொண்டு வந்தார். இந்த தருமங்களுக்கு ரெகுலர் கணக்கும் வைத்திருக்கிறார். தோட்டம், சத்திரம் இதின் வரும்படிகளுக்கு அதிகமாக ரூபா 7,122—5—10 செலவு செய்திருக்கிறார். இதை தரும சொத்து வரும்படியிலிருந்து தான் பர்த்தி செய்துகொள்ள வேண்டியிருக்கிறது.

10. ப்ளெயிண்டில் 7-வது பாராவில் தருமத்தை இந்த பிரதிவாதி அசிரத்தையுடன் செய்வதாக சொல்லிய பொய்யை தான் மறுக்கிறார். தோட்டம், சத்திரம், இதுகளின் வரும்படியிலிருந்து செய்யும்படி விதித்த தருமங்களை எல்லாம் தான் செய்வதுடன் வரும்படி போதாமையானபோது தன் சொந்த பணம் ரூபா 7,000க்கு மேல் செலுத்தி யிருக்கிறார்.

11. ஆதியில் ஷெட்யூலின் 3-வது ஐடமாகிய தரும கடைகள் வெளி அறை ஒன்று உள்ளறை ஒன்றாக இரண்டு அறைகள் சேர்ந்தது ஒரு செட்டாக இரண்டு செட்டு கடைகளாக இருந்தது. குறுக்கும் சுவரும் தள்ளி ஒவ்வொரு அறையும் 8 அடி சதுரம். சைனுபஜார் ரோட்டிலிருக்கும் தென் பக்கம் தவிர மற்ற பக்கங்களில் தரும கடைகளின் சுற்றிலுமிருக்கும் கட்டடமெல்லாம் 1-வது பிரதிவாதிக்கு சர்வாதிகாரமுள்ள சொத்தாக உயிலினால் வைக்கப்பட்டது. 1-வது பிரதிவாதி சைனுபஜார் ரோட்டுக்கும் அவருடைய சொந்த வீட்டின் பாகத்திற்கும் தரும கடைகளுக்கும் இடையி

லிருக்கும் நிலத்தை முனிசிபாலிடியிடம் வாங்கி கட்டடம் முழுமையும் ஆல்ட்ரேஷன் செய்ததனால் இரண்டு தரும கடையின் உருவும் நிலமையும் கெட்டுவிட்டது.

12. கட்டட முழுமையும் பூர்த்திசெய்து 1-வது பிரதிவாதி தரும கடைகள் உள்பட முழு கட்டடத்தை N. ஸ்ரீராமுலு இடம் தன் சொந்த சொத்துபோல் 1882௵ மார்ச்சுமீ 20ந்தேதி குதுவை வைத்தார். 1-வது பிரதிவாதி தரும சொத்தை சொந்த சொத்தாக பாராட்டியபடியால் இதை மறுக்கும் பொருட்டு 1-வது பிரதிவாதியிடம் இந்த கட்டடத்தில் தரும சொத்து சேர்ந்திருக்கிறதென்று ஒத்துக்கொண்டதாக அவரிடம் குடிக்கூலி கிரிமெண்டு 2-வது பிரதிவாதி வாங்கினதாக எனக்கு 2-வது பிரதிவாதி சொன்னார். 1-வது, 2-வது பிரதிவாதிகள் கூட்டு கள்ளயோசனை செய்து குடிக்கூலி கிரிமெண்டில் தரும கடைகளின் விஸ்தீரணத்தையும் எல்லைகளையும் செப்பவில்லை.

13. இந்தப் பிரதிவாதி, தோட்டம், சத்திரம் இவற்றின் வரும்படியைக் கொண்டு செய்யவேண்டிய தருமங்களை அசிரத்தை செய்தார் என்பதை மறுக்கிறார். இந்த பிரதிவாதி ப்ளெயிண்டின் 8-வது பாராவில் சொல்லிய விஷயங்களை ஒப்புக்கொள்கிறார்.

14. ப்ளெயிண்டின் 9, 10, 11, 13 முதல் 16 வரை பாராவிலுள்ள விஷயங்களை இப்பிரதிவாதி ஒப்புக்கொள்கிறார்.

15. 1-வது பிரதிவாதி மாத குடிக்கூலி ரூபா 7 எப்போதும் கொடுத்ததில்லை. அவர்தான் எக்ஸிகூட்டரென்று உறுத்திச் சொல்லுவார். இப்பிரதிவாதியை தோட்டம் சத்திரம் இதுகளின் ஸ்வாதீனத்திலிருந்து நீக்கவும் பிரயத்தனம் செய்தார்.

16. இந்த பிரதிவாதி தான் டிரஸ்டை துரோகம் செய்தார் என்கிறதை மறுக்கிறார். மேலும் தோட்டம், சத்திரம்

இதுகளின் வரும்படியைக்கொண்டு செய்யவேண்டிய தருமங் களை செய்துவந்தார்.

17. ஒரு ஸ்கீம் ஏற்படுத்த வேண்டு மென்றும் தரு மத்தை பார்க்க தகுதியானவர்களை நியமிக்கவேண்டுமென்றும், தன் தகப்பனுர் பேரானது எப்போதும் வழங்க வேண்டு மென்றும் இந்த பிரதிவாதி சம்மதிக்கிருர்.

18. 1-வது பிரதிவாதி தருமகடைகளின் உருவு அடை யாளங்களை மாற்றிவிட்டபடியால் சைனுபஜார் ரோடு பக்கம் தென்னண்டை கடைசி அத்திலிருந்து தெற்கு வடக்கு 36 அடி 9 அங்குலம் கிழக்கு மேற்கு 16 அடி உள்ள நிலத்தை விட்டு விடும்படி அவரை செய்யவேண்டும். அதில் பழைய படி பிரதி செட் கடையையும் ஒரு அறைக்குள் மற்றொரு அறை திறக்கும்படி இரண்டு செட் கடைகளை மறுபடி கட்ட தொகை கொடுக்கச் செய்யவேண்டும். சைனுபஜார் ரோட்டில் சொத்து மிகவும் விலையுள்ளதாகையால் இந்த சொத்துகளி லிருந்து தருமங்கள் நன்ருய் செய்யலாம்.

19. 1-வது பிரதிவாதி தருமசொத்தை தன் சொத்து டன் அடையாளம் தெரியாதபடி சேர்த்துவிட்டபடியால் அவர் தருமத்துக்கு முன்னிருந்த கடைகளை சரியாய் உருவு நிலைமை காட்டாதபக்ஷத்தில் முழுசொத்தை அவரை இழக்கச் செய்ய வேண்டும்.

20. சி. பி. சி. கோட் 92-வது செக்ஷன்படி வியாஜ்ஜி யத்தை தாக்கல் செய்வதற்கு அட்வொகேட் ஜனரல் சாங் கிஷன் பெற்றதாக ப்ளெயிண்டு சொல்லவில்லை.

(சைண்டு) V. ஞானசிகாமணி முதலியார்,
3-வது பிரதிவாதி.

(சைண்டு) C. வெங்கடசுப்பராமய்ய,
3-வது பிரதிவாதியின் வக்கீல்.

(இவ்விடத்தில் வெரிபிகேஷன் பதிவு)

(சைண்டு) V. ஞானசிகாமணி முதலியார்,
3-வது பிரதிவாதி.

என்னால் எக்ஸ்பிலெயின் செய்யப்பட்டு வெரிபை செய்து கையெழுத்து செய்யப்பட்டது இன்று 15உ ஏப்ரல் 1918.

என் முன்பாக,
(சைண்டு) N. கிருஷ்ணசுவாமி,
அஸிஸ்டெண்டு இன்டர்பிரட்டர் அண்டு கமிஷனர்.

---

## 1-வது பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஸ்டேட்மெண்டு

மதராஸ் ஐகோர்ட் ஆப் ஜூடிகேசரில்
ஆர்டினரி ஒரிஜினல் சிவில் ஜூரிஸ்டிக்ஷன்
சூட்டு நே. **97** ஆப் **1918**.

பிட்வீன் :

1. C. சொக்கலிங்க முதலி,
2. C. முத்துசாமி முதலி, } வாதிகள்.

அண்டு

1. V. சோமசுந்திர முதலி,
2. V. கெங்காதா முதலி.
3. V. ஞானசிகாமணி முதலி, } பிரதிவாதிகள்.

## இதில் 1-வது பிரதிவாதியின் (Written) எழுதிக்கொடுத்த ஸ்டேட்மெண்டு பின்வருமாறு

1. எல்லா நோட்டிசுகளையும் (Process) புரோஸஸ்களையும் சர்வ் செய்வதற்கு 1-வது பிரதிவாதியின் அட்ரஸ் அவருடைய வக்கீல் நெ. 336, தம்பு செட்டி தெருவு, மதராஸ்.

2. இந்த பிரதிவாதி ப்ளெயிண்டில் கண்ட விஷயங்களில் இதனால் விசதமாய் ஒப்புக்கொள்ளாதவைகளை ஒப்புக்கொள்ளவில்லை. இதுகளை ருசுப்படுத்துவது வாதியின் பொறுப்பு.

3. ப்ளெயிண்டில் 3-வது பாராவில் சொல்லியபடி காலம் சென்ற விநாயக முதலியார் ஒரு சாஸனம் எழுதி ரிஜிஸ்ட்டர் செய்திருக்கிறதாகவாவது ப்ளெயிண்டில் சொல்லியதுபோல் அதில் சில தருமங்களை குறிப்பிட்டு விவரித்திருப்பதாவது தனக்கு தெரியாதென்று இந்த பிரதிவாதி சொல்லுகிறார்.

4. காலம் சென்ற விநாயக முதலியார் சிலாசாஸனம் போட்டு வைத்தாரென்று வாதிகளை ருசு செய்யும்படி இந்த பிரதிவாதி சொல்லுகிறார்.

5. இந்த பிரதிவாதி ப்ளெயிண்டில் 4-வது பாராவில் சொல்லிய உயில் இருப்பதாக ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் அதில் நுங்கம்பாக்கம் தோட்ட வரும்படி சத்திர தருமத்திற்கு செலவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறதே தவிர, சத்திரத்திலேயே பிராமணர்களுக்கு போஜனம் போட வேண்டுமென்று சொல்லியில்லை.

6. ப்ளெயிண்டின் 6-வது பாராவில் திருவேங்கட முதலி எக்ஸிகூட்டராக வேலைபார்க்கவில்லை என்று சொல்லியிருப்பது தப்பு. திருவேங்கட முதலியும் இந்த பிரதிவாதியும்-

ஜாயிண்டாக தரும சொத்துகளை 1868ஞு டெஸ்டேடர் இறந்தது முதல் சுமார் 1872ஞு வரையில் மானேஜ்மெண்டு செய்து வந்தார்கள். பிறகு, அவர் மதராஸைவிட்டு வெளியில் காயமாய் குடியிருக்க போய் விட்டார். அந்த காலத்திற்கு சம்பந்தப்பட்ட தரும கணக்குகள் அந்த எக்ஸிகூட்டரால் டிரஸ்டிகளுக்கு கொடுக்கப்பட்டன. அவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டன.

7. இந்த பிரதிவாதியின் ஸ்டெப் சகோதரர்களாகிய (மாற்ருன் தாயின் குமாரர்கள்) 2, 3 பிரதிவாதிகள் இந்த பிரதிவாதியின் குடும்ப தருமங்களை பரிபாலனம் செய்யும் அக்கை ஆக்ஷேபித்ததும் அது மத்தியஸ்தத்திற்கு விடப்பட்டதும் மத்தியஸ்தர்கள் (Award) அவார்ட் தீர்மானம் கொடுத்ததும் இதுகளைப்பற்றி ப்ளெயிண்டின் 6-வது பாராவில் சொல்லியதும் உண்மைதான் என்று இந்த பிரதிவாதி சொல்லுகிருர்.

8. மேற்கண்ட அவார்ட்படியும் டிரஸ்டிகளின் ஆமோதிப்புடனும் இந்த பிரதிவாதியால் 2, 3 பிரதிவாதிகளுக்கு சத்திர ஸ்வாதீனம் ஒப்புவிக்கப்பட்டது. இவர்கள் நுங்கம்பாக்கம் தோட்டம் குத்தகைதாரரிடம் குடிக்கூலியும் வசூல் செய்தார்கள். இப்பிரதிவாதி இரண்டு கடைகளின் குடிக்கூலியை கொண்டு சத்திரத்தில் துவாதசி போஜனம் நடத்திவந்தார்.

9. 2, 3 பிரதிவாதிகள் 1873ஞு அவார்ட் தேதி முதல் நாளது வரையிலும் மேற்சொன்னதுபோல் தோட்டத்தின் குடிக்கூலியை வாங்கிக் கொண்டு சத்திர மானேஜ்மெண்டு செய்து வருகிருர். அவார்ட் ஷரத்துப்படி 1879ஞு அவைகளின் சுவாதீனத்தை இந்த பிரதிவாதியிடம் பல தடவை கேட்டும் ஒப்புவிக்கவில்லை.

10. 1882வது முதலில் தரும கடைகளுக்கு மிகவும் அவசியமாய் ரிப்பேர் வேண்டியிருந்தது. இந்த பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளை அதற்கு வேண்டிய தொகையை கேட்டார். அவர்கள் கோரியது போல் அவர்கள் பேருக்கு இந்த கடைகளுக்கு மாத குடிக்கூலி 7 ரூபாயாக இந்த பிரதிவாதி ஒரு லீஸ் எழுதிக்கொடுத்தார்.

11. 2, 3 பிரதிவாதிகள் பேருக்கு மேற்படி குடிக்கூலி கிரிமெண்டு எழுதிக் கொடுத்தும் இந்த பிரதிவாதி ரிபேர் வேலையை ஆரம்பித்தும் 2, 3 பிரதிவாதிகள் இவருக்கு நஷ்டம் உண்டுபண்ண வேண்டுமென்னும் எண்ணத்துடன் அவர்கள் கொடுப்பதாக சொன்ன தொகையை கொடுக்கவில்லை.

12. ஆதலால் இந்த பிரதிவாதி தரும கடைகளையும் அவர் சொந்த சொத்தையும் அதாவது வீட்டையும் மூன்று கடைகளையும் நாகல்கொண்ட ஸ்ரீராமுலு இடம் 20-3-1882ல் குதுவை வைத்து மேற்படி சொத்துக்களை க்ஷீணமாகாதபடி ரிப்பேர் செய்ய அவசியமான தொகை வாங்கும்படி நேரிட்டது.

13. இந்த பிரதிவாதி மேல்கண்ட விஷயங்களில் டிரஸ்டிகளின் ஆலோசனையை கேட்டு அவர்கள் அனுமதியைப்பெற்று அவர்கள் உத்தரவு பிரகாரம் செய்தார்.

14. இது தருமத்தின் நன்மைக்காக நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டதென்று இந்த பிரதிவாதி சொல்லுகிறார். மேலும் இந்த குதுவைக் கடனானது இந்த பிரதிவாதியின் சொந்த பண்டிலிருந்து ரொம்பகால முந்தியே தீர்த்துவிடப்பட்டது.

15. தரும கடைகளை புதுப்பித்தலுக்கும் ரிபேர் செய்தலுக்கும் நேர்ந்த செலவுகளுக்காக கணக்கை இந்த பிரதிவாதி அப்போது இருந்த டிரஸ்டிகளாகிய இராஜரத்தின முதலி

யார், சின்னப்ப முதலியார் அவர்களுக்கு கொடுத்தார். இந்த டிரஸ்டிகள் நான் செலவு செய்த ரூபா சுமார் 600 இருக்கு மென்று மதிப்பிட்டு இந்த பிரதிவாதியை இந்த கடைகளுக் காக அவர்கள் பேருக்கு குடிக்கூலி கிரிமெண்டு எழுதிக் கொடுக்கும்படி சொன்னார்கள். அது போலவே 21-9-1882ல் எழுதிக் கொடுக்கப்பட்டது.

16. இந்த பிரதிவாதி தருமத்தின் டிரஸ்டிகளுக்கு ஷை கடைகளைக் குறித்து குடிக்கூலி கிரிமெண்டு எழுதிக் கொடுத்ததற்கு 2, 3 பிரதிவாதிகள் ஆக்ஷேபங்கொண்டு சத்திரத்திற்குள் இந்த பிரதிவாதியை வரவொட்டாமல் தடுத்து விட்டார்கள். ஆதலால் அதுமுதல் இந்த பிரதிவாதி துவாதசி பிராமண போஜனத்தை மயிலாப்பூரிலேயே வேறு இடத்தில் நடத்தும்படி நேர்ந்தது.

17. துவாதசி போஜனத்தை நாளது வரையில் இந்த பிரதிவாதி சரியாய் நடத்தியதாக சொல்லுகிறார். இரண்டு டிரஸ்டிகளும் காலமாய்விட்ட பிறகு இவர் கையிலிருந்த மிச்ச பணத்தை 2, 3 பிரதிவாதிகளிடம் சத்திர தருமத் திற்கு உபயோகிக்கும்படி கொடுத்து வந்திருக்கிறார்.

18. ப்ளெயிண்டின் 7-வது பாராவில் இந்த பிரதிவாதி பேருக்கு ஒரு லீசு தஸ்தாவேஜைப்பற்றிய விஷயம் தப்பு என்று இந்த பிரதிவாதி சொல்லுகிறார்.

19. 2, 3 பிரதிவாதிகள் அவார்ட் தேதிமுதல் சத்தி ரத்தையும், தோட்டத்தையும் தங்கள் சுவாதீனத்தில் வைத் திருக்கிறார்களென்றும் சத்திர தருமங்களை நடத்தி வருகிறார் கள் என்றும், அவைகளை ஸ்வாதீனம் பெறவேண்டுமென்று இந்த பிரதிவாதியால் செய்யப்பட்ட பிரயத்தனங்களெல்லாம் விருதாவாய் போயிற்றென்றும் சில சமயங்களில் 2, 3 பிரதி

வாதிகள் இந்த பிரதிவாதியை ஜோரா வாரியாயும் துராக்கிருதமாயும் பலம் உபயோகப்படுத்தி மேற்படி இடத்திலிருந்து அப்புறப்படுத்தினூர்க ளென்றும் இந்த பிரதிவாதி சொல்லுகிறுர்.

20. ப்ளெயிண்டின் 9-வது பிரகரணத்தில் சொல்லப்பட்ட தரும கடைகளின் அளவுகள் வீண் தோற்றமாயும் தப்பாயு மிருக்கின்றன. தருமத்துக்காக வைக்கப்பட்ட ஒவ்வொரு கடையும் கிழக்கு மேற்கு 6 அடியும் வடக்கு தெற்கு 5 அடி 9 அங்குலமும் உள்ளன. அவைகளினுடைய ஸ்தலம் இத்துடன் சேர்க்கப்பட்ட பிளானில் ப்ளாக் "A" இல் சிகப்பாக குறிக்கப்பட் டிருக்கிறது.

21. இந்த வீட்டின் எதிரில் கார்போரேஷனிடமிருந்து இந்த பிரதிவாதியால் வாங்கப்பட்ட நிலம் தருமப் பணத்திலிருந்து வாங்கப்பட்டதென்று பிரயாதின் 10-வது பிரகரணத்தில் சொல்லி யிருக்கும் சங்கதி உண்மையல்லவென்று இந்த பிரதிவாதி சொல்லுகிறுர். இந்த பிரதிவாதி அதை தனக்காகவே தன் சொந்த பணத்திலிருந்து தன் சொந்த பிரயோஜனத்திற்காக வாங்கினுர். அது எவ்வித எண்ணத்தாலும் தரும கடைகளின் பாகமாயாவது துண்டாகவாவது அல்லது அவைகளை ஒட்டினவையாகவாவது கொள்ளப்படமாட்டாது.

22. ப்ளெயிண்டின் 13, 14, 15-வது பிரகரணங்களில் சொல்லிய சங்கதி உண்மையல்ல. அதில் சொல்லப்பட்ட அளவுகள் முற்றும் தப்பாயும் ஒப்புரவாக்கக்கூடாதவையாயும் இருக்கின்றன. வாதிகளை இதைத் திட்டமாய் ருசு செய்யும்படி இந்த பிரதிவாதி சொல்லுகிறுர்.

23. இந்த பிரதிவாதி கார்போரேஷனிடமிருந்து இத்துடன் சேர்க்கப்பட்ட ப்ளானில் ப்ளாக் "A" இல் நீலமாக

குறிக்கப்பட் டிருக்கும் பாக நிலத்தை வாங்கின பிறகு கடைகள் பின்னடங்கி போயின. ரோட்டிலிருந்து பார்வை யில்லாமையினுல் நல்ல குடிக்கூலி வரவில்லை என்றும் இந்த பிரதிவாதி சொல்லுகிருர்.

24. ஆதலால் இந்த பிரதிவாதி டிரஸ்டிகளுடைய சம் மதியுடன் தருமத்துக்கு விடப்பட்ட இரண்டு பழைய கடை களுக்கு முகப்பில் அவைகளுக்கு பதிலாக இரண்டு புதிய கடைகளில் இத்துடன் சேர்க்கப்பட்ட ப்ளானில் ப்ளாக் "B" இல் சிகப்பாக காட்டியிருப்பதுபோல கட்டினுர். அவை களினின்று வரும் குடிக்கூலியை துவாதசி போஜன செலவு களுக்கு உபயோகப்படுத்தி வந்தார்.

25. பிற்பாடு சுமார் 1906ஞு இந்த கடைகளின் குடிக் கூலிதார் கடைகள் மிகவும் நெருக்கமாயிருக்கிற தென்றும் ஜாகை குறைவாயிருக்கிற தென்றும் காலி செய்வதாக பய முறு்த்தியதின்பேரில் அவர் கேட்டுக் கொண்டபடி மூன்று கடைகளுக்கு மத்தியிலுள்ள தடுப்பு பலகைகள் எடுத்து விடப்பட்டன. இவ்விதம் ஏற்பட்ட பார்வையும் கடையின் தற்கால ஸ்தானமும் இத்துடன் சேர்க்கப்பட்ட ப்ளானில் ப்ளாக் "C" இல் காட்டப்பட் டிருக்கிறது. சிகப்பு மார்க்கு கொண்ட பாகமானது பூர்வ இரண்டு தரும கடைகளின் ஸ்தானமும் விஸ்தீரணமுமாகும்.

26. தரும கடைகளின் ஆதி சுவர்களின் கடகால் களும் பகுதி (Section) களும் அப்படியே யிருக்கின்றனவென் றும் வெளியினின்று பார்வைக்கு நன்ருயும் தெரிகின்றன என்றும் இரண்டு சிறிய தரும கடைகளின் அளவுகள் விசத மாய் அறியக்கூடியனவாய் இருக்கின்றனவென்றும் இந்த பிரதிவாதி சொல்லுகிருர்.

27. இந்த ஆல்ட்ரேஷன்களை நல்ல எண்ணத்துடனும் டிரஸ்டின் நன்மைக்கும் தருமத்திற்கு வைக்கப்பட்ட கடைகளின் குடிக்கூலியை உயர்த்துவதற்கும் டிரஸ்டிகளின் ஆலோசனையையும் முழு சம்மதியையும் பெற்று இந்த பிரதிவாதி செய்ததாக சொல்லுகிறார்.

28. தருமத்துக்கு அனுகூலமா யிருக்கும்பக்ஷத்தில் அப்படி கட்டளையிட்டால் இந்த பிரதிவாதி இரண்டு தரும கடைகளை பழைய நிலமைக்கு திருத்தி விடவாவது அல்லது அதே அளவுள்ள இரண்டு புது கடைகளை பப்ளிக் ரஸ்தா வாகிய சைனாபஜார் ரோட்டில் அதே நீளமுள்ள முகப்புடைய தாக கட்டிக் கொடுக்கவாவது சித்தமாயும் சம்மதியாயும் இருக்கிறார்.

29. ப்ளெயிண்டின் 16-வது பிரகரணத்தில் சொல்லிய வைகள் தப்பாயும் அர்த்தமின்மையாயும் இருக்கின்றன. இரண்டு கடைகளும் சேர்ந்த அளவு கிழக்கு மேற்கு 12 அடி வடக்கு தெற்கு 5 அடி 9 அங்குலம்தான். இவைகளின் வரும்படி எப்போதும் துவாதசி போஜன செலவுகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டது.

30. இந்த தருமமானது இந்த ஆனரபில் கோர்ட்டின் பையலில் 1877ஸு C. S. நெ. 86-வது வியாச்சியத் தின் விஷயமாக இருந்தது. அதன் தன்மை அப்போது நிர்ணயித்து தீர்மானிக்கபட்டபடியால் இந்த வியாஜ்ஜியம் (Res-judicata) ரெஸ்ஜூடிகேடா என்னும் காரணத்தால் பார் ஆய்விட்டது.

31. இச்சொத்துகள் அதிகமாக பாராட்டி சொல்லப்பட் டன என்றும் இந்த இரண்டு கடைகளின் மதிப்பு ரூபா 600 தான் இருக்கும் என்றும் இந்த பிரதிவாதி சொல்லுகிறார்.

32. சத்திரத்தையும் அதின் தருமங்களையும் பரிபாலிப்பதற்கு இந்த பிரதிவாதி எப்போதுமே சித்தமாயிருந்தார். இப்போதும் சித்தமாயிருக்கிறார். ஆனால் இந்த மானேஜ்மெண்டில் இந்த பிரதிவாதியை கூடவொட்டாமல் தடுத்துவிட்ட 2, 3 பிரதிவாதிகளின் ஒத்துழையா நிலைமையினால் தான் துவாதசி போஜனத்தை மாத்திரம் நடத்தி நிற்க வேண்டி வந்தது.

33. இந்த பிரதிவாதிக்கு சத்திரத்தையும் தோட்டத்தையும் ஸ்வாதீனம் ஒப்புவித்தால் சத்திர தருமங்களையும் தான் நடத்த சம்மதிக்கிறார் என்று இந்த பிரதிவாதி சொல்லுகிறார்.

34. ஆதலால் இந்த பிரதிவாதி வியாஜ்ஜியத்தை இந்த பிரதிவாதியின்பேரில் காஸ்டுடன் தள்ளிவிடும்படி வேண்டிக் கொள்ளுகிறார்.

(சைண்டு) R. சத்தியமூர்த்தி அய்யர்,
1-வது பிரதிவாதியின் வக்கீல்.

(சைண்டு) வி. சோமசுந்தர முதலி,
1-வது பிரதிவாதி.

(இவ்விடத்தில் வெரிபிகேஷன் பதிவு)

என்னால் எக்ஸ்ப்லெயின் செய்யப்பட்டு வெரிபை செய்து கையெழுத்து செய்யப்பட்டது இன்று 19உ ஏப்ரல்மீ 1918.

என் முன்பாக,
(சைண்டு) N. கிருஷ்ணய்யர்,
அஸிஸ்டெண்டு இன்டர்ப்ரிடர் அண்டு கமிஷனர்.

# இஷ்ஷூ

## மதராஸ் ஐகோர்டு ஆப் ஜுடிகேசரில் ஆர்டினரி ஒரிஜினல் ஸிவில் ஜுரிஸ்டிக்ஷன் திங்கட்கிழமை 12ம் தேதி ஆகஸ்டு 1918.

## ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் கூட்ஸ்ட்ராட்டர் இன் சேம்பர்ஸ் ஓ. எஸ். நே. 97 ஆப் 1918.

பிட்வீன் :

1. C. சொக்கலிங்க முதலி, அண்டு மற்றொருவர், } வாதிகள்.

அண்டு

1. V. சோமசுந்தர முதலி, அண்டு மற்றவர்கள், } பிரதிவாதிகள்.

வாதிகளின் வக்கீல் ஆகிய மிஸ்டர் T. எதிராஜ முதலியார், 1-வது பிரதிவாதியின் வக்கீல்களாகிய மிஸ்டர் சத்திய மூர்த்தி, மிஸ்டர் V. கோவிந்தாச்சாரி, 3-வது பிரதிவாதியின் வக்கீல் ஆகிய மிஸ்டர் வெங்கடசுப்பராமய்யா, இவர்கள் எதிரில் 2-வது பிரதிவாதி நேராகவாவது பிளீடர் மூலமாகவாவது ஆஜராகாமலும் இந்த வியாச்சியம் இன்றைக்கு செட்டல்மெண்டு ஆப் இஸ்ஸூவுக்கு வந்தபடியால் பின் செப்பிய இஸ்ஸூக்களை இந்த கோர்ட்டு முன்னிலையில் விசாரணை செய்யவேண்டு மென்று உத்தரவிடப்பட்டது.

## இஷ்ஷூக்கள்

(1) தருமகடைகளின் பூர்வ அளவுகள் என்ன?

(2) 1881ஹு டிசம்பர்மீ 1-வது பிரதிவாதியால் வாங்கப்பட்ட நிலம் தரும பண்டைக்கொண்டு வாங்கப்பட்டதா?

(3) தரும கடைகளின் நிலமையிலும் அளவுகளிலும் என்ன மாறுதல்கள் 1-வது பிரதிவாதி செய்தார்?

(4) தருமத்திற்காக கட்டடத்தின் எந்த பாகமானது இப்போது ஏற்படுத்தப்படவேண்டும்?

(5) ப்ளெயிண்டின் 17-வது பிரகாரணத்தில் சொல்லப் பட்ட $287\frac{7}{8}$ சதுரஅடி விஸ்தீர்ணமுள்ள இரண்டு ப்ளாட்டு கள் தரும சொத்தா? இவைகள் 1-வது பிரதிவாதியின் சொந்த சொத்துடன் தப்பாக சேர்க்கப்பட்டனவா?

(6) பிரதிவாதிகளெல்லா மாவது அல்லது அவர்களில் எவராவது ப்ளெயிண்டில் சொல்லப்பட்ட எல்லா பிரீச் ஆப் ட்ர்ஸ்டுக்காவது அல்லது எதற்காவது குற்றவாளிகளா? டிரஸ்டிவேலையிலிருநது நீக்கப்படுவதற்கு உள்ளானவர்களா?

(7) 1-வது பிரதிவாதியிடமிருந்தாவது அல்லது தரும சொத்திலிருந்தாவது 3-வது பிரதிவாதி ரூ. 7,122—5—10 பெறுவதற்கு அக்குடையவரா?

(8) வாதிகள் ஏதேனும் ஆனல் எந்த ஒத்தாசைபெற அக்குடையவர்கள்?

இன்னம் பின்வருமாறு உத்தரவு செய்யப்படுகிறது.

(1) இந்த வியாஜ்ஜியத்தில் பார்ட்டிகள் இதில், எவ் விதமாக சம்பந்தபட்டதாய் அவரவர்கள் சுவாதீனத்திலாவது அதிகாரத்திலாவது உள்ள எல்லா தஸ்தாவேஜுகளையும் 1918ஹு ஆகஸ்டுமீ 26உக்கு முன் பிரமாண பத்திர மூலமாக கூறவேண்டும்.

(2) இந்த வியாஜ்ஜியத்தின் அடுத்த விசாரணை அட் ஜார்ண் ஆய் இருக்கக்கடவது.

(சைண்டு) J. R. அட்கின்ஸன்,
டெபுடி ரிஜிஸ்ட்ரார்.

ராஜிநாமா

# மதராஸ் ஐகோர்டு ஆப் ஜூடிகேசரில் ஆர்டினரி ஒரிஜனல் ஸிவில் ஜூரிஸ்டிக்ஷன் சூட்டு நே. **97** ஆப் **1918.**

பிட்வீன்:

1. C. சொக்கலிங்க முதலி,
2. C. முத்துசாமி முதலி,

} வாதிகள்.

அண்டு

1. V. சோமசுந்தர முதலி,
2. V. கெங்காதர முதலி,
3. V. ஞானசிகாமணி முதலி,

} பிரதிவாதிகள்.

வாதி பிரதிவாதிகளுக்குள் செய்துகொள்ளபட்ட ராஜிநாமா பின் வருமாறு உளது:—

1. காலம் சென்ற வியாசர்பாடி விநாயக முதலியார் 1851௵ ஜூன்மீ 17௳ ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சாஸனத்தாலும் 1852௵த்திய சிலாசாஸனத்தாலும் 1868௵ டிசம்பர்மீ 19௳யுள்ள அவரது ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்ட உயிலினாலும் தரும பிரதிஷ்டை செய்து அந்த தருமங்கள் தனது ஜாதியாராகிய சோழிய வெள்ளாள மரபினருக்கு பொது என்று கூறி அதின் மானேஜ்மெண்டை அவர்கள் ஸ்வாதீனம் செய்தார். அவருடைய ஜாதியார் இவ்விதம் தருமங்களில் தனி உடந்தை பெற்றவர்களாய் கூட்டங்கூடி வியாஜ்ஜியம் செய்ய ஒரு கமிட்டி ஏற்படுத்தி அந்த கமிட்டி கூட்டங்கள்கூடி உபகரணங்களையும் சாக்ஷியங்கள் வகையாருக்களை சேகரித்தும் சில கண்யமுள்ளவரின் மத்தியஸ்தத்தினால் தருமங்களின் நயத்திற்காக இந்த வியாஜ்ஜியத்தில்

சேட்டிருக்கும் வாதங்களை குறித்து ஒரு செட்டில் மெண் டுக்கு (தீர்மாணத்திற்கு) வந்தார்கள்.

2. வாதிகள் மேற்சொல்லப்பட்ட கமிடியின் உத்தரவுப் படியும் தங்கள் சொந்த தரப்பில் இதில் வாதிகளாகவும், இந்த வியாஜ்ஜியத்தில் பிரதிவாதிகளும் பின் வரும் நிபந்தனை களுக்கு ஒத்து கொள்ளுகிறார்கள்.

3. சேகரிக்க கூடிய உபகரணங்களைக் கொண்டு ஆலோ சித்து தரும கடைகளின் விஸ்தீரணம் அவைகளுக்கு தென் புறத்தில் கார்போரேஷனிடம் கிரயம் பெற்ற நிலமும் ரிசர்வே படி குரடு ஜாஸ்தியும் உள்பட, வடக்கு தெற்கு 24 அடி 6 அங்குலம், கிழக்கு மேற்கு 13 அடி என்று ஏற்படுத்த பட்டது. தருமத்தின் நயத்திற்காக சம்மதிவாரியின் பேரில் தரும கடையின் நிலமானது மதிராஸ் ஜார்ஜ்டவுன் ரீசர்வே நெம்பர் 11026 னுடைய தென் மேற்கு பக்கம் இருக்கவேண்டும் என்று நிலைப்படுத்தப்பட்டது அது இத் துடன் இருக்கும் ஷெட்யூலில் சேர்க்கப்பட்ட ஸ்கெச்சில் A B C D என்று மார்க்கு செய்த 1-வது ஐடமாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

4. மேற்படி விநாயக முதலியார் தருமத்திற்கு சொந்த மான மற்ற சூஸ்திதிகள் இந்த ஷெட்யூலில் 2, 3 ஐடங்க ளாகிய மயிலாப்பூரில் சத்திரம் ஒன்று, நுங்கம்பாக்கத்தில் தோட்டம் ஒன்றுமாம்.

5. (இந்த ஷெட்யூலில் ஐடம் 1 ஆகிய) தரும கடை களின் அத்துக்கு உள்பட்ட இப்போது யிருக்கும் வட வண்டை சுவரின்பேரில் 1-வது பிரதிவாதி தன்னுடைய அடுத்த சொந்த சொத்தினது திராவிகளையாவது தூலங் களையாவது தரும கடையின் திராவிகளுக்கும் தூலங்களுக் கும் பாதகம் இல்லாமல் நிறுத்த சுதந்திரமுண்டு.

6. தரும கடையின் அத்துகளுக்குள் (இந்த ஷெட்யூல் ஐடம் 1) கிழண்டை பக்கம் கடைசியில் வடக்கு தெற்கு 24 அடி 6 அங்குலம் அளவு, கிழக்கு மேற்கு 1 அடி அகலம் சுவரை 1-வது பிரதிவாதி தன் செலவில் போட வேண்டும். இந்தச் சுவர் தரும சொத்தின் பாகமாகப் பாராட்டப்பட வேண்டியது. இந்தச் சுவரின்மேல் 1-வது பிரதிவாதி அவருடைய அடுத்த சொத்தின் திராவிகளையாவது தூலங்களையாவது அந்தச் சுவரின்மேல், பிற்பாடு தரும கடையின் திராவிகள் தூலங்கள் வகையறுக்களை நிறுத்த இடஞ்சலில்லாமல் நிறுத்திக்கொள்ளச் சுதந்திர முண்டு.

7. மேல் 5, 6 பிரகரணங்களில் சொல்லப்பட்ட வடவண்டை, கீழண்டை சுவர்களை தரும கடையின் (இந்த ஷெட்யூலில் ஐடம் 1) மேல், இனிக் கட்டப்படும் மேல் கட்டடத்தின் திராவிகளும், தூலங்கள் வகையறுக்களும் நிறுத்துவதற்கு இடஞ்சல் இல்லாமல் தன் செலவில் 1-வது பிரதிவாதி உயர்த்துவதற்கு அவருக்குச் சுதந்திர முண்டு. அப்படி உயர்த்தப்பட்ட சுவர்களும் யார் செலவில் கட்டப்பட்டாலும் அதைக் கவனிக்காமல் தரும கடையின் சொந்தமானதாகவே பாராட்டப்பட வேண்டும்.

8. 1-வது பிரதிவாதி இன்று முதல் மூன்று மாதத்திற்குள் தரும கடையின் அளவுக்கு (இந்த ஷெட்யூல் 1-வது ஐடம்) தன் செலவில் அதைத் தனியாய் குடிக்கூலிக்கு விடும்படி கட்டட ஆல்ட்ரேஷன்கள் செய்து அதைக் கீழே 9-வது பிரகரணத்தில் சொல்லப்பட்ட மானேஜ் செய்யும் கமிட்டிக்கு ஸ்வாதீனம் ஒப்புவிக்க வேண்டும்.

9. சோழிய வேளாள மரபார் மாத்திரம் மெம்பராக கூடியபடி 1860-ம் வருஷத்திய XXI-வது இந்திய ஆக்டின்

படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட தொண்டைமண்டலம் சோழிய வேளாள மரபு தரும சங்கத்தின் ப்ரெஸிடெண்டு, செகிரிடெரி, ட்ரெஷரர் இவர்களையுள்ளிட்ட ஆறுபேருக்குக் குறையாமல் உள்ள ஒரு கமிட்டி, ஸ்வாதீனமாக மேற்கண்ட விநாயக முதலியார் தருமங்களின் மானேஜ்மெண்டு இருக்கவேண்டும்.

10. மேற்கண்ட மானேஜிங் கமிட்டியின் மெம்பர்கள் எல்லாம் மேற்படி சங்கத்தாரால் வருஷா வருஷம் எலக்ட் செய்யப்பட வேண்டும்.

11. மேற்கண்ட மானேஜிங் கமிட்டியின் மெம்பர்களாக எலெக்ட் செய்யப்பட பிரதிவாதிகள் தகுதியுடையவர்கள் ஆவர்கள்.

12. மேற்படி விநாயக முதலியார் தருமத்தின் அசையும் அசையாப் பொருள்கள் யாவும் மேற்படி மானேஜிங் கமிட்டியின் ஸ்வாதீனம் இருக்கவேண்டும்.

13. முக்கியமான தஸ்தாவேஜ் வகையறுக்கள் ஒரு ஸேபிலாவது பெட்டியிலாவது வைத்து இரண்டு பூட்டுச் சாவிகள் போட்டு இரண்டு சாவிகளில் ஒரு சாவி ப்ரெசிடெண்டு வசத்திலும் மற்றொரு சாவி செக்ரிடெரி வசத்திலும் இருக்கவேண்டும்.

14. தருமத்தின் சொந்தமான பணம் சங்கத்தின் ட்ரெஷரர் சார்ஜில் இருக்க வேண்டும். அவர் ரூபாய் 10க்கு அதிகப்பட்ட தொகையை தன் கையில் வைத்துகொள்ளாமல் மானேஜிங் கமிட்டியாரால் தீர்மானிக்கப்பட்ட ஒரு பாங்கில் கட்டவேண்டும். செக்ரிடெரி ட்ரெஷரர் இருவரும் சேர்ந்துதான் கணக்கைக் காரியப்படுத்த வேண்டும்.

15. மேற்படி விநாயக முதலியார் தருமங்களின் வரவு செலவுக்கு மேற்படி மானேஜிங் கமிட்டியார் சரியான கணக்கு

கள் வைத்து, அவைகளை வருஷத்திற்கு ஒரு முறை தொண்டமண்டலம் சோழிய வேளாள மரபு தரும சங்கத்திற்கு அனுப்பவேண்டும். அவர்கள் அதைத் தங்களுடைய ரிமார்க்குடன் பிரசித்தம் செய்யவேண்டும்.

16. தருமத்திற்கு சம்பந்தப்பட்ட எல்லா தஸ்தாவேஜுகளும் சங்கத்தின் ப்ரெஸிடெண்டு செக்ரிடெரி இவர்கள் பேருக்கு இருக்கவேண்டும். தருமத்தின் நிமித்தம் கொடுக்க வேண்டிய பில்லு வகையறாக்கள் இவர்களால் கையெழுத்து செய்யப்படவேண்டும்.

17. மேற்படி கமிட்டி குறைந்தது மாதம் ஒரு முறையாவது தரும கணக்குகளை பாஸ் செய்வதற்கும் தருமத்திற்கு சம்பந்தமான இதர விஷயங்களைப் பைசல் செய்வதற்கும் கூடவேண்டும். நடவடிக்கைகளையும் கணக்குகளையும் கையெழுத்துச் செய்யவேண்டும்.

18. தருமத்திற்கு சம்பந்தப்பட்ட எல்லா லைசன்ஸுகளும் சங்கத்தின் செக்ரிடெரியின்மேல் பெறவேண்டும்.

19. மேற்கண்ட மானேஜிங் கமிட்டியின் அதிகாரத்திற்கு உட்பட்டு தருமத்தின் வேலைக்காரர்களெல்லாம் சங்கத்தின் செக்ரிடெரியின் அதிகாரத்திற்குள்ளாயிருக்கவேண்டும்.

20. மேற்படி கமிட்டியாவது, சங்கமாவது தரும சொத்துக்களை விற்கவாவது, குதுவை வைக்கவாவது அல்லது வேறுவிதமாகப் பாராதீனம் செய்யவாவது அதிகாரம் கிடையாது. தரும சொத்துக்களை ஒருகாலத்தில் இரண்டு வருஷங்களுக்கு மேற்பட்டு யாதொரு குடித்தனக் காரருக்கும் குடிக்கூலிக்கு விட அதிகாரம் இல்லை.

21. உபவிதிகளை சங்கத்தின் ஆமோதிப்புடன் தங்கள் வேலைகளை நடத்த ஏற்படுத்திக்கொள்ள மேற்படி கமிட்டியாருக்கு அதிகாரம் உண்டு.

22. 3-வது பிரதிவாதி அவர் ஸ்வாதீனத்தில் இப்போது இருக்கும் இந்த ஷெட்யூலில், 2, 3 ஐட்டங்களாகிய சத்திரம், தோட்டம் இவைகளுக்கு சம்பந்தபட்ட சீட்டுக்களையும் மற்ற தஸ்தாவேஜுகளையும் தருமத்துக்கு சொந்தமான எல்லா அசையும் அசையாப் பொருள்களையும் அவரால் உறுதி படுத்தப்பட்ட பூர்ண லீஸ்டுடன் இன்றுமுதல் ஒருமாதத்திற்குள் மேற்படி மானேஜிங் கமிட்டியாரிடம் ஒப்புவிக்க வேண்டும். மேல்கண்டபடி 3 வது பிரதிவாதி தருமத்திற்குச் சொந்தமான எல்லா அசையும் அசையாப் பொருள்களை மேற்படி மானேஜிங் கமிட்டியாரிடம் ஒப்பிவித்ததும் மேற்படி 3-வது பிரதிவாதிக்கு 1-வது பிரதிவாதி தானே ரூபா 2,000 (இரண்டாயிரம்) கொடுக்கவேண்டும். 3-வது பிரதிவாதி இந்த வியாஜியத்தில் அவர் காஸ்டை அவரே கொடுத்துக் கொள்ள வேண்டும்.

23. இதில் ஷெட்யூல் 2, 3 ஐடங்களாகிய சத்திரத்தை ரிப்பேர் செய்யவும், தோட்டத்தை விருத்தி செய்யவும், மேற்படி மானேஜிங் கமிட்டியாருக்கு 1-வது பிதிவாதி தானே ரூபாய் 1,750 (ஆயிரத்து எழுநூற்று ஐம்பது) கொடுக்க வேண்டும்.

24. 1-வது பிரதிவாதி தானே ரூபாய் 500 (ஐந்நூறு) வாதிகளுக்கு இந்த வியாஜியத்தில் காஸ்டுக்காகக் கொடுக்க வேண்டியது. இந்த வியாஜியத்தில் அவருடைய காஸ்டை அவரே கொடுக்க வேண்டியது.

25. மேற்கண்ட பிரகாரணங்களில் விதிக்கப்பட்ட விஷயங்களுக்கு மேற்சொன்னபடி 1-வது பிரதிவாதி கொடுக்க வேண்டிய வகையில் தவிர இன்று வரையில் 1-வது பிரதிவாதி தரும கடைகளை மானேஜ்மெண்டு செய்து வந்ததில்,

அவர்கையில் தான் ஒப்புதல் சொல்லவேண்டிய யாதொரு தரும பணமும் கிடையாது.

26. இதில் எல்லா பார்டிகளும் ஏதேனும் அவசியம் நேரிடும் போது இந்தக் கோர்ட்டுக்கு விண்ணப்பம் செய்யச் சுதந்திர முடையவர்கள் ஆவர்கள்.

வியாசர்பாடி விநாயக முதலியார் தருமத்திற்குச் சொந்தமாகிய அசையாப் பொருள்களின் ஷெட்யூல்.

## ஐடம் 1.

நிலம் (மேல் கட்டடமுள்பட) மதிராஸ் ஜார்ஜ் டவுன் ரீசர்வே நெ. 11026இல் தென் மேற்கு பக்கம், நெ. 2308 சர்ட்டிபிகேட்டில் பாகம், சைனாபஜார் ரோட் இப்போதைய டோர் நெம்பர் 217ல் பாகம், 1-வது பிரதிவாதியின் ரிட்டன் ஸ்டேட்மெண்டில் சேர்ந்த பிளானில் கொடுக்கப்பட்ட தரும கடைகளின் அளவை அனுசரித்தும், அவைகளின் எல்லைகளையும், சுவர்களையும் அனுசரித்தும், ரீசர்வேப்படி சைனா பஜார் ரோட்டுவரையில் இவைகளுக்கு நேர் தென்புறம் மிருக்கும் விஸ்தீரணத்தை அனுசரித்தும் நிர்ணயித்தபடி வடக்கு தெற்கு அளவு 24 அடி 6 அங்குலம், கிழக்கு மேற்கு அளவு 13 அடி, வடக்கிலும் கிழக்கிலும் அத்து 1-வது பிரதிவாதிக்குச் சொந்தமாகிய ரீசர்வே நெம்பர் 11026 இன் மற்றப்பாகம், தென்னண்டை அத்து சைனா பஜார் ரோட், மேலண்டை அத்து ரீசர்வே நெம்பர் 11025, அடியில் சேர்க்கப்பட்ட ஸ்கெட்சில் A B C D என்று மார்க்கு செய்து சுமார் 318½ சதுர அடி அளவு உடையது.

ரீசர்வே நெ. 11026 இன் பாகம் ஸ்கெட்சு A B C D என்று மார்க்கு செய்திருக்கிறது.




## ஐடம் 2.

சத்திரமும் மனையும் தென்னண்டை மாடவீதி மயிலாப்பூர், டோர் நெம்பர் 13, ரீசர்வே நெம்பர் 3532, சர்டிபிகேட் நெம்பர் 4311, வடக்கில் எல்லை தென்னண்டை மாடவீதி, தெற்கில் ரீசர்வே நெம்பர் 3529, கிழக்கில் ரீசர்வே நெம்பர் 3531, மேற்கில் ரீசர்வே நெம்பர் 3533, விஸ்தீரணம் 1 மனை 1900 சதுர அடி.

## ஐடம் 3.

*தோட்டம் நுங்கம்பாக்கத்தில், முனிசிபல் நெம்பர் 2-23 கோடம்பாக்கம், ரோட்டு, ரீசர்வே நெம்பர் 196, சர்ட்டிபிகேட் நெம்பர் 8412, வடக்கில் எல்லே ரீசர்வே நெம்பர்கள் 197, 188, தெற்கில் கோடம்பாக்கம் ரோட்டும் ரீசர்வே நெம்பர் 191ம், கிழக்கில் ரீசர்வே நெம்பர்கள் 190, 188, மேற்கில் ரீசர்வே நெம்பர் 571, விஸ்திரணம் ஆறு காணி பதினைந்து மனை 1298 சதுர அடி.*

(சைண்டு) T. எதிராஜ முதலியார்,
**வாதிகள் வக்கீல்.**

(சைண்டு) V. கோவிந்தாச்சாரி,
**1-வது பிரதிவாதியின் வக்கீல்.**

(சைண்டு) C. சோக்கலிங்க முதலியார்,
**1-வது வாதி.**

(சைண்டு) C. முத்துசாமி முதலியார்,
**2-வது வாதி.**

(சைண்டு) C. வெங்கடசுப்பராமய்ய,
**3-வது பிரதிவாதியின் வக்கீல்.**

(சைண்டு) V. சோமசுந்திர முதலியார்,
**1-வது பிரதிவாதி.**

(சைண்டு) V. கெங்காதர முதலியார்,
**2-வது பிரதிவாதி.**

(சைண்டு) V. ஞானசிகாமணி முதலியார்.
**3-வது பிரதிவாதி.**

1, 2, 3 பிரதிவாதிகளுக்கு என்னுல் எக்ஸ்பிளெயின் செய்யப்பட்டது. அவர்களால் இன்று 1918ஸ் செப்டெம்பர் மாதம் 30-ந்தேதி கை எழுத்துச் செய்யப்பட்டது.

என் முன்பாக,
(சைண்டு) N. கிருஷ்ணசுவாமி,
அஸிஸ்டெண்டு இன்டர்பிரட்டர்.

நெ. 503
21-10-18.

இந்தக் கேசின் ஸ்திதியில் இந்த ராஜியானது சரியானது என்று நான் நினைக்கிறேன்.

(சைண்டு) S. ஸ்ரீனிவாச அய்யங்கார்,
அட்வோகேட் ஜெனரல்.

---

இந்தக் கேசில் ஏற்படுத்திக்கொண்ட ராஜிக்கு C. வேலாயுத முதலியாரும் A. தங்கவேலு முதலியாரும் செய்த ஆக்ஷேபனையும் இதின் விஷயமாகப் பைல் செய்த அபிடெவிட்டுகளும் அதன்மேல் கோர்ட்டார் தீர்மானமும்

---

## ஜட்ஜஸ் ஸம்மன்ஸ்

## மதராஸ் ஐகோர்ட் ஆப் ஜூடிகேசரில் ஆர்டினரி ஒரிஜினல் சிவில் ஜூரிஸ்டிக்ஷன்

## ஸி. எஸ். நே. **97** ஆப் **1918**.

1. C. சொக்கலிங்க முதலி, இன்னும் மற்றொருவர், } வாதிகள்.

அண்டு

2. V. சோமசுந்திர முதலி, இன்னும் இருவர்கள், } பிரதிவாதிகள்.

1. C. வேலாயுத முதலி,
2. A. தங்கவேலு முதலி, } மனுதாரர்கள்.

மேற்கண்ட மனுதாரர்கள் இந்த வியாச்சியத்தில் பார்ட்டி வாதிகளாக ஏன் சேர்க்கப்படக் கூடாதென்றும் இதில் உத்தேசித்த சமாதான ஏற்பாட்டை ஆக்ஷேபிக்க அவர்களுக்கு ஏன் அனுமதி கொடுக்கக் கூடாதென்றும் இந்த வியாஜியத்தை அவர்கள் ஏன் இன்னும் நடத்தப்படாதென்றும் கோர்டுக்கு இந்தக் கேசின் சந்தர்ப்பத்தில் அவசியமும் சரியென்றும் தோன்றும்படியான ஆர்டரை ஏன் செய்யக்கூடாதென்றும் இந்த அப்ளிகேஷனுக்கு சம்பந்தப்பட்ட காஸ்டுகள் ஏன் இந்த வியாஜியத்தில் காஸ்டுகள் என்று கொள்ளக் கூடாதென்றும் காட்டுவதற்கு 1918வஙு நவம்பர்மீ 18உ முற்பகலில் 10-45 மணிக்கு இதற்கு சம்பந்தப்பட்ட பார்ட்டிகளெல்லாம் சேம்பர்ஸில் ஸிட்டிங் ஜட்ஜ் எதிரில் ஆஜராகக் கடவர்.

9உ நவம்பர் 1918. (சைண்டு)

அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார்.

இந்த ஸம்மன்ஸ் இதில் மனுதாரர்களின் வக்கீல்களாகிய V. V. ஸ்ரீனிவாச அய்யங்கார், K. ராஜா அய்யர் அண்டு V. சிவப்பிரகாச முதலியாரால் எடுக்கப்பட்டது. இதில் மனுதாரர்களாகிய C. வேலாயுத முதலியார் A. தங்கவேலு முதலியார் இவர்களுடைய அபிடெவிட்டால் ஆதரிக்கப்பட்டது.

*To*

1. T. எதிராஜ முதலியார்,

வாதிகளின் வக்கீல்.

2. M. R. ஸத்தியமூர்த்தி அய்யர்,
1-வது பிரதிவாதி வக்கீல்.

3. V. கெங்காதர முதலியார்,
நெ. 14. கள்ளுகாரன் தெருவு, மயிலாப்பூர்,
2-வது பிரதிவாதி.

4. C. வெங்கடசுப்பராமய்ய,
3-வது பிரதிவாதி வக்கீல்.

(சைண்டு) V. V. சீனிவாசய்யங்கார்,
" K. ராஜா அய்யர்,
" V. சிவப்பிரகாசம்,
மனுதாரர்களின் வக்கீல்கள்.

---

ஜட்ஜஸ் ஸம்மனுக்கு ஆதாரமாக இந்த மனுதாரர்களால் அபிடெவிட்டு

மதராஸ் ஐகோர்ட் ஆப் ஜூடிகேசரில்
ஆர்டினரி ஒரிஜனல் ஸிவில் ஜூரிஸ்டிக்ஷன்
ஸி. எஸ். நே. **97** ஆப் **1918.**

C. சொக்கலிங்க முதலியார், அண்டு மற்றொருவர், } வாதிகள்.

வெர்ஸஸ்

V. சோமசுந்திர முதலியார், அண்டு மற்ற இருவர்கள், } பிரதிவாதிகள்.

1. C. வேலாயுத முதலியார்,
2. A. தங்கவேலு முதலியார், } மனுதாரர்கள்.

நாங்கள் 1. C. வேலாயுத முதலியார் C. கந்தசாமி முதலியார் குமாரர் வேளாளகுல இந்து ஏஜெண்டு சுமார்

47 வயது இருப்பிடம் நெ. 4 மணங்கப்பன் தெருவு ஜார்ஜ் டவுன் மதராஸ். 2. A. தங்கவேலு முதலியார் A. விஸ்வநாதமுதலியார் குமாரர், வேளாளகுலம், இந்து, கவர்ன்மெண்டு உத்தியோகம், மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டு பெயிலீப், சுமார் 54 வயது, இருப்பிடம் நெ. 49, நாட்டுப்பிள்ளையார் கோயில் தெருவு, ஜார்ஜ்டவுன் மதராஸ். இதனால் பிரமாணமாயும், மனப்பூர்வமாயும் ஊர்ஜ்ஜித்து பின்வருமாறு சொல்லுகிறோம்.

1. மேற்படி வியாஜியத்தில் பிளெயிண்டில் கண்ட தருமங்கள் சோழிய வேளாள ஜாதியாருக்குப் பொது. நாங்கள் இருவரும் மேற்படி ஜாதியைச் சேர்ந்தவர்கள். கூடவும் நாங்கள் மேற்படி ஜாதியாரால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டி மெம்பர்கள்.

2. பிரதிவாதிகளை தரும மானேஜ்மெண்டிலிருந்து நீக்கி விடவும், புது டிரஸ்டிகளை ஏற்படுத்தவும், அவர்களுடைய மானேஜ்மெண்டுக்கு கணக்கு கொடுக்கவும், புது டிரஸ்டிகளிடம் வாதிகள் தரும சொத்துக்களை ஒப்புவிக்க செய்யவும், ஒரு ஸ்கீமை செட்டில் செய்யவும், இன்னும் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்காகவும் வாதிகள் மேற்படி ஜாதியை சேர்ந்தவர்களாகவும் தருமத்தில் பற்றுள்ளவர்களாகவும் அட்வோகேட் ஜனரலின் அனுமதியைப் பெற்று மேற்படி வியாஜியத்தை தாக்கல் செய்தார்கள்.

3. தருமத்திற்கு வைக்கப்பட்ட முக்கிய சொத்தானது சைனாபஜார் ரோட்டில் இரண்டு கடைகள். முதல் பிரதிவாதியால் டிரஸ்டுக்கு விரோதமான மற்ற செய்கைகளுடன் கடைகள் எல்லாம் அவர் தனி சுவாதீனத்திலேயே இருந்தமையால் அவரது அனேக செய்கைகளால் தரும

சொத்தின் உருவு மாற்றப்பட்டு அவர் சொத்துடன் சொந்த சொத்தைப்போல் சேர்க்கப்பட்டனவென்று வாதிகள் சொல்லி யிருக்கிறார்கள். முதல் பிரதிவாதியின்மேல் சுமத்திய சார்ஜிகளின் விவரத்திற்கு ப்ளெயிண்டைப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

4. மற்ற டிரஸ்டிகளாகிய 2, 3, பிரதிவாதிகள் தரும சொத்தின் விஸ்தீரணம், அளவுகளைப்பற்றி வாதிகள் கேசை பெரும்பாலும் ஆதரித்தார்கள். இஷ்ஷூகள் ஏற்படுத்தி கேஸ் விசாரணைக்கு வந்தது. பிறகு வாதி பிரதிவாதிகள் ராஜினமா செய்துகொண்டதாக அறிகிறோம் இந்த ராஜி னமா தருமத்தின் நன்மைக்கு விரோதம். இந்த விஷயத் தில் ராஜினமா செய்துகொள்ள அவசியம் இல்லை. வாதங் களையும் ஒத்துக் கொள்ளப்பட்ட விஷயங்களையும் சும்மா வாசித்தாலே உத்தேசித்திருக்கும் ராஜியானது தருமத் திற்கு அனுகூலம் இல்லை யென்றும் மெத்தவும் பிரதி கூலமென்றும் நன்றாய் ஏற்படும். இந்தக் கேசில் வாதங் களையும் ராஜினமா ஷரத்துகளையும் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். உத்தேசித்த ராஜினமாவால் தருமத் திற்கு சைனுபஜார் ரோட்டில் விலையுள்ள அதிக விஸ் தீரணம் நஷ்டமாகும்.

5. அன்றியும் லாபடிக்கு ஒரு ஸ்கீம் வியாஜியமானது ராஜி செய்யக்கூடியதல்ல என்று எங்களுக்குச் சொல்லு கிறார்கள்.

6. நாங்கள் மற்ற பகுஜனத்தாரில் சேர்ந்தவர்களாக இந்த ராஜிக்கு ஆக்ஷேபிக்கிறோம். நாங்கள் பார்டி வாதிக ளாக ரிகார்டில் வர விரும்புகிறோம். தருமத்தின் தரப்பில் வியாஜியத்தை நடத்த நாங்கள் சித்தமாயிருக்கிறோம்.

7. ஆகையால் பின் வருபவைகள் அவசியம்:—

(1) நாங்கள் பார்டி வாதிகளாக சேர்க்கப்படவேண்டும்.

(2) உத்தேசித்த ராஜியை எதிர்ப்பதற்கு எங்களுக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்.

(3) இந்த வியாஜியத்தை இன்னும் நடத்தும்படி எங்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

1918ஹு நவம்பர்மீ 8உ மதராஸ் ஐகோட்டு ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் பிரமாணத்தின்மேல் ஊர்ஜ்ஜிதம் செய்யப்பட்டது.

(சைண்டு) C. வேலாயுத் முதலியார்.
,, A. தங்கவேலு முதலியார்.
என் முன்னிலையில்,
,, K. செங்கல்வராய அய்யர்,
கமிஷனர்.

அமெண்டுமெண்டு 1918ஹு நவம்பர்மீ 15உ மதராஸ் ஐகோர்ட்டு ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் மறுபடி ஊர்ஜ்ஜிதம் செய்யப்பட்டது.

(சைண்டு) A. தங்கவேலு முதலியார்.
என் முன்னிலையில்,
,, K. செங்கல்வராய அய்யர்,
கமிஷனர்.

# 3-வது பிரதிவாதி வி. ஞானசிகாமணி முதலியாருடைய கவுண்டர் அபிடெவிட்

மதராஸ் ஐகோர்ட் ஆப் ஜுடிகேசரில்
ஆர்டினரி ஒரிஜினல் ஸிவில் ஜுரிஸ்டிக்ஷன்
ஸி. எஸ். நெ. **97** ஆப் **1918**.

பிட்வீன் :

| | |
|---|---|
| C. சொக்கலிங்க முதலியார், அண்டு மற்றொருவர், | வாதிகள். |
| அண்டு | |
| V. சோமசுந்திர முதலியார், அண்டு மற்றவர்கள், | பிரதிவாதிகள். |
| C. வேலாயுத முதலியார், அண்டு மற்றொருவர். | மனுதாரர்கள். |

நான் V. ஞானசிகாமணி முதலியார், விநாயக முதலியார் குமாரர், வேளாலகுலம், இந்து, மதராஸ் பேப்பர் கரன்சி ஆபீசு அட்டண்டர், 53 வயது, குடியிருப்பு நெ. 27 அண்ணா பிள்ளை தெருவு ஜார்ஜ்டவுன் மதராஸ் இதனால் பிரமாணமாயும் உருதியாயும் பின்வருமாறு சொல்லுகிறேன்.

1. இந்த வியாஜியத்தில் நான் மூன்றாவது பிரதிவாதி.

2. வேலாயுத முதலியார், தங்கவேலு முதலியார் இவர்களுடைய அபிடெவிட்டு எனக்கு வாசிக்கப்பட்டது. எக்ஸ்ப்ளெயினும் செய்யப்பட்டது.

3. மனுதாரர்களுக்கு இந்த ராஜி தெரியும், இவர்கள் சோழிய வேளாள ஜாதி கமிட்டியின் மெம்பர்கள். இந்த கமிட்டி நன்றாய் ஆலோசித்த பிறகுதான் இந்த ராஜியை ஒப்புக்கொண்டார்கள்.

4. தருமத்திற்கு இந்த ராஜியானது மிக கெடுதி என்பதை நான் மறுக்கிறேன். இந்த ராஜி தருமத்திற்கு அனுகூலமானது.

5. இந்த வியாஜியத்தில் கஷ்டம் எதுவென்றால் தரும சொத்து இன்னதுதான் என்று கோர்ட்டார் திருப்திக்கு காட்டி ருசுவு செய்வது. ஆதலால் இந்த சந்தர்ப்பத்தில் ராஜி செய்து அதில் தரும சொத்தை விவரித்தல் யுக்தம் என்று நினைக்கப்பட்டது.

6. இந்த ராஜிமுடிவு செய்ததில் ஏதேனும் கூட்டுகள்ள யோசனை உண்டென்பதை நான் மறுக்கிறேன். மேலும் மரபினில் கவர்ன்மெண்டு பென்ஷனர் க. சுப்பராய முதலியார் உள்பட கவரவமுள்ளவர்கள் பிரவேசித்து இந்த ராஜியை முடிவு செய்தார்கள்.

7. இந்த ராஜியானது கோர்ட்டு உத்தரவின்படி அட்வொகேட் ஜெனரல் ஆமோதிப்புக்கு அனுப்பப்பட்டது. அட்வொகேட் ஜெனரல், பார்டிகளையும் மிஸ்டர் ராஜா அய்யர், மிஸ்டர் சிவப்பிரகாச முதலியார் இவர்களால் ரெப்ரெசெண்டு செய்யப்பட்ட மனுதாரர்களின் ஆக்ஷேபனைகளையும் இரண்டு நாள் விசாரித்து ராஜி தருமத்திற்கு அனுகூலமென்று சாங்கிஷன் செய்தார்.

8. அட்வொகெட் ஜெனரல் எதிரில் மனுதாரர் ஜயமடையாமல் இந்த கோர்ட்டில் அவர்களை அட்டிஷனல் வாதிகளாக்கும்படி கேட்டார்கள்.

9. சிவில் புரொஸீஜர் கோட் 92-வது செக்ஷன்படி மனுதார் இவ்வியாஜியத்தை நடத்த முதலில் அட்வொகேட் ஜனரல் ஸாங்கிஷனைப் பெறவேண்டும். வியாஜியம் செய்த

வாதிகளுக்குதான் அட்வோகேட் ஜனரல் ஸாங்கிஷன் கொடுக்கப்பட்டது.

1918ஞ நவம்பர்மீ 15ட மதராஸ் ஐகோர்டு ரிஜிஸ்ட்ரார் ஆபிசில் என் முன்னிலையில் டிபோனென்டு (deponent)க்கு இங்கிலீஷ் தெரியாததால் அவருக்கு இதிலுள்ளவை களை உண்மையாயும், செவிகேட்கும்படியும் வாசித்து அவர் அறியும்படி தமிழில் அவருக்கு எக்ஸ்ப்ளெயின் செய்து, அவர் செவ்வையாய் அறிந்துகொண்டதாக அவரால் பிரமாணமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

(சைண்டு) வி. ஞானசிகாமணி முதலியார்.

என் முன்னிலையில்,

(சைண்டு) N. கிருஷ்ணசாமி,
இன்டர்ப்ரடர் அண்டு கமிஷனர்.

(சைண்டு) சி. வெங்கடசுப்ராமய்ய,
3-வது பிரதிவாதி வக்கீல்.

---

## வி. சோமசுந்திர முதலியாரின் கவுண்டர் அபிடெவிட்

### மதராஸ் ஐகோர்டு ஆப் ஜுடிகேசரில் ஆர்டினரி ஒரிஜனல் ஸிவில் ஜுரிஸ்டிக்ஷன் ஸி. எஸ். நெ. 97 ஆப் 1918.

1. C. சொக்கலிங்க முதலியார், அண்டு மற்றொருவர், } வாதிகள்.

வர்ஸஸ்

| | | |
|---|---|---|
| 1. V. சோமசுந்தர முதலியார், அண்டு இருவர்கள், | } | பிரதிவாதிகள். |
| அண்டு | | |
| 1. C. வேலாயுத முதலியார், அண்டு மற்றொருவர், | } | மனுதாரர்கள். |

நான் வி. சோமசுந்திர முதலியார், விநாயக முதலியார் குமாரர், வேளாளகுல இந்து, வயது 70, பூஸ்திதிவந்தர், குடியிருப்பு, நெ. 14, சாலை தெருவு, மயிலாப்பூர், மதராஸ். இதனால் பிரமாணமாயும் மனப்பூர்வமாயும் உருதியாயும் பின் வருமாறு சொல்லுகிறேன் :—

1. இதில் நான் 1-வது பிரதிவாதி.

2. ஜட்ஜெஸ் ஸம்மனுக்கு ஆதாரமாக வேலாயுத முதலியார், தங்கவேலு முதலியார் இவர்களால் ஜாயின்டாய்போடப் பட்ட அபிடெவிட்டை எனக்கு வாசித்து விவரிக்கப்பட்டது.

3. நான் சொல்வதாவது இந்த வியாஜியம் தாக்கல் லான பிறகு வாஸா பாலைய்ய செட்டியார், கந்தசாமி முதலியார் இன்னும் சிலர் உள்பட பெரிய மனுஷாள் தருமத்தின் நன்மையைப்பற்றி சில ஏற்பாட்டின்பேரில் ராஜியாவது நன் ருய் இருக்குமென்று சொல்லி சோழிய வேளாள மரபு கமிட்டியார் முன்னிலையில் அவர் சம்மதிக்கு இந்த ஏற்பாடுகளை வைத்தார்கள்.

4. இந்த மரபில் முக்கியமானவர்களால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டமையால் அவைகளுக்கு நான் ஒப்புக்கொண் டேன் என்று சொல்லுகிறேன்.

5. இந்த ராஜிநாமா மிக யோசனையுடனும் டிரஸ்டின் நன்மையை பாதுகாக்கும்பொருட்டு மிக ஜாக்கிரதையுடனும் முக்கியமாய் அதற்காகவே எழுதப்பட்டது என்றும் நான் சொல்லுகிறேன்.

6. 1-வது மனுதார் இந்த ராஜியை ஒத்துக்கொண்டா ரென்றும், அவருக்கு கமிட்டி மீடிங்கைப்பற்றி நோட்டீஸ் அனுப்பப்பட்டதென்றும், ஆனல் அவர் மற்றொரு மீட்டிங் குக்கு போக வேண்டுமென்றும், இதற்கு அவர் வர முடியா தென்று தெரிவித்தாரென்றும், 2-வது மனுதார் உள்பட கமிட்டி மெம்பர்கள் ராஜிநாமா ஷரத்துகளை பாஸ் செய்தா ரென்றும், பிறகு இந்த ராஜிநாமா 1-வது மனுதாருக்கு காட்டப்பட்டு அதை ஒப்புக்கொண்டாரென்றும் எனக்கு தெரியவருகிறது. அதை நான் உண்மையென்று நம்புகிறேன்.

7. வந்திருந்த கமிட்டி மெம்பர்கள் எல்லாரும் ஒரே மனதாய் ராஜிநாமாவை ஒப்புக்கொண்டார்க ளென்றும், பிறகுதான் அது கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டதென் றும் எனக்கு தெரியவருகிறது. அதை நான் உண்மை யென்று நம்புகிறேன்.

8. வியாஜியம் விசாரணைக்கு வந்தபோது கனம் தங் கிய இஸ்லார்ட்ஷிப்பு ஜஸ்டிஸ் வி. எம். சி. டிராட்டர் அவர் கள் ராஜிநாமாவை ஆட்வோகேட் ஜெனரலினுடைய ஆமோ திப்புக்கு அனுப்பினரென்று நான் சொல்லுகிறேன்.

9. ஆட்வோகேட் ஜெனரல் எல்லா பார்ட்டிகளுக்கும் போதுமான நோட்டீசு கொடுத்து இரண்டு அட்ஜர்ண்டு விசா ரணைகளில் மனுதாரால் சொல்லப்பட்ட எல்லா ஆக்ஷேபங் களையும் கேட்டு, அவர் பார்வைக்கு கொடுக்கப்பட்ட அநேக பிளான்களையும், பார்ட்டிகளின் வாதங்களையும் அபிடெவிட் ஆப் டாக்யுமெண்ட்டில் சொல்லப்பட்ட தஸ்தாவேசுகளையும் ஸ்பெஷல் டவுன் சர்வே சார்ஜில் இருந்துகொண்டு இந்த இடத்தை அநேக தடவைகளில் நேரே ரூபீல் போய் பார்த்த ஸ்பெஷல் டிப்டி கலெக்டர் ஆப் மதிராஸால் கொடுக்கப்பட்ட

அபிப்பிராயத்தையும் தீர்க்கமாய் யோசித்து இதற்கு சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் ப்ளெயிண்டில் சொல்லப்பட்ட வாதங்கள் எவ்வளவு தூரம் நிலைபெறச் செய்யக் கூடும் என்பதையும் யோசித்து ராஜிநாமாவானது சரியாயும், நியாயமாயும் செய்யப்பட்டதென்று அட்வேகேட் ஜெனரல் அறிந்துகொண்டவராய் அந்த ராஜிநாமாவை ஒப்புக்கொண்டார் என்று நான் சொல்லுகிறேன்.

10. இந்த விஷயமானது ஆட்வோகேட் ஜெனரல் முன்னிலையில் பரிசோதனையி லிருந்தபோது மனுதார்கள் இதைப் போலவே அட்வோகேட் ஜெனரலுக்கு ஒரு மனுவு கொடுத்து தாங்கள் வாதி ஸ்தானத்தில் வந்து கேசை நடத்த உத்தரவு கேட்டார்கள். ஆனால் அட்வோகேட் ஜெனரல் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை.

11. அபிடெவிட்டின் 4-வது பாராவின் கடைசி பாகத்தில் சொல்லப்பட்ட நிராதாரமான சங்கதியை நான் தீரமாய் மறுக்கிறேன். இந்த விஷயத்தில் யாதொரு கள்ளக் கூட்டு யோசனை இல்லை யென்றும் எல்லாம் தருமத்தின் நன்மைக்கே செய்யப்பட்டதென்றும் நான் சொல்லுகிறேன்

12. கடைகளில் ஆல்டரேஷன் குடித்தனக்காருடைய அவசரத்தைப்பற்றி செய்யப்பட வேண்டியதாயிருந்த தென்றும் அது நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டதென்றும் நான் சொல்லுகிறேன்.

13. மனுதார்களுடைய இப்போதிய மனுவானது சரியான எண்ணத்துடன் அல்லவென்றும் பூராவாய் சுயகாரிய கருத்துடனென்றும் நான் சொல்லுகிறேன்.

14. இந்த சந்தர்ப்பங்களில் மனுதார்களின் வேண்டுகோளுக்கு அனுமதி கொடுத்தல் யுக்தமல்லவென்றும், நியாயமல்ல

வென்றும் உயர்தரப்படி காஸ்டுகளை டாக்ஸ்செய்து மனுவை டிஸ்மிஸ் செய்யவேண்டு மென்றும் நான் சொல்லுகிறேன்.

1918ளு நவம்பர்மீ 18உ மதராஸ் ஐகோர்டு ரிஜிஸ்ட்ரார் ஆபிஸில் என் முன்னிலையில் டிபோனெண்டு (deponent) க்கு இங்கிலீஷ் தெரியாதலால் அவருக்கு இதிலுள்ள வைகளை உண்மையாயும் செவி கேட்கும்படியாயும் வாசிக்கப்பட்டு அவர் அறியும்படி தமிழில் அவருக்கு எக்ஸ்ப்ளெயின் செய்து அவர் செவ்வையாய் அறிந்து கொண்டவராக அவரால் பிரமாணமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

(தமிழில் கையெழுத்து)
வி. சோமசுந்திர முதலியார்.
என் முன்னிலையில்,
K. வேங்கடரங்கம் நாயுடு,
கமிஷனர்.

(சைண்ட்) S. G. சடகோப முதலியார்,
1-வது பிரதிவாதியின் அட்டர்னி.

---

## க. சொக்கலிங்க முதலியார் அபிடெவிட்டு

### மதராஸ் ஐகோர்ட் ஆப் ஜுடிகேசரில் ஆர்டினரி ஒரிஜனல் ஸிவில் ஜுரிஸ்டிக்ஷன் ஸி. எஸ். நே. 97 ஆப் 1918.

பிட்வீன் :

C. சொக்கலிங்க முதலியார், இன்னும் மற்றொருவர், } வாதிகள்.

அண்டு

V. சோமசுந்திர முதலியார், இன்னும் இருவர்கள், } பிரதிவாதிகள்.

நான் க. சொக்கலிங்க முதலியார், க. கிருஷ்ணசாமி முதலியார் குமாரர், வேளாலகுல இந்து, கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர், 38 வயது, இருப்பிடம் மதராஸ் ஜார்ஜ்டவுன் சந்திரப்ப முதலி தெருவு, 12-வது நெ. பிரமாணமாயும் மனப்பூர்வமாயும் ஊர்ஜித்து சொல்லுவது யாதெனில் :—

1. இதில் நான் 1-வது வாதி, க. வேலாயுத முதலியார் ஆ. தங்கவேலு முதலியார் இவர்கள் தங்களை வாதிகளாக சேர்ப்பதற்கும் இன்னும் மற்ற (Releef) பரிகாரங்களுக்கும் ஜட்ஜ்ஸ் ஸம்மனுக்கு ஆதாரமாக போட்ட ஜாயிண்டு அபிடெவிட்டை நான் வாசித்தேன்.

2. அந்த அபிடெவிட்டில் 1 முதல் 3-வது வரையிலுள்ள அம்சங்களை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

3. விசாரணைக்கு கேசை நாங்கள் தயார்செய்துகொண்டிருக்கையில் தரும கடைகளின் விஷயமாக தாவா பூராவையும் ஸ்தாபிக்கவும், அதிகமாக தொகை பிரதிவாதிகள் கொடுக்கக் கடமைப் பட்டவர்களென்று ருசுபடுத்தவும் மிக கடினமா யிருந்தது.

4. எங்கள் இனத்தில் சில பெரிய மனுஷர்களும் 1-வது மனுதாருக்கு எஜமானரும் மிக கவுரவமுள்ள வர்த்தகரான வாலா பாலய்ய செட்டியார் உள்பட தருமத்தில் விசுவாசமுள்ள சில பெரியமனுஷர்களான சிநேகிதர்களும் இந்த விஷயத்தில் அதிக பொருள் செலவிடுவதைவிட ராஜி செய்யலாமென்றார்கள்.

5. வாதி பிரதிவாதிகள் தங்கள் தங்கள் வக்கீல்களை ஆலோசித்து சில ராஜி ஷரத்துகளை ஏற்படுத்தினார்கள். இவைகள் ஜாதியாரால் வியாஜியம் நடத்த ஏற்படுத்திய கமிட்டிக்கு முன் வைக்கப்பட்டன.

6. மேற்படி கமிட்டி 17 மெம்பர்களை உடையது. அதில் இரண்டு வாதிகளும் இப்போதும் மனுதார்களான இருவர்களும் மெம்பர்கள்.

7. உத்தேசிய ராஜிநாமாவை ஆலோசிக்க அந்த கமிட்டி மீட்டிங்கானது 1918ஸு செப்டம்பர்மீ 22உ கூட்டப்பட்டது. கமிட்டி மெம்பர்களுக்கெல்லாம் மீட்டிங்கு நோட்டீசு சரியாய் கொடுக்கப்பட்டது. அந்த மீட்டிங்கில் கமிட்டி மெம்பர்கள் 12 பேர்கள் வந்திருந்தார்கள். வந்தவர்களில் இப்போது ஒரு மனுதாராகிய A. தங்கவேலு முதலியார் ஒருவர். மற்றொரு மனுதாராகிய C. வேலாயுத முதலியார் வரவில்லை.

8. அந்த கூட்டத்தில் ராஜியின் ஷரத்துகள் தீர்க்கமாயும் விவரமாயும் யோசிக்கப்பட்டது. வந்திருந்தவர்களெல்லாம் ஒரேமனதாய் ராஜி ஷரத்துகள் தருமத்திற்கு அனுகூலமானவை யென்றும், வாதிகள் இந்த ஷரத்துகளை அமுலுக்கு கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

9. ஆதலால் ராஜியின் ஷரத்துகளை எழுதி மனுதாராகிய C. வேலாயுத முதலியார் மீட்டிங்குக்கு வராதபடியால் அவருக்கு 1918ஸு செப்டம்பர்மீ 28உ காட்டப்பட்டது. அப்பொழுது அவர் அதற்கு ஆக்ஷேபணை ஒன்றும் செய்யவில்லை. 1918ஸு அக்டோபர்மீ 3உ கேஸ் கூப்பிடப்பட்டபோது கோர்டுக்கு இந்த ராஜிநாமா வினயமாய் கொடுக்கப்பட்டது. அப்போது இஸ்லார்ட்ஷிப்பு மிஸ்டர் ஜஸ்டிஸ் கூட்ஸ்டார்ட்டர் அவர்கள் ராஜிநாமாவை கனம் ஆட்வோகேட் ஜெனரலுக்கு ரிபோர்டுக்காக அனுப்பவேண்டும் என்று உத்தரவு செய்தார்.

10. கனம் ஆட்வோகேட் ஜெனரல் பார்டிகளேயும், மனு தார்கள் C. வேலாயுத முதலியார் A. தங்கவேலு முதலியார் இவர்களுடைய வக்கீல்களேயும், கேட்டு இன்னும் அவசியமான விசாரணையை செய்து ராஜி தருமத்திற்கு அனுகூலமென்று ஸர்டிபை செய்தார்.

11. ராஜி கெடுதி என்று சொல்வது உண்மையல்ல. அது பிறபட்ட கற்பனே. ராஜியானது, பற்றில்லாமல் முடிவு செய்யப்படவில்லே என்றும், வியாஜியத்திற்கு சம்பந்தப்பட்ட பார்ட்டிகளுடன் கூட்டு கள்ள யோசனேயோடு செய்தது என்பதும், முற்றும் பொய். கெட்டெண்ணத்துடன் சொல்வதாகும்.

12. வாதிகளாகிய நாங்கள் தருமத்தின் நன்மைக்காக ஜாதியாருடன் ஆலோசித்தும் எங்கள் வக்கிலினுடைய யோசனேயின் பேரிலும் நடந்தோம்.

13 ப்ளெயிண்டில் சொன்னபடி இரண்டு கடைகளும் 342 சதுர அடி கொண்டவை. இப்போது ராஜிபடி $318\frac{1}{4}$ சதுரடி. பிரதிவாதிகள் ஆல்டரேஷன் செய்வதற்கு முந்தி குடிக்கூலிதாரரால் தெரியவரும்படி இரண்டு கடைகளும் $12' \times 16'$ அளவுள்ளன. அப்போதுள்ள மொத்த விஸ்தீரணம் 192 சதுரடி. இரண்டு கடைக்கெதிரில் 1-ம் பிரதிவாதியால் வாங்கப்பட்ட நிலம் 180 சதுரடி. இந்த நிலத்திற்கு எங்களுடைய பாத்தியதை மிக சந்தேகிக்கத்தக்கது. ராஜினுமாபடி இப்போது நாங்கள் பெறும் விஸ்தீரணமானது இப்போது இருக்கும் கட்டடத்தை அனுசரித்தும் கடைகளின் வடக்கு சுவரை உத்தேசித்தும் உள்ளது. இப்போது நாங்கள் பெறுவதின் அளவு $13' \times 24\frac{1}{2}'$ அடி.

14. இந்த மனுவானது மிகவும் வீணுனது. தருமத்திற்கு இடஞ்சலாக வியாஜியத்தை பெருக்க வைப்பதற்கு நோக்கமுள்ளது.

**15.** புது பார்ட்டிகளை இப்போது சேர்ப்பதற்கு காரணமில்லை யென்று எங்களுக்கு யோசனை சொல்லுகிறார்கள்.

16. கனம் பொருந்திய இந்த கோர்ட்டார் மனுதார் தரப்பில் தீர்மானித்தால் எங்களுக்கு செலவாயிருப்பதற்காக 1-ம் பிரதிவாதி கொடுக்கும்படி ஒப்புக்கொண்ட காஸ்டு ரூபா 500-ம் மனுதாரர்கள் வாதிகளுக்கு கொடுக்கும்படி செய்ய வேண்டும்.

மதராஸ் ஐகோர்ட்டு ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் 1918ளு நவம்பர்மீ 18ந்தேதி பிரமாணத்தின்பேரில் உறுதி செய்யப்பட்டது.

(சைண்டு) T. எதிராஜ முதலியார்,
வாதிகள் வக்கீல்.

(சைண்டு) C. சோக்கலிங்க முதலியார்.

என் முன்னிலையில்,
(சைண்டு) K. செங்கல்வராய அய்யர்,
கமிஷனர்.

---

## வி. கெங்காதர முதலியார் அபிடெவிட்டு

மதராஸ் ஐகோர்ட் ஆப் ஜூடிகேசரில்
ஆர்டினரி ஒரிஜினல் ஸிவில் ஜூரிஸ்டிக்ஷன்
சூட் நெ. **97** ஆப் **1918.**

பிட்வீன்:

1. C. சொக்கலிங்க முதலியார்,
2. C. முத்துசாமி முதலியார்,

} வாதிகள்.

அண்டு

1. V. சோமசுந்திர முதலியார்,
2. V. கெங்காதர முதலியார்,  } பிரதிவாதிகள்.
3. V. ஞானசிகாமணி முதலியார்,

நான் வி. கெங்காதர முதலியார், விநாயக முதலியார் குமாரன், இந்து, வேளாள சைவன், குமாஸ்தா, 65-வயது, இருப்பிடம் கெ 19, சாலை தெருவு, மயிலாப்பூர், மதராஸ் பிரமாணமாயும் உண்மையாயும் உறுதியாயும் சொல்வது என்னவென்றால் :—

1. நான் மேற்படி வியாஜியத்தில் 2-வது பிரதிவாதி.

2. காலஞ்சென்ற வியாசர்பாடி விநாயக முதலியார் தருமத்திற்கு நானும் ஒரு டிரஸ்டி.

3. ப்ளெயிண்டு ஷெட்யூல் சொத்துகளில் 3-வது அம்சத்தை 1881 வருஷம் முதல் 1-வது பிரதிவாதி தானே ஸ்வாதீனத்திலும் மானேஜ்மெண்டிலும் வைத்திருந்தார். ப்ளெயிண்டு ஷெட்யூல் சொத்துகளில் 1, 2 அம்சங்களை 1908ஞ் முதல் 3-வது பிரதிவாதி தானே சுவாதீனத்தில் வைத்திருக்கிறார். மானேஜ்மெண்டில் நான் பிரவேசிக்க 1-வது பிரதிவாதியாவது 3-வது பிரதிவாதியாவது எனக்கு இடங் கொடுக்கவில்லை. 1, 3 பிரதிவாதிகள் தருமங்களை அசட்டை செய்தார்கள். தரும சொத்துகளை அழித்தார்கள். தங்கள் சொந்த அனுகூலத்திற்காக அவைகளை துராக்கிருதமாய் உபயோகித்தார்கள். மேலும் 1-வது பிரதிவாதி அப்போதுக்கப் போது தரும கடைகளின் உருவம் மாறும்படி இடித்து மறு கட்டடங்கள் கட்டிவந்தார்.

4. தரும சொத்துகள் இவ்விதமாக மாறுவினியோகமானபடியாலும், வரும்படியை சொந்தக் காரியத்திற்காக 1, 3 பிரதிவாதிகள் வினியோகம் செய்தமையாலும் மேற்

கண்ட 1, 3 பிரதிவாதிகள் தருமம் நடத்துவதை இவ்விதம் அசர்த்தை செய்தமையாலும், நான் முதலில் 1913ஞு தரும சொத்துகளை பாதுகாக்கும் பொருட்டும், தருமத்தை ஏற்படுத்தினபடி தருமம் செய்யும் பொருட்டும் 1, 3 பிரதிவாதிகளால் மிஸ் மானேஜ்மெண்டு இல்லாதபடிக்கும், நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் என் ஜாதியாருக்கு மனு கொடுத்தேன்.

5. சுமார் 1916ஞு விஷயங்கள் இருக்கும் நிலமைய்யை தெரிந்துக்கொண்டு ஜாதியார் வியாஜியம் செய்வதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தினார்கள். ஜாதியாரே இந்த வியாஜியத்திற்கு பணம் செலவிடுவதாக ஒப்புக்கொண்டார்கள். ஜாதியாரில் ஒரு முக்கியதை உடையவராகிய C. சுப்பராய முதலியார் அந்த கமிட்டி மெம்பர்களில் ஒருவர். இந்த வியாஜியம் தாக்கல் செய்வதில் மிக உழைப்பு எடுத்துக்கொண்டார். அவருடைய யோசனையின்பேரில் அவருடைய நெருங்கிய பந்துக்களில் இருவர்கள் அட்வோகேட் ஜெனரல் சாங்கிஷன் பெரும்படி ஏற்படுத்தப்பட்டனர். அவர் வியாஜியமும் தாக்கல் செய்தனர். விஷயங்களை ஆராய்ந்து எடுத்தவரும், ஆதாரங்களை சேகரித்தவரும் வாதிகளின் வக்கீல்களுக்கு (instruction) இன்ஸ்டர்க்ஷன் கொடுத்தவரும் இந்த சுப்பராய முதலியார் தான்.

6. இஃஷ௵ செட்டில் செய்து வியாஜியம் விசாரணைக்கு தயாராயிருக்கும்போது மேற்சொன்ன சுப்பராய முதலியார் வேறுவிதமாகமாறி எவ்விதத்திலேயும் இதை ராஜி செய்ய வேண்டுமென்று மிக்க கவலையாயிருந்தார். வியாஜியத்தில் 3-வது பிரதிவாதி அவருடைய மைத்துனர். (சகோதரியின் பர்த்தா) இவ்விதமான மாறுதல் 3-வது பிரதிவாதியினுடைய

வும் 1-வது பிரதிவாதியினுடையவும் தூண்டுதலினுல்தான் என்று நான் நம்புகிறேன்.

7. நடந்துகொண் டிருக்கும் ஏற்பாடுகளைக் குறித்து நான் பார்ட்டியாக இல்லாத ஒரு ராஜிநுமா என்னிடம் கையெழுத்திற்கு கொண்டுவரப்பட்டது. ராஜநுமா ஷரத்து களை நான் பார்த்ததில் 1-வது பிரதிவாதிக்கு நிஸ் ஸந்தேக மான தரும சொத்தின் பெரும்பாகத்தை விட்டுவிடுவதும் 3-வது பிரதிவாதிக்கு ரூபாய் 2000 கொடுப்பதும் இன்னத் திற்காக என்று எனக்கு தெரியவில்லை. நான் அதை கை யெழுத்து செய்ய மாட்டேனென்று மறுத்து விட்டேன். ஆனல் சுப்பராய முதலியார் என்னை மிகவும் கேட்டுக்கொண் டமையால் நான் உடன்பட்டு அதில் கையெழுத்து செய் யும்படி நேர்ந்தது.

8. இப்போது C. வேலாயுத முதலியாரும் A. தங்க வேலு முதலியாரும் ஐட்ஜஸ் ஸம்மனுக்கு ஆதாரமாக போட்ட ஜாயிண்டு அபிடெவிட்டை நான் வாசிக்கக்கேட்டு, மேற்படி விஷயமானது மறுபடி கேள்விக்கு வருகிறபடியால் மேற்கண்ட ஜாயிண்டு அபிடெவிட்டில் சொல்லிய விஷயங்களெல்லாம் சரியென்று நான் சொல்ல ஆவலுடையவனுய் யிருக்கிறேன்.

9. அட்வோகேட் ஜெனரல் முன்னிலையில் நடந்த நட வடிக்கைகளில் எனக்கு நோட்டீசு கொடுக்கப்படவில்லை. அதுகளால் நான் கட்டுப்பட்டவனல்ல. நான் வாதிகளுக்கு வாஸ்தவத்தில் அனுசரணையாய் இருந்தமையாலும் எனக்கு வேறு பற்றில்லாமையாலும், நான் (exparte) எக்ஸ்பார்டியாய் இருந்தேன். இப்போது வியாஜியத்தை நடத்தவேண்டு மென்று விரும்புகிற வேலாயுத முதலியார் தங்கவேலு முதலி யார் அவர்களை (Support) ஆதரவு செய்கிறேன்.

10. ப்ளெயிண்டில் சொல்லிய வாதிகளின் பாத்திய தையை (Claim) சந்தேகமில்லாமல் ஸ்தாபிக்க கூடுமென்பதும் ராஜி செய்வது மிக அனுவசியகமென்பதும் என்னுடைய அபிப்பிராயம்.

11. தருமத்தின் நன்மைக்கு இந்த ராஜியானது மிக இடஞ்சல். ஏனெனில், இதனால் 300 சதுரடி மிக விலையுள்ள நிலம் தருமத்திற்கு நஷ்டமாகிறது. 3-வது பிரதிவாதிக்கு ரூபா 2000 கொடுப்பதற்கு யாதொரு அவசியமுமில்லை.

1918ஹு நவம்பர்மீ 22உ மதராஸ் ஐகோர்டு ரிஜிஸ்ட்ரார் ஆபிசில் என் முன்னிலையில் டிபோனென்டு (deponent)க்கு இங்கிலீஷ் தெரியாததால் அவருக்கு இதிலுள்ளவை களை உண்மையாயும் செவிகேட்கும்படி வாசிக்கப்பட்டு அவர் அறியும்படி தமிழில் அவருக்கு எக்ஸ்ப்ளெயின் செய்து அவர் செவ்வையாய் அறிந்துகொண்டவராக அவரால் பிரமாணமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

(சைண்டு) V. கேங்காதர முதலியார்.

(சைண்டு) V. ராமசாமி அய்யர்,
2-வது பிரதிவாதி வக்கீல்.

(சைண்டு) N கிருஷ்ணசாமி,
அஸிஸ்டெண்டு இன்டர்ப்ரடர் அண்டு கமிஷனர்.

# சதா ஏகாம்பர முதலியார் அபிடெவிட்டு

## மதராஸ் ஐகோர்ட் ஆப் ஜுடிகேசரில் ஆர்டினரி ஒரிஜினல் சிவில் ஜுரிஸ்டிக்ஷன் ஸி. எஸ். நே. 97 ஆப் 1918.

பிட்வீன் :

C. சொக்கலிங்க முதலியார், அண்டு மற்றொருவர், } வாதிகள்.

அண்டு

V. சோமசுந்திர முதலியார், அண்டு மற்றவர்கள், } பிரதிவாதிகள்.

C. வேலாயுத முதலியார், அண்டு மற்றொருவர். } மனுதாரர்கள்.

நான் சதா ஏகாம்பர முதலி, லோகநாத முதலியார் குமாரன், சோழிய வேளாளர், 70-வயது, வியசாயி, குடியிருப்பு செங்கற்பட்டு ஜில்லா, பொன்னேரி தாலூக்கா, 14 நெ. வெள்ளிவாயல் கிராமம், பிரமாணமாயும், உண்மையாயும், உறுதியாயும் சொல்வது யாதெனில் :—

1. இந்த வியாஜியத்திற்கு சம்மந்தப்பட்ட பார்ட்டிகளின் மரபாகிய சோழிய வேளாள மரபுக்கு நான் தலைமை பூண்டவன்.

2. வியாஜியத்தில் வாதிகளுக்காவது, வியாஜியத்தை நடத்தும்படி மரபாரால் ஏற்படுத்தப்பட்ட கமிட்டிக்காவது, என்னை யோசிக்காமலாவது, அல்லது மரபின் பகுஜனத்தாரையாவது யோசிக்காமலாவது, ராஜி செய்ய அதிகாரம் கிடையாது.

3. என்னுடன் ஆலோசனை செய்யவில்லை. இந்த வியாஜி யத்தில் ஏற்படுத்திக்கொண்ட ராஜியையும் எனக்கு தெரி விக்கவில்லை.

4. ராஜினுமா ஏற்பாட்டின் ஷரத்துகளை இன்று நான் தெரியவந்தேன். அந்த ஷரத்துகள் தருமத்திற்கு கெடுதி யானவை. நான் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

1918ளு நவம்பர்மீ 26உ மதராஸ் ஐகோர்டு ரிஜிஸ்ட்ரார் ஆபிசில் என் முன்னிலையில் டிக்லேரெண்டு (declarant)க்கு இங்கிலீஷ் தெரியாததால் அவருக்கு இதிலுள்ளவை களை உண்மையாயும் செவிகேட்கும்படி தமிழில் வாசிக் கப்பட்டு அவர் செவ்வையாய் அறிந்துகொண்டவராக அவரால் பிரமாணமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டு என் முன்னிலையில் கையெழுத்து செய்யப்பட்டது.

(தமிழில் கையெழுத்து)
சதா ஏகாம்பர முதலி.

என் முன்பாக,
(சைண்டு) A. கோபால் ரெட்டி,
கமிஷனர்.

என்னால் எக்ஸ்ப்ளெயின் செய்யப்பட்டது.
(சைண்டு) கோபால் ரெட்டி,
அஸிஸ்டெண்டு இன்டர்பிரட்டர்.